# செம்மணி

நிலம் 01 துகள் 05 வள்ளுவர் ஆண்டு 2051 ஆவணி 15 - 21 வாரமலர் பக்கங்கள் 24 விலை ரூபா 50/-



## அஞ்சாத நரி நான்!

பனங்காட்டு நரி சல சலப்புக்கு அஞ்சாது என்று முன்பொரு தடைவை கூறியிருந்தார் முன்னாள் நீதியரசரும் வடமாகாண சபையின் முன்னாள் முதல்வரும் தற்போது தமிழ் மக்கள் தேசியக் கூட்டணி சார்பாக நாடாளுமன்ற உறுப்பினராகிவிட்டவருமான சி.வி.விக்கினேஸ்வரன்.

தமிழ்த் தேசியம் என்கிற வாக்கு அரசியல் சலசலப்புக்கு அவர் இப்போது அஞ்சுகிறாரோ என்று எண்ணுகிற வகையில் அவரது முதலாவது நாடாளுமன்றப் பயணம் தொடர்பான செய்திகள் வருகின்றன.

வடக்கு மாகாண சபை முதலமைச்சராகத் தெரிவு செய்யப்பட்ட உடனே அப்போதைய அதிபரான மகிந்த ராஜபக்சவின் முன்பாகத் தனதும் சம்பந்திகளதும் குடும்பத்தினருடன் மட்டுமே பதவியேற்றுக்கொண்டவர் விக்னேஸ்வரன். (02ஆம் பக்கம் பார்க்க)

## அமைதியடைந்த தலைமை மோதல்!

பொதுத் தேர்தலில் கட்சிக்கு ஏற்பட்ட பின்னடைவு, தலைவருக்கு ஏற்பட்ட தோல்வி என்பவற்றை அடுத்து தமிழ் அரசுக் கட்சியின் தலைமைப் பதவி ஆட்டம் கண்டுவிடுமோ என்கிற அச்சம் வளர்ந்துவந்த நிலையில் அதற்கொரு முற்றுப் புள்ளி வைக்கப்பட்டிருக்கிறது ஓரிரு நாள்களின் முன்னர். ஆனாலும் தேர்தலில் வெற்றிபெற்ற கையோடு கட்சியின் ஆணிவேரையே அசைத்துப் பார்த்திருக்கிறார்கள் நாடாளுமன்ற உறுப்பினர்களான எம்.ஏ.சுமந்திர (02ஆம் பக்கம் பார்க்க)



## முன்னணிக்குள்ளும் முரண்பாடுகள் குத்தாட்டம்!

உட்கட்சி மோதல் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைக் கடந்து தமிழ்த் தேசிய மக்கள் முன்னணிக்குள்ளும் நுழைந்துவிட்டது. கட்சியின் தேசிய அமைப்பாளராக இருந்தவரான வழக்குரைஞர் வி.மணிவண்ணன் பொதுத் தேர்தலைத் தொடர்ந்து கட்சிக்குள் ஓரங்கட்டப்பட்டு வருகின்றார் என்று அவரது ஆதரவாளர்கள் முகப் புத்தகத்தில் (பேஸ்புக்) கொந்தளிக்கத் தொடங்கியுள்ளார்கள்.

பொதுத் தேர்தலுக்கு முன்பே கட்சிக்குள் மணிவண்ணன் அணி, செ.கஜேந்திரன் அணி என இரு பிரிவுகள் உருவாகிவிட்டன என்கிற அரசல் (02ஆம் பக்கம் பார்க்க)



## முள்ளிவாய்க்கால் தொடக்கம் எதற்காக?

முள்ளிவாய்க்காலில் இருந்து தமது அரசியல் பயணத்தைத் தொடங்குகின்றோம் என்கிற புதிய பாணியை தமிழ் அரசியல்வாதிகள் தொடங்கியிருக்கிறார்கள். தமிழ்த் தேசியத்தை மூலதனமாகக் கொண்டு இவர்கள் நடத்திய அரசியலை உதறிவிட்டு மாற்று அரசியல் தெரிவின் பக்கம் மக்கள் நகரத் தொடங்கியிருப்பதைப் பொதுத் தேர்தல் முடிவுகள் வெளிக்காட்டியுள்ளதை அடுத்து, முள்ளிவாய்க்கால் அரசியல் முழக்கங்கள் தொடங்கியிருக்கின்றன.

தனி நாடு கேட்டுப் போராடிய தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்துடன் சேர்ந்து அவர்களை ஆதரித்து, போராட்டத்தோடு இரண்டறக் கலந்துகிடந்த மக்கள் கூட்டமே முள்ளிவாய்க்காலில் தமது இன்னுயிர்களை ஆகுதியாக்கியது. சாகும் வரைக்கும் அவர்களின் கனவுகளில் இருந்தது எல்லாம் தனிநாடு என்கிற தமிழீழமே. அப்படியிருக்க வாழ்க்கையில் இனியொருபோதும் தனித் தமிழ்நாடு கேட்கவே மாட்டோம் என்று சத்தியம் செய்யாத குறையாக அரசியல் செய்யும் கட்சிகள் முள்ளிவாய்க்காலில் இருந்து தமது அரசியல் பயணத்தைத் தொடங்குவதற்குரிய நோக்கம் என்ன என்பதைத் தெளிவுபடுத்தினால் நன்றாயிருக்கும்.

கொல்லப்பட்ட மக்களுக்கு நீதி கேட்பதும், நடந்தது ஒரு இனப்படுகொலை என்று நிரூபிப்பதும் எதிர்காலத் தமிழ் அரசியலின் செல்நெறியாக இருக்கும் என்பதற்கான குறியீடுதான் முள்ளிவாய்க்கால் (02ஆம் பக்கம் பார்க்க)

## தமிழ், முஸ்லிம்களுக்கு ஒரு குடும்பத்தைவிடவும் குறைவான அமைச்சுக்களே!



பொதுத் தேர்தலில் மூன்றிலிரண்டு பெரும்பான்மையுடன் வெற்றிபெற்ற பொது ஜன பெரமுனவின் (மொட்டுக் கட்சி) புதிய அமைச்சரவை பதவியேற்றுக் கொண்டுள்ளது. அமைச்சரவை மதிப்பு வழங்கப்பட்ட 25 பேருக்கும் துணை அமைச்சர்கள் 39 பேருக்கும் பதவி வழங்கப்பட்டுள்ளது. அவர்களில் நான்கு பேர் மட்டுமே தமிழ், முஸ்லிம் இனங்களைச் சேர்ந்தவர்கள். வடக்கு தமிழர் ஒருவருக்கு மட்டுமே அமைச்சரவை மதிப்புள்ள அமைச்சு வழங்கப்பட்டுள்ளது. கிழக்குத் தமிழருக்கும் மலையகத் தமிழருக்கும் துணை அமைச்சுப் (02ஆம் பக்கம் பார்க்க)



# செம்மண்

வாரப் பத்திரிகை
551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
மின்னஞ்சல்: shemman.redsoil@gmail.com
தொடர்பு எண்: 021 492 7781
உரிமை மற்றும் வெளியீடு: கிறீன் மீடியா கவுஸ் பிரை. லிட்

ஆசிரியர்: தே.பிரேமானந்த்
துணை ஆசிரியர்: ந.ஜெயதாஸ்


## புதிய வழிகளை தேடுவது அவசியம்

புதிய ஆட்சியாளர்கள் அதிகாரத்தைப் பொறுப்பேற்றுள்ளனர். புதிய அமைச்சரவை நியமிக்கப்பட்டுள்ளது. நாடு இப்போது மீண்டும் ராஜபக்ச குடும்பத்திடம் மக்களாட்சித் தத்துவங்களின் உன்னதமான வழிமுறைகள் ஊடகக் கையளிக்கப்பட்டுள்ளது. தெளிவான திட்டமிடல்கள், இனவாதத் தூண்டல்கள் என்பவற்றின் ஊடாக வெற்றியை ராஜபக்ச குடும்பம் தெளிவாக அறுவடை செய்துள்ளார்கள். இனி 5 ஆண்டுகளுக்கு யாரும் எதுவும் முணுமுணுக்கக்கூட முடியாத பலத்தோடு அதிகாரங்கள் ஒரு குடும்பத்திடம் ஒப்படைக்கப்பட்டிருக்கின்றன. நாட்டின் சக்திமிக்க 5 அமைச்சுக்கள் அந்தக் குடும்பத்தின் வசம் உள்ளன.

ராஜபக்சக்களின் இந்த வெற்றியையும் சிங்கள மக்கள் வழங்கியுள்ள இந்த ஆணையையும் வெறும் இனவாதக் கண்ணோட்டத்தோடு மட்டும் அணுகிவிட முடியாது. போர் முடிந்து 10 ஆண்டுகள் கடந்துவிட்டபோதும் நாடு போதிய அபிவிருத்தியை, பொருளாதார மேம்பாட்டை, வாழ்க்கைத்தர உயர்வை அடையவில்லை என்று கருதும் சிங்கள மக்கள் அதனைத் தமக்குப் பெற்றுத் தரக்கூடிய ஒரே தலைமையாக ராஜபக்சக்களை அடையாளப்படுத்துகிறார்கள் என்பது மிக முக்கியமாகக் கவனத்தில்கொள்ளப்படவேண்டும்.

21ஆம் நூற்றாண்டுக்குரிய இலங்கையைத் தலைமை தாங்கிச் செல்லக்கூடிய மிகச் சிறந்த தலைவராகக் கோத்தாபய ராஜபக்சவைச் சிங்கள மக்கள் இனம்காண்பதற்குப் பின்னால் அவர்களுக்குத் தமது வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதில் உள்ள அதீத நாட்டம் முக்கியமானது. அபிவிருத்தி வேண்டும் என்று வேணவாக்கொண்டுள்ள சிங்கள மக்களும் அபிவிருத்தி மூலமான பொருளாதார வளர்ச்சிக்கூடாகவே எல்லாப் பிரச்சினைகளையும் தீர்க்க முடியும் என்று அணுகும் தலைமையும் ஒன்று சேர்ந்திருக்கக்கூடிய புள்ளியாகவே இந்தத் தேர்தல் முடிவுகளை அணுகவேண்டும்.

இந்த இரண்டு போக்குகளும் ஒன்றிணைந்திருக்கும் தருணத்தில் அபிவிருத்தி நோக்கிய இலங்கையின் பயணம் அடுத்த 5 வருடங்களில் இரட்டிப்பு வேகத்தை அடையும் என்பதில் ஐயமில்லை. உலகம் முழுவதும் குறிப்பாக தெற்காசிய, ஆசிய நாடுகளில் அபிவிருத்தி என்பது திடீர் பணவரவு உயர்ச்சியை மட்டுமே அடிப்படைக் குறிகாட்டியாகக் கொண்டிருக்கின்றது. பல விடயங்களையும் புறந்தள்ளி, அக்கறைக்குரிய பலவற்றையும் மிதித்துத் துவம்சம் செய்தே இந்த விரைவு அபிவிருத்தியைப் பெறமுடியும். எனவே இலங்கை மக்களும் அடுத்துவரும் வருடங்களில் அதற்குத் தயாராகவேண்டும்.

இந்த அபிவிருத்தியில் நிச்சயமாக வடக்கு, கிழக்கும் அசுர வேகத்தில் உள்வாங்கப்படும். கோழியையும் ஆட்டையும் கேட்டு யாரும் அவற்றை அறுப்பதில்லை என்பதைப்போல வரப்போகும் அபிவிருத்தியில் தமிழ், முஸ்லிம் மக்களின் கரிசனைகள், அக்கறைகள் கவனத்தில் கொள்ளப்படப்போவதில்லை என்பது வெள்ளிடைமலை. போர் முடிந்த கையோடு மடைதிறந்த பூகோளமயமாக்கல் நுகர்வுப், பண்பாடு என்பவற்றால் தமிழ் இளம் சந்ததி ஆர்க்கசிக்கப்பட்டதைப்போன்றதொரு நிலை இந்த அபிவிருத்தியின் ஊடாகவும் வரும்.

கடந்த 10 ஆண்டுகளில் தாக்கிய அந்த அலையையே தாங்கமுடியாமல் துவண்டுவிட்ட தமிழ்த் தேசிய அரசியலும் விடுதலைப் பயணமும் அடுத்த அலையைத் தாங்கி எதிர்த்து நின்று உரிமைப் போராட்டத்தை முன்னெடுப்பது மிகப் பெரும் சவால். இன்றைய தலைவர்களும் அவர்கள்தம் பழமைவாத, செல்லாக்காசாகிப்போன, இளைஞர்களைக் கவராத அரசியல் அணுகுமுறைகளும் அந்தச் சவாலை எதிர்கொள்வதற்குப் போதுமானவையல்ல. புதிய வினைத்திறனுள்ள தலைமைகளை அடையாளம் கண்டு வளர்ப்பதும் புதிய வழிமுறைகளைத் தேடுவதும் முக்கியமானது. அதைச் செய்யாவிட்டால் உரிமையும் விடுதலையும் அபிவிருத்தி மாயைக்குள் கரைந்து காணாமல்போய்விடும் ஆபத்து உண்டு.

## முள்ளிவாய்க்கால்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வணக்கங்கள் என்று அவர்கள் சொல்வார்களானால் இந்த இரண்டையும் செய்து முடிப்பதற்கு அவர்களுக்கு எவ்வளவு கால அவகாசம் வேண்டும் என்பதையும் அவர்கள் தெளிவுபடுத்திவிடுவது நல்லது. மக்கள் தெளிவாக இருப்பார்கள் இல்லையா.

அப்படித் தெளிவுபடுத்தாது விட்டால் தமிழ்த் தேசியக் கூட்ட மைப்பிடம் 10 வருடங்களாக ஏமாந்துபோனதைப்போலவே இவர்களிடமும் ஏமாந்துபோய் விடக்கூடிய நிலை வந்துவிடுமல்லவா. எனவே மக்களைச் சிரமப்படுத்தாமல், முள்ளிவாய்க்காலில் இருந்து தொடங்கும் தமது அரசியல் பயணத்தின் நோக்கம் என்ன என்பதை அவர்கள் அறிவிப்பார்கள் என்று எதிர்பார்ப்போம்!

## தமிழ்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பதவிகள் வழங்கப்பட்டுள்ளன. நெருக்கடியான நிலையிலும் தம்மோடு கூடவே நின்ற முஸ்லிம் ஒருவருக்கும் அமைச்சரவை மதிப்புள்ள அமைச்சுப் பதவியை வழங்கியிருக்கிறார்கள். ஆனால், ராஜபக்ச குடும்பத்திற்குள் மட்டும் 5 பேருக்கு அமைச்சரவை மதிப்புள்ள அமைச்சுக்கள் வழங்கப்பட்டுள்ளன. இலங்கையின் அண்மைக்கால வரலாற்றிலேயே தமிழ், முஸ்லிம் பிரதிநிதிகளுக்கு ஆகக் குறைவான அமைச்சுக்கள் வழங்கப்பட்டுள்ள ஒரே ஆட்சி இதுதான். கடந்த காலத் தவறுகளை மீண்டும் செய்யமாட்டோம் என்று பசில் ராஜபக்ச அடிக்கடி சொல்லிக் கொண்டது இதைதானா?

## அமைதியடைந்த...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

னும் எஸ்.சிறிதரனும்.

கட்சித் தலைவரான மாவை சேனாதிராசா செயற்றிறன் அற்றவர், கட்சிக்குள் ஏற்படும் பிணக்குகளையும் உள் சண்டைகளையும் சரிவரக் கையாளத் தெரியாதவர் என்பன போன்ற கருத்துருவாக்கங்கள் கடந்த சில ஆண்டுகளாக வெளிப்படையாகவே முன்வைக்கப்பட்டு வந்தன. கட்சிக்கு வெளியிலிருந்து மட்டுமல்லாமல் கட்சிக்கு உள்ளே இருந்தும் இந்தக் கருத்துக்கள் வெளிப்படுத்தப்பட்டன.

தேர்தல் முடிவுகளின் பின்னர் சுமந்திரனின் வெற்றி தொடர்பில் ஏற்பட்ட சர்ச்சைகளைக் கட்சித் தலைவராக மாவை சேனாதிராசா கையாண்ட விதம் மற்றும் தேர்தலுக்கு முன்பாகச் சுமந்திரன் தெரிவித்த கருத்துக்களால் ஏற்பட்ட கடுமையான விமர்சனங்கள் ஆகியவற்றின் போதும் அவர் நடந்து கொண்ட விதம் என்பன, தேர்தல் தோல்வியின் பின்னர் அவரது கழுத்தைக் குறிபார்த்த கத்திகளாக மாறின.

கட்சித் தலைமையை இப்போது மாற்றத் தேவையேதும் ஏற்படவில்லை, ஆனால் எல்லோரும் சேர்ந்துகொடுத்தால் அதனை ஏற்கத் தயார் என்று சிறிதரனும் அப்படியொரு நிலைவந்தால் அதைத் தானும் ஆதரித்துத்தானேயாக வேண்டும் என்று சுமந்திரனும் சொல்லப்போக இருவரும் சேர்ந்து கட்சியைக் கைப்பற்றப்பார்க்கிறார்கள் என்கிற விமர்சனமாக அது விஸ்வரூபம் எடுத்தது.

இருந்தாலும் இந்த முயற்சிக்கு கட்சிக்குள்ளேயே பெரும் ஆதரவு ஏதும் இல்லாத நிலையில் பிரச்சினை மெல்ல அப்படியே அணைக்கப்பட்டுவிட்டது.

தமிழ் அரசுக் கட்சியைப் பொறுத்தவரையில் அதற்குள் இருப்பவர்களின் பிரச்சினையை விட மற்றைய கட்சியினர் இதன் உள்வீட்டுப் பிரச்சினைக்குள் நுழைந்து வாய்ப்பைப் பயன்படுத்திக் கட்சியைச் சர்வநாசம் செய்துவிடத் துடிப்போடு நிற்கிறார்கள்.

அரசியல் களத்திலே தமது கொள்கைகளாலும் கோட்பாடுகளாலும் தமிழ் அரசுக் கட்சியை எதிர்த்து மக்களிடம் செல்ல முடியாத கையாலாகத்தனமே இது. எதிரணியினர் இந்த மோசமான அரசியல் பண்பாட்டைக் கைவிட்டு அரசியலை அரசியலால் எதிர்கொள்ளும் 'ஜென்டில்மேன்'களாக வளர வேண்டும்.

## அஞ்சாத நரி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இப்போது முள்ளிவாய்க்காலில் உயிர்த்தியாகம் செய்த மக்களுக்கு அஞ்சலி செலுத்தி, அங்கே உறுதியுரை ஏற்று அவர் தனது நாடாளுமன்றப் பயணத்தைத் தொடக்கினார் என்று அவரது தரப்பு செய்திகளை வெளியிட்டுள்ளது. ஆனால், என்ன உறுதியுரை ஏற்றார் என்பது தொடர்பில் எந்தத் தகவலும் இல்லை.

சொகுசுக் காரில் வந்திறங்கித் தன்னுடைய மென் பாதங்களிலிருந்து பாதணிகளை அகற்றி, ஒருவர் குடைபிடித்தபடி ஓடிவர, விக்கினேஸ்வரன் சம்பவ இடத்தில் காட்சிதந்தருளிய விதமும், சுரேஷ்பிரேமச்சந்திரன், சிவாஜிலிங்கம், அனந்தி சசிதரன் உள்ளிட்டவர்கள் அவரைப் புடைசூழ்ந்து நிற்க அவர் தீபம் ஏற்றிய விதம் மாகாண சபைத் தேர்தலைப் பிரகாசமாக்கியது. அவரது இந்த நடவடிக்கை தமிழ் மக்களின் உணர்வைத் தூண்டியதா? தட்டி யெழுப்பியதா? என்பதற்குக் காலம் விரைவில் பதில் சொல்லும்.

## முன்னணிக்குள்ளும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)


புரசலான கதைகள் வெளியாகி வந்தன. கட்சியின் உள்ளூராட்சிமன்ற உறுப்பினர்களே இந்த அணி மோதல் குறித்துக் கவலையடையும் அளவிற்கு அதன் தாக்கம் வலுவானதாக இருந்தது.

தேர்தல் முடிந்த கையோடு கட்சிக்குக் கிடைத்த ஒரேயொரு தேசியப்பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினர் வாய்ப்பையும் செயலாளர் கஜேந்திரனுக்குக் கொடுத்ததில் ஏற்பட்ட மனக்கசப்புக்கள் விரிவாக்கம் கண்டு மணிவண்ணன் தேசிய அமைப்பாளர் பதவியில் இருந்தும் பேச்சாளர் பதவியில் இருந்தும் நீக்கப்பட்டார் என்று கதைகள் பரவத்தொடங்கியுள்ளன.

இது தொடர்பில் கட்சி உத்தியோகபூர்வமாக எதனையும் அறிவிக்கவில்லை என்றாலும் முகப் புத்தகத்தில் தேர்தலுக்குப் பின்பான விறுவிறுப்பாக இந்த விவகாரமே கடந்த சில நாள்களாகப் பேசப்பட்டு வருகின்றது. எந்தச் சமூக ஊடகத்தைப் பயன்படுத்தி மற்றைய கட்சிகளின் மீது முன்னணி ஆதரவாளர்கள் சேறடிப்பையும் பொய் புரட்டுக்களையும் பரப்பினார்களோ அதுவே இப்போது அவர்கள் பக்கமும் திரும்பி நிற்கின்றது. இது எவ்வளவுதூரம் போய் நிற்கும் என்பதில்தான் அந்தக் கட்சியின் எதிர்காலம் தங்கியுள்ளது.

# கொள்கைத் திட்டம் என்னவாயிற்று?

2019 கார்த்திகை மாதம் 16ஆம் நாள் நடந்த அதிபர் தேர்தலில் வெற்றிபெற்று இரு நாள்களின் பின்னர் அனுராதபுரத்தில் கோத்தாபய ராஜபக்ச பதவியேற்றுக்கொண்டார். பொதுத் தேர்தல் வெற்றிக்கான முன்னறிவிப்பாகப் பார்க்கப்பட்ட இந்த வெற்றியைத் தொடர்ந்து ஆட்சி மாற்றம் நிகழ்ந்தது. மகிந்த ராஜபக்ச மீண்டும் தலைமை அமைச்சராகப் பொறுப்பெடுத்துக்கொண்டார். இதைத் தொடர்ந்து மார்கழி மாத



நடுப்பகுதியில் ஆட்சியாளர்களால் 10 அம்சங்களைக் கொண்ட தேசியக் கொள்கைச் சட்டகம் ஒன்று வெளியிடப்பட்டது.

புதிய அரசமைப்பு ஒன்றை உருவாக்குதல், தேசியப் பாதுகாப்பை பலப்படுத்துதல், நட்புறவுடன்கூடிய அணிசேரா அயலுறவுக் கொள்கை, லஞ்ச ஊழலற்ற பொதுத்துறை நிர்வாகம், மக்களை மையப்படுத்திய பொருளாதார மேம்பாடு என்ற விடயங்கள் உள்ளிட்ட இந்தப் 10 அம்சங்களில் சிலவற்றைச் செய்வதற்கு ஆட்சியாளர்கள் கடந்த 8 மாதங்களில் நடவடிக்கை எடுத்தார்கள். ஏனையசில வற்றை இந்தப் புதிய நாடாளுமன்றத்தின் மூலம் செய்வதாக வாக்களித்தார்கள்.

ஆனால், தேசியக் கொள்கைச் சட்டகத்தில் திட்டவட்டமான கால வரையறையோடு சொல்லப்பட்ட ஒரு விடயம் குறித்து மட்டும் இதுவரையில் எந்த நடவடிக்கையும் இல்லை. அரசும் அது பற்றி மூச்சுவிடவுமில்லை. இனியாவது அது நடக்குமா என்பது பற்றித் தகவல்கள் எவையும் தெரிவிக்கப்படவுமில்லை. பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் நீண்டகாலமாகச் சிறைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்கள் பற்றிய விவகாரம் அது.

பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் நீண்டகாலமாகச் சிறைகளில் வாடும் எல்லோரையும் ஒன்றில் விடுவிப்பதற்கு அல்லது தண்டனை பெற்றுக்கொடுப்பதற்கு மூன்று மாதங்களுக்குள் நடவடிக்கை எடுக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டிருந்தது. ஆனால் அது தொடர்பில் எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. கொரோனாவை இதற்குக் காரணமாகச் சொல்ல முடியாது.

கொரோனா மார்ச் மாதத்தில் நாட்டை முடக்குவதற்கு முன்னரே வாக்குறுதியளிக்கப்பட்ட மூன்று மாத காலப்பகுதி முடிவடைந்துவிட்டது. இப்போதோ 8 மாதங்கள் கடந்துவிட்டன. கொரோனா அச்சுறுத்தலுக்கு மத்தியில் பொதுத் தேர்தலையே நடத்தி முடித்தாகிவிட்டது. இந்த நிலையில் அரசியல் கைதிகளை விடுவிப்பதற்கு மட்டும் இவையெல்லாம் சாட்டாக அமைய முடியாது.

அவர்களுக்கு இனியாவது விடுதலை கிடைக்குமா? அவர்களுக்கு விடுதலை பெற்றுத் தருவேன் என்று வடக்கு கிழக்கில் மக்களிடம் வாக்குக்கேட்டு ஆட்சியிலும் பங்காளிகளாகி உள்ள அரசியல்வாதிகள் இது தொடர்பில் இனியாவது அதிபரிடமும் தலைமை அமைச்சரிடமும் வாய்விட்டுக் கேட்பார்களா?

# மண்கிண்டிமலையும் பறிபோனது



- ஜெரா -

வன்னிப் பெருநிலத்தின் இதயபூமியாகக் கொள்ளப்படும் மணலாற்றின் மையம் மண்கிண்டிமலை. ஈழப் போராட்டத்தின் மிக முக்கிய சாட்சியாகக் காணப்படும் இம்மலையானது, தன்னுள் ஆயிரக்கணக்கான போராளிகளின் கதையை வைத்திருக்கிறது. அடர்வனத்தின் நடுவில் மிக உயரமான மலையாகக் காணப்படும் இவ்வியற்கை அமைவிடத்தை கொக்கிளாய் கடல்நீரேரியும், வயல் நிலங்களும் அரண்செய்கின்றன. இம்மலையைச் சுற்றி கிட்டத்தட்ட 3,000 ஏக்கர் அளவிலான அடர்வனம் காணப்படுகின்றது.

**காடுகள் அழிக்கப்பட்டன**

கடந்த காலங்களில் இப்பகுதியில் இராணுவ முகாம் அமைந்திருந்தமையாலும், போர் சூனிய வலயமாகக் காணப்பட்டமையாலும் இங்கு பொதுமக்கள் யாரும் செல்வதில்லை. ஆயுதம் தாங்கியோர் மட்டும் உலவும் பகுதியாக இருந்தது. போர் முடிவுக்கு வந்ததும், அப்பகுதியைப் பூர்வீக



இடமாகக் கொண்ட தமிழ் மக்கள் குடியேற முன்னரே 1,500க்கும் மேற்பட்ட ஏக்கர் அளவு நிலத்தைக் கொண்ட காடுகள் 50 ஏக்கர்களாகப் பிரிக்கப்பட்டு, தெற்கை சேர்ந்த அரசியல்வாதிகளுக்கும், அரசியல் செல்வாக்குள்ளவர்களுக்கும் வழங்கப்பட்டன.

**குடியேறியவர்களாலும் வாழ முடியவில்லை**

அவ்வாறு காணிகளைப் பெற்றவர்கள் இயற்கை வளமாக இருந்த காட்டினை அழித்து புதிய வீடுகளை அமைத்துக் கொண்டதுடன், தென்னை, மா, பலா முதலான நீண்டகாலப் பயிர்களையும் பயிரிட்டுள்ளனர். குறித்த பகுதி அடர்வனமாக இருந்த படியால் அங்கு ஏற்கனவே தங்கிவாழ்ந்த காட்டு மிருகங்களின் அச்சுறுத்தல் நீடிக்க, குடியேறியவர்களாலும் நிரந்தரமாகத் தங்கியிருக்க முடியவில்லை. இதனால் காடுகளெங்கும் வீடுகளும், வேலிகளும் காட்சி தருகின்றன. பெருமளவிலான இயற்கை வள அழிப்பு இடம்பெற்றிருக்கிறது. இவ்வாறு மண்கிண்டி மலையிலிருந்து கோட்டைக்கேணி பிள்ளையார் ஆலயம் வரையிலான 3 கிலோ மீற்றர்கள் தூரம் வரை காடுகள் அழிக்கப்பட்டிருக்கின்றன.

**பிள்ளையார் ஆலயத்துள் புத்தர்**

முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள மிகத் தொன்மையான ஆலயங்களில் கோட்டைக்கேணி பிள்ளையார் ஆலயமும் ஒன்றாகும். போத்துக்கேயர் காலத்தில் கப்பலில் கொண்டுவரப்பட்ட சிலையை வைத்து, இவ்வாலயத்தை பெரிய ஆலயமாக அப்பிரதேச மக்கள் அமைத்தனர் எனச் செவிவழிக் கதைகள் உண்டு. பாரம்பரியமான வயல்களும், குளங்களும் அமைந்துள்ள பகுதியில் இருக்கும் இவ்வாலயத்தை போர் முடிந்தவுடன் மீளக்குடியேறிய மக்களால் தரிசிக்க முடியவில்லை. இராணுவம் ஆலயத்துக்கு செல்வதற்குத் தடைவிதித்திருந்தது. அப்பிரதேச மக்கள் ஆலயத்திற்கு செல்ல தடைவிதிக்கப்பட்டிருந்த காலப்பகுதியில் கோட்டைக்கேணி ஆலயத்திற்குரிய தீர்த்தக் கேணியில் புத்தர் சிலையொன்று நிறுவப்பட்டுள்ளது.

புத்தர் சிலை நிறுவப்பட்டதன் பின்னரே கோட்டைக்கேணி பிள்ளையார் ஆலயத்தை வழிபட அப்பிரதேச மக்கள் அனுமதிக்கப்பட்டனர். தமது ஆலயத்தின் தீர்த்தக் கேணியில் இன்னொரு மதப் பிரிவினருக்குரிய சிலை நிறுவப்பட்டுள்ளமையை எதிர்த்தபோதிலும் அந்த மக்களுக்கு நியாயமான பதில் கிடைக்கவில்லை. அதேவேளை ஆலயத்துக்குரிய கேணியைப் மறுசீரமைத்து, ஆலயச் சூழலை சீர்படுத்துவதற்கான அனுமதியையும் வனவளத் திணைக்களம் அந்தக் கிராம மக்களுக்கு வழங்கவில்லை.

**ஊறடிக் குளத்தை அழித்த குடியேற்றம்**

மண்கிண்டி மலைக்கு அண்மித்ததாகவே காணப்படுகிறது ஊறடிக்குளம் எனப்படும் கிராமம். மிகத் தொன்மையான குளமும், ஆரம்பகால குடியேற்றம் ஒன்றும் இருந்தமைக்கான தொல்லியல் ஆதாரங்களையும் கொண்டிருக்கிறது இந்தக் கிராமம். இன்றைய நிலையில் இக்கிராமம் காடாக மாறிவிட, இக்குளத்தைப் பயன்படுத்தி கருநாட்டுக்கேணி விவசாயிகள் 300 ஏக்கர் அளவிலான வயற் பிரதேசத்துக்கு நீர்ப்பாய்ச்சி, பயிர்ச்செய்கையில் ஈடுபட்டு வந்தனர். கடந்த ஆண்டின் (2019) தொடக்கப் பகுதியில் இப்பகுதியைத் தனது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவந்த மகாவலி அபிவிருத்தி அதிகாரசபை ஊறடிக்குளம் உள்ளிட்ட காட்டுப்பகுதியை அழித்து புதிய குடியேற்றத்திட்டமொன்றை செய்வதற்கான தொடக்கப் பணிகளில் ஈடுபட்டது. அதற்கான குள அணையை அழித்து குளம் மண்ணால் நிரவப்பட்டுள்ளதுடன், குறுக்காகப் பல வீதிகள் அமைக்கப்பட்டுள்ளன. மின்கம்பங்கள் நடப்பட்டுள்ளன. இங்கு காணப்பட்ட பண்டைக்கால கட்டடம் ஒன்று இடித்தழிக்கப்பட்டு, அதற்கு



மேலாகவும் வீதிகள் போடப்பட்டுள்ளன. அப்பகுதி முழுவதுமே பண்டைக்கால செங்கற்களின் எச்சங்களாலும், உடைந்த பண்டைக்கால மட்பாண்டங்களின் எச்சங்களாலும் சிதறிக் கிடக்கின்றன.

இக்குளத்தை நிரவியதன் காரணமாக அப்பகுதியில் 300 ஏக்கரளவில் நெற்பயிர்ச்செய்கையில் ஈடுபட்டு வந்த தமிழ் விவசாயிகள் பாதிக்கப்பட்டுள்ளனர். அங்கு பெரும்போக நெற் பயிர்ச்செய்கையே செய்யமுடியாத சூழல் உருவாகியுள்ளது.

நகரங்களுக்குள் நாம் முடங்கிக் கிடக்கையில் எமது எல்லைகள் பறிபோய்க்கொண்டிருக்கின்றன.

“ஈழப் போராட்டத்தின் மிக முக்கிய சாட்சியாகக் காணப்படும் இம்மலையானது, தன்னுள் ஆயிரக்கணக்கான போராளிகளின் கதையை வைத்திருக்கிறது.”

# அரசியல் தீர்வை இனி மறந்துவிடவேண்டியதுதான்!

## மக்களின் கருத்து

பொதுத் தேர்தல் முடிந்ததைத் தொடர்ந்து அரசியல் தலைவர்கள் அமைச்சுப் பதவிகளுக்கும் கட்சித் தலைமைப் பதவிகளுக்கும் அடிபட்டுக்கொண்டிருக்க சாதாரணர்கள் இந்தத் தேர்தல் முடிவை எப்படிப் பார்க்கிறார்கள் என்று அறிய முற்பட்டது செம்மண். நாம் சந்தித்தவர்களில் பெரும்பாலானவர்கள் தமிழர்கள் இனி அரசியல் தீர்வை மறந்துவிடவேண்டியதுதான் என்று விசனப்பட்டார்கள். இந்த நிலைக்காக கூட்டமைப்பு மீதான தமது கோபத்தையும் வெளிப்படுத்தினார்கள். இந்த நிலை நல்லதிற்குத்தான் சென்று சொல்பவர்களும் இல்லாமலில்லை.



**சிறி புஸ்பராட்ணம்**
*முச்சக்கரவண்டிச் சாரதி*
*இராசாவின் தோட்டம்*

இந்த முடிவால இனி வருங் காலங்களிலை நல்லது நடக்கும் என்டுதான் நினைக்கிறன். இலங்கை முழுதும் இனி நல்லதொரு நடமுறை வரும்.

தமிழ் மக்களைப் பொறுத்தவரையில எங்கட பிரச்சினையளும் தீரும்... இப்ப... எங்களுக் கொண்டு தீர்வொண்டு இல்லாட்டிலும், ஒரு நல்ல இயல்பு நிலை ஏற்படும். எங்கட மக்களின்ர அடிப்படைப் பிரச்சினையளைத் தீர்க்கக் கூடிய மாதிரி இருக்கும்.

எல்லாருக்கும் ஒரு சந்தர்ப்பத்த மக்கள் குடுத்திருக்கினம். இதை வைச்சு இனிவரும் காலங்களில தமிழ் மக்கள் என்னத்த எதிர்பார்க்கினமோ அதைச் செய்யக்கூடிய ஒரு வழி வகையத் தலைவர்கள் தேடவேணும். இதை வைச்சுக்கொண்டு அவையள்தான் இனித் தீர்மானிக்கவேணும், நாங்கள் என்னத்த மக்களுக்குச் செய்யப்போறம், என்ன மாதிரியான அரசியல் எதிர்காலத்த உருவாக்கப்போறம் எண்டு யோசிக்க வேணும்.

முன்னேற்றம் காணக்கூடிய முறையளச் செய்திச்சினம் எண்டாச் சனம் அவையத் தொடந்தும் வைச்சிருக்கும். என்னதானிருந்தாலும் அரசியல் தீர்வெண்டுறது இனி வராது. அபிவிருத்தி ஊடாகவும் பொருளாதாரத்தையும் ஆட்சியாளர்களோட இணைஞ்சும் எங்கள வளப்படுத்துறதுதான் இனிச் சரிவரும்.

முந்தி றெயினில கொழும்புக்குப் போகேக்க என்னதான் இறுக்கமான பொக்கெற்றத் தைச்சுப் பேர்ச வைச்சுக்கொண்டு போனாலும் கோட்டைக்கு போகேக்கிடையில அதை எப்பிடியாவது எடுத்துப்போடுவாங்கள். பிரேமதாச வந்ததும் அங்க கிடந்த எல்லாப் பொடி பெட்டையளுக்கும் வேலை குடுத்தார். சும்மா நிண்டவன் போனவன் எல்லாரையும் இராணுவத்திலையும், பணியாக்களாயும், அரச வேலையளுக்கும் எடுத்தார். களவு குறைஞ்சுபோச்சுது.

இஞ்சை சும்மா திரியுற பொடியள் கஞ்சா, மோட்டச் சைக்கிள், வாள்வெட்டு எண்டிருக்கிற எல்லாருக்கும் வேலையக் குடுத்து மாத்தவேணும். மாகாணசபையை வைச்சுக்கொண்டே நிறையச் செய்திருக்கலாம். ஆணையிறவு உப்பளம், சீநோர், காங்கேசன்துறைத் தொழிற்சாலை, அலுமினியத் தொழிற்சாலை அது இதுவெண்டு இஞ்சை கனக்கக் கிடக்கு. யாரிட்டையும் கையேந்த வேண்டியதில்ல.



**இறப்பியல் கில்பேர்ட்**
*கடற்றொழிலாளி*
*பாசையூர்*

இந்தத் தேர்தல் முடிவு பெரியதொரு விளைவை ஏற்படுத்தும். இனி அரசியல் தீர்வு என்டுறது சரிவராத விசயம். அதைப் பற்றிக் கதைக்கவே தேவையில்ல. அவக கதைக்கிற கதையப் பார்க்கபோன... இனி நீங்க... கூட்டமைப்பத் தமிழ் மக்களின்ர பிரதிநிதி இல்லையெண்டே சொல்லிப்போட்டான். உவையளால இனி ஒண்டும் செய்யேலாது. ஆனா இந்தக் கூட்டமைப்புப் பலமா இருந்திருந்தா ஒரளவில நாம, கொஞ்சம் தக்க வைச்சுக் கொண்டு ஏதாவது செய்து கொண்டு இருந்திருக்கலாம்.

ஆனாக் கூட்டமைப்பின்ர செயற்பாடுகள்தான் அவையின்ர வீழ்ச்சிக்கு முழுக் காரணம். அங்காலைப் பக்கம் ஆரு ஆட்சிக்கு வந்தாலும் எங்களுக்குக் கொழுக்கட்டையும் மோதகமும்போலத்தான். அதாலை அங்க வாறவையைப் பற்றி நாம கதைக்கத் தேவையில்ல.

இனித் தமிழ் மக்களின்ர நிலை பெரிய அலங்கோலமாத்தான் இருக்கும். ஏனென்டு சொன்னா இனி அவன் ஒண்டுக்கும் இணங்க மாட்டான். இருவது இருவத்தஞ்சு வருசம் வரைக்கும் அதுதான் நடக்கும். அதில எந்த மாற்றமும் இருக்காது.

இனிச் சஜித் ரணிலாக்கள் உடன்பட்டு ஒற்றுமையாப் போய்... மக்கள் மத்தியில நல்ல அபிப்பிராயத்தை ஏற்படுத்தி, ஒரு பொதுத் தேர்தல் வந்து... மக்கள் இவங்களைத் தெரிஞ்சு... அதுக்குப் பிறகு அவக நம்மளைப் போட்டுப் பேக் காட்டி... அது தாறம் இது தாறம் எண்டு கதை விட்டு... எப்பிடிப் பாத்தாலும் எங்கடை நிலமை கஸ்ரம்தான்.



**ஏ.எல்.அப்துல் மாஜித்**
*கல்முனை*

தேர்தலானது நீதி, நேர்மையுடன் நடந்தேறியுள்ளது என்று தேர்தல் கண்காணிப்பு அமைப்புகள் தெரிவித்துள்ளன. மூத்த ராஜதந்திரியான ஜயதிலக போன்ற பெரும்பான்மைச் சமூகப் அறிஞர்கள்கூட அமையப்போகும் அரசுக்கு மூன்றிலிரண்டு பெரும்பான்மை கிடைக்கக் கூடாதெனவும் அவ்வாறு கிடைத்தால் தங்கு தடையின்றி எதேச்சதிகாரம் நோக்கி அரசு பயணிக்கும் என்றும் அறிவித்திருந்தனர். இருப்பினும் சிங்கள மக்கள் மூன்றிலிரண்டு பெரும்பான்மையை வழங்கியுள்ளனர். இனிச் சிறுபான்மை இனங்களுக்கு எதிரான பல சட்டமூலங்களைக் கொண்டு வரக்கூடிய அச்சுறுத்தல்கள் உள்ளன.

இன்றைய அரசின் எதிர்காலப் பயணத்தைத் தெளிவாக எதிர்வுகூறக்கூடியதாக இருக்கிறது. தேர்தல் முடிந்த கையோடு கருத்து வெளியிட்ட ராஜாங்க அமைச்சர் சரத் வீரசேகர, பௌத்த - சிங்களக் கொள்கை நோக்கியே அரசு பயணிக்கும் என்று தெரிவித்துள்ளார். இந்தக் கருத்தின் உள் நோக்கப்படி பௌத்த - சிங்கள பேரினவாத மேலாதிக்கச் செயற்பாடுகள் இனி அதிகமடையலாம். தொல்லியல், மரபுரிமை எச்சங்கள் என்ற போர்வையில் சிறுபான்மைச் சமூகங்களுக்கு இடையூறளிப்பதுடன் இருப்பும் கேள்விக்குறியாகலாம். எனவே வடக்குக் கிழக்கு வாழ் தமிழ் - முஸ்லிம் மக்கள் தமக்கிடையேயுள்ள கருத்து - உள்ளக முரண்பாடுகளை ஒதுக்கி வைத்துவிட்டு, ஒன்றித்துப் பயணிப்பதன் மூலமே தமது இருப்பைப் பாதுகாப்பதுடன், எதிர்காலத்தில் தமது அரசியலபிலாசைகளையும் தக்க வைத்துக் கொள்ள முடியும்.



**சஞ்சீவன்**
*பண்டத்தரிப்பு*


இந்த எலெக்சன் தான் பெரிய மாற்றத்தை ஏற்படுத்தியிருக்குது. இனிக் கொஞ்ச வருசத்துக்கு எதைப் பற்றியும் கதைக்க முடியாதளவுக்கு அபிவிருத்தி, அபிவிருத்தி எண்டு மட்டும் சனங்களும் அரசியல்வாதிகளும் ஓடித் திரியத் தீர்வு தீர்வு எண்டு இழுத்துக்கொண்டு கிடந்த பழசுகள் போய்ச் சேர்ந்திடும். அடுத்தடுத்த எலக்சனுகளிலை வாக்களிக்கப்போற புதுசுகளுக்குச் சண்டைச் சத்தம் எண்டாலே என்ன வெண்டு தெரியாததுகளா இருக்க நாடு முன்னேறப்போகுது. இப்பிடித்தான் இனி வருங்காலத்தை நக்கலாச் சொல்ல முடியும். வேற என்னத்தச் சொல்ல.



**மயில்வாகனம் சுதர்சன்**
*அச்சக உரிமையாளர்*
*சுந்தரபுரம் - வவுனியா*

தேர்தல்ல இனவாதம், மதவாதம் என்ற விடயத்தை முன்னிறுத்தி கோத்தபாய தலைமையிலான ரீம் தனிப் பெரும்பான்மை பெற்றுள்ளது. வடக்குக் கிழக்கு மக்கள் அதிகளவில் வாக்களிச்சிருந்தாலும் தமிழ்த் தேசியத்தைத் தவிர்த்துத் தேசியக் கட்சியளுக்கு வாக்களிச்சிருக்கினம். இது தமிழ் மக்களின் இருப்புக்குத்தான் ஆபத்து. தாங்கள் தாண்டி வந்த துன்பங்களைப் பற்றி யோசிக்காமல் அதுக்குக் காரணமாக இருந்த தேசியக் கட்சியளுக்கு வாக்களிச்சிருக்கிறதால, இனம்சார்ந்த உரிமைகளை பெற்றுக்கொள்வது இனிச் சிக்கல்தான். அவையும் இனி அது பற்றிக் கதைக்கப்போறதில்ல. அபிவிருத்தியத்தான் கண்ணில காட்டுவினம்.

அதுவும் சரியாச் செய்யினமோ தெரியாது. தமிழ்மக்கள் சார்பாக வெற்றியடைஞ்சவர்கள் கட்சி பேதம் பாராமல் ஒற்றுமையுடன் இணைந்து தமிழ் மக்களின் நலன்களில் அக்கறை காட்ட வேணும்.



**பாலசிங்கம் ரவிந்தன்**
*குளிர்பான நிலைய*
*உரிமையாளர்*
*தெல்லிப்பழை*

நடந்து முடிஞ்ச தேர்தலில் தெற்கைப் பொறுத்த மட்டில் இதுதான் நடக்கும் என்ற எதிர்பார்ப்போடு தான் ராஜபக்சாக்கள் இருந்தவை. ஏன் என்றால் கடைசியா நடந்த ஜனாதிபதித் தேர்தலில் சிறுபான்மையினரின் ஆதரவு இன்றிக் கோத்தாபய ராஜபக்ச ஆட்சியைப் பிடிச்சார். அந்த நிலைமையில் தான் இந்தத் தேர்தலிலும் அவர்களது வெற்றி என்பது ஏற்கனவே உறுதி செய்யப்பட்டு விட்டது.

வடக்கைப் பொறுத்தமட்டில் தமிழர்களது ஏகப் பிரதிநிதிகள் என்று சொல்லிக்கொண்டிருந்த தமிழத் தேசியக் கூட்டமைப்பினர் பெரும் பின்னடைவைச் சந்திச்சிருக்கினம். அதுக்கு முக்கிய காரணம் கடந்த நல்லாட்சி அரசுத்துக்கு அவர்கள் கொடுத்த ஆதரவுதான்.

ஏனைய சில கட்சிகளில் இருந்து சிலர் நாடாளுமன்றுக்கு தெரிவாகியுள்ள னர். இம்முறை வெறுமனே உரிமைக்காகவோ அல்லது அபிவிருத்திக்காகவோ என்று நினைத் துத் தமிழ் மக்கள் வாக்களிக்கவில்லை. மாறாக அன்றாட தேவைகள் பூர்த்திசெய்யப்படவேண்டும், வேலைவாய்ப்புகள் ஏற்படுத்தப்படவேண்டும், அபிவிருத்தி தேவை என்ற ரீதியில் மாற்றுக் கட்சிகளுக்கு வாக்களித்து தமக்கு நம்பிக்கையானவர்களைப் பாராளுமன்றுக்கு அனுப்பியுள்ளனர்.



**ச.மனோகரலிங்கம்**
*ஆசிரியர்*

தேர்தல் முடிவடைந்துள்ளது. இதன் முடிவுகள் எதிர்பார்த்தபடியேதான் அமைந்துள்ளன. எனினும் பெரும்பான்மையினம் சார் தேசியக்கட்சி சார்பாகவும் அரசு சார்பாகவும் அரசு சார்ந்திருக்கும் கட்சிக்கும் வடக்கில் அளிக்கப்பட்டுள்ள வாக்குகளின் எண்ணிக்கை தொடர்பாக ஒவ்வொருவருமே அதிக கவனம் செலுத்தவேண்டியுள்ளது. இது எவ்வாறு நடந்துள்ளது என்பது தொடர்பாகவும் அவதானிக்க வேண்டியுள்ளது.

தமிழ்த் தேசியம் பேசிக்கொண்டிருப்போருக்கிடையிலான முரண் நிலைப்பாடுகள்தான் காரணம். அதிலும் ஒரே அணியில் களமிறங்கிய வர்களே தமக்குள் ஒருமித்திருக்கவில்லை. கருத்து வெளிப்பாடுகள் செயற்பாடுகள் திசைகொன்றாக இருந்து வாக்காளரிடையே கட்சிகள் சார்ந்த நம்பிக்கையீனத்தை உண்டாக்கியிருந்தன.

மேலும் தமிழ்த் தேசியம் பேசிய பிரதான மூன்று கட்சியினரும் அடுத்த கட்சிகளில் நம்பிக்கையீனத்தை கக்கியமையையும் குறிப்பிடலாம். அவை தொடர்பில் தேசிய நீக்கம் அபிருத்தியை விட அதீதமான அரசியல் நகர்வுகள் போன்ற வெளிப்பாடுகள் எதையாவது அடைய ஒரே வழி அரசு சார் ஆதரவுத் தளம் தான் எனும் விரக்தி நிலைப்பட்ட வாக்காளர் தெரிவு என்றே விளங்கிக்கொள்ள வேண்டியிருக்கிறது. இதில் கட்சித்தொண்டர்களின் நிலைப்பாட்டுச் செல்வாக்கும் உள்ளது. அவர்களது பின்புலம் நடவடிக்கைகள் பண்பு தொடர்பாகப் பெருமளவான வாக்கா ளருக்கு அபிவிருத்தி வேலைவாய்ப்பு என்ப தற்கப்பால் கட்சி - உரிமை - தேசியம் என எதை யும் சிந்திப்பதற்கான வழியை வழங்கவில்லை.

# கொரோனாவுக்கு தடுப்பு மருந்து வந்துவிட்டதா?

- தாஸ் -



மனிதர்கள் மீதான பரிசோதனைக்காக இரண்டு மாதங்களுக்கும் குறைவான காலப்பகுதியை எடுத்துக்கொண்ட கொரோனாத் தடுப்பூசி ஒன்றைத் தனது குடிமக்களுக்கு ஏற்றுவதற்கு அனுமதி அளித்துள்ளது ரஷ்யா. இதன் மூலம் கொரோனா வைரஸுக்குத் தடுப்பூசி கண்டறிந்து, அதை மக்களுக்கு ஏற்றுவதற்கு அனுமதியும் அளித்துவிட்ட முதல் நாடாக ரஷ்யா மாறியுள்ளது. ரஷ்ய அதிபர் விளாடிமிர் புடின் இந்தத் தகவலைக் கடந்த செவ்வாய்க்கிழமை அறிவித்தார். ஸ்புட்னிக் - வி என்று பெயரிடப்பட்ட அந்தத் தடுப்பூசியை 1957ஆம் ஆண்டில் ரஷ்யா ஏவிய ஸ்புட்னிக் செயற்கைக் கோள் வெற்றியுடனும் தொட்டுக்காட்டிப் பேசினார் புடின்.

**அவசரத் தயாரிப்பு இது?**

'ஸ்பூட்னிக் வி' என்று அழைக்கப்படும் இந்தத் தடுப்பூசி இன்னும் அதன் இறுதிக் கட்டச் சோதனைகளுக்கு உட்படுத்தப்படவில்லை. உரிய முறையில் சோதனைக் கட்டங்களுக்கு உட்பட்டு வந்திருக்கவில்லை என்பதால், அந்தத் தடுப்பூசியை மக்களுக்குச் செலுத்துவதற்குப் புடின் அனுமதி அளித்திருப்பது பலரிடத்தே கேள்விகளையும் கவலைகளையும் ஏற்படுத்தியுள்ளது.

அந்தத் தடுப்பூசி சுமார் 10 சதவீதம் வரையிலான மருத்துவப் பரிசோதனைகளுக்கு மட்டுமே உட்படுத்தப்பட்டுள்ளது என்று குறிப்பிடுகின்ற நிபுர்ணர்கள் சிலர், மக்களின் பாதுகாப்பைவிடத் தேசிய கௌரவத்தில் ரஷ்யா அக்கறையுடன் செயற்பட்டு வருவது பாதகங்களை ஏற்படுத்தக்கூடும் என்று சொல்கின்றனர்.



ஒழுங்கு முறையாகச் சோதனைக்கு உட்படுத்தப்படாத இந்தத் தடுப்பூசி மீது எவ்வாறு நம்பிக்கை வைப்பது என்றும் கேள்வி எழுப்புகின்றனர்.

இந்தத் தடுப்பு மருந்தைத் தயாரிப்பதற்கு ரஷ்யா காட்டிய வேகத்துக்கு மேற்குலக ஆய்வாளர்களில் பலரும்கூடக் கவலை வெளியிட்டனர். அரச மேலிடத்திலிருந்து கொடுக்கப்பட்ட அழுத்தம் காரணமாகச் சில நடைமுறைகளைப் புறந்தள்ளி இந்தத் தடுப்பு மருந்துத் தயாரிப்பில் ரஷ்ய ஆய்வாளர்கள் இவ்வளவு வேகம் காட்டியுள்ளனர் என்றும் பேச்சுகள் அடிபடுகின்றன.



**பரிசோதனை அமைப்பு காட்டம்**

மூன்றாம் கட்டப்பரிசோதனை என அறியப்படுகின்ற ஆயிரக்கணக்கான பங்கேற்பாளர்களை உள்ளடக்கிய சோதனைக்கு முன்பே ரஷ்யச் சுகாதார அமைச்சின் அனுமதி இந்தத் தடுப்பூசிக்கு வழங்கப்பட்டுள்ளது. எனவே இந்தச் சோதனை வெற்றிகரமாக முடிவடையும் வரை இந்தத் தடுப்பூசிக்கு அனுமதி வழங்குவதைப் பிற்போடுமாறு ரஷ்யாவின் சுகாதார அமைச்சகத்தை வலியுறுத்துகிறது ரஷ்யாவிலுள்ள உலகின் தலைசிறந்த மருந்து தயாரிப்பாளர்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் வர்த்தக அமைப்பான மருத்துவ பரிசோதனை அமைப்புகளின் சங்கம். இத்தகைய பரிசோதனையைச் செய்வதற்கு முன்பு இந்த மருந்துக்கு அனுமதி அளிப்பதில் அதிக ஆபத்துகள் இருக்கின்றன என்கிறது அது.

மருத்துவப் பரிசோதனை அமைப்புகளின் சங்கம் குறிப்பிடுகின்ற குறிப்பிட்ட பரிசோதனைக் கட்டத்தில்தான் ஒரு தடுப்பூசியின் செயல்திறனுக்கான முக்கிய சான்றுகள் சேகரிக்கப்படுகின்றனவாம். அத்துடன் அது ஏற்றப்பட்ட நோயாளிகளுக்குத் ஏற்படுத்தக்கூடிய பாதகமான எதிர்விளைவுகள் பற்றிய தகவல்களும் சேகரிக்கப்படுகின்றனவாம்.

**மற்றவர்கள் சொல்வதென்ன?**

இந்தத் தடுப்பூசிக்கு அனுமதியளிப்பதற்கு முன்னர் அதைச் செலுத்தி அதிக எண்ணிக்கையிலான நபர்கள் பரிசோதிக்கப்பட்டிருக்கவேண்டும் என்கிறது மருத்துவ உலகு. ஆனால், அவ்வாறு நடக்கவில்லை என்று ஜேர்மனியின் டூபிங்கன் நகரில் உள்ள பல்கலைக்கழக மருத்துவமனையைச் சேர்ந்த பீற்றர் கிரெம்ஸ்னர் என்கிற பரிசோதனையாளர் கூறுகிறார்.

தடுப்பூசி பெருமெடுப்பில் பயன்படுத்தப்படப்போகிறது என்பதற்கான எந்த ஆதாரங்களும் எங்களுக்குத் தேவையில்லை என்று அமெரிக்காவைச் சேர்ந்த தொற்று நோய்த்துறை நிபுணரான மருத்துவர் அந்தோனி ஃபசி கூறுகிறார். இந்தத் தடுப்பூசி பாதுகாப்பானது என்பதை ரஷ்யர்கள் நிரூபித்திருப்பார்கள் என்றே நம்புகின்றேன், என்று வெள்ளை மாளிகையின் கொரோனா வைரஸ் பணிக்குழுவின் உறுப்பினர்களில் ஒருவராகவும் இருக்கின்ற அந்தோனி ஃபாசி மேலும் கூறுகிறார். அதேநேரம், இந்த விடயத்தில் பாதுகாப்பு மிக முக்கியமானது என்றும், உரிய சோதனைகள் அவசியம் என்றும் அமெரிக்காவின் சுகாதாரச் செயலர் அலெக்ஸ் அசார் கூறுகிறார்.

**முற்றிலும் பாதுகாப்பானது**

நமது ஆராய்ச்சியாளர்கள் கண்டறிந்துள்ள இந்தத் தடுப்பூசி முற்றிலும் பாதுகாப்பானது என்று அதிபர் புடினும் ரஷ்யாவின் சுகாதார அதிகாரிகளும் தெரிவிக்கின்றனர். தடுப்பு மருந்து மிகவும் திறம்படச் செயல்படுகிறது என்றும் வலுவான நோய் எதிர்ப்பு சக்தியை உருவாக்குகிறது என்றும் அனைத்துச் சோதனைகளையும் அது கடந்துவிட்டது என்றும் கூறுகின்ற புடின், தனது மகள்களில் ஒருவர் தன்னைத் தன்னார்வலராகப் பதிவுசெய்து குறித்த தடுப்பூசியை எடுத்துக் கொண்டார் என்றும்கூடத் தெரிவித்தார். தனது மகள் நலமாக இருப்பதுடன் இந்தத் தடுப்பூசியால் முன்னேற்றத்தை உணர்கிறார் என்றும் கூறி, இந்த மருந்துக்குத் தான் அனுமதி அளித்ததற்கு வலுச் சேர்த்துள்ளார்.

**வணிக நோக்கம்**

ரஷ்யாவின் கமலேயா நிறுவனம் உருவாக்கியுள்ள இந்தத் தடுப்பு மருந்தின் உற்பத்தியை இந்த ஆண்டின் இறுதிக்குள் அதிகரித்துக் கொள்வதற்கு எதிர்பார்க்கிறார்கள் என்று ரஷ்யாவின் மற்றொரு வணிக நிறுவனமான சிஸ்டெமா கூறுகிறது. 1 பில்லியன் அளவு மருந்துக்கு உலக நாடுகளிடமிருந்து கேள்வி எழுந்துள்ளது என்று ரஷ்யாவின் நிதித் தலைவர் கிரில் டிமிட்ரிவ் தெரிவிக்கிறார். இந்தத் தடுப்பூசி பிரேசிலிலும் தயாரிக்கப்படுவதோடு ஐக்கிய அரபு இராச்சியம், பிலிப்பைன்ஸ் ஆகிய நாடுகளில் மருத்துவ பரிசோதனைகளுக்கும் உட்படுத்தப்படும் என்றும் டிமிட்ரிவ் கூறுகிறார்.



**எபோலாவின் அடிப்படையிலிருந்து...**

இந்தத் தடுப்பூசி இரண்டு அளவுகளில் நிர்வகிக்கப்படுகிறது. மனித அடினோவைரஸின் இரண்டு செரோடைப்களைக் கொண்டுள்ளது. ஒவ்வொன்றும் புதிய கொரோனா வைரஸின் எஸ் - அன்டிஜெனை உடலுக்குள் கொண்டு செல்கின்றன. அவை மனித உயிரணுக்களில் நுழைந்து நோயெதிர்ப்பு சக்தியை உருவாக்குகின்றன.

இந்தத் தடுப்பூசிக்குப் பயன்படுத்தப்படும் தளம் இரண்டு தசாப்தங்களாக ரஷ்ய அறிவியலாளர்களால் உருவாக்கப்பட்டது என்றும் எபோலா வைரஸுக்கு எதிரான மருந்துகள் உட்படக் கடந்த காலங்களில் பல தடுப்பூசிகளுக்கு அடிப்படையாக அமைந்தன என்றும் ரஷ்யா தெரிவிக்கிறது. இதன் மூலம் கொரோனாவால் பாதிக்கப்பட்டுள்ள ரஷ்யாவின் பொருளாதாரம் முன்னேற்றமடையும் என்று ரஷ்யா எதிர்பார்ப்பது தெரிந்தாலும், உலக நாடுகள் வசம் 20க்கும் மேற்பட்ட தடுப்பூசிகள் பரிசோதனைக் கட்டங்களில் இருந்தாலும், இதுவே கொரோனாவுக்கான உலகின் முதல் தடுப்பு மருந்து என்கிறார் புடின். அது உண்மையாகவும் இருக்கலாம்...?

# கிரேக்க சொல்லாடல் பயிற்சி போல் கவிஞர் சோபவுக்கு புராண வாசிப்பு

## யாழ். விருது பெற்ற பின்னர் அவருடன் ஒரு சந்திப்பு



மனிதநேயம், மொழி, சமயம், கலை, இலக்கியம், பண்பாடு சார்ந்த மறுமலர்ச்சிப் பணிகளில் தம்மை இணைத்துக் கொண்டு செயலாற்றும் கல்வியியலாளர், இலக்கியகர்த்தா, சமூக சேவையாளர் கவிஞர் சோப என அனைவராலும் அறியப்பட்டவரான சோ.பத்மநாதனுக்கு யாழ். விருது வழங்கப்பெற்றுள்ளது. நல்லூர் முருகன் திருவிழாக் காலங்களிலேயே ஒவ்வொரு ஆண்டும் இந்த விருது வழங்கப்பட்டு வருகின்றது. இந்த ஆண்டு அது சோபவுக்கு வழங்கப்பட்டுள்ளது.

விருது பெற்ற மகிழ்ச்சியை ஆழ்ந்து சுவைத்துக் கொண்டிருந்த அவரை அவரது வீட்டில் சந்தித்தேன். நீண்ட பழக்கம் இருப்பதன் காரணத்தால் ஒரு நேர்காணல் என்பதைத் தாண்டியதாக உரையாடல் நீண்டது.

**மகேஷ்:** குடும்பம், இளமைக் காலம், இலக்கியப் பணியில் குடும்பத்தினரின் பங்களிப்பு என்று மனத்தில் ஆழமாக உள்ளவை பற்றி...?

**சோப:** வண்ணார்பண்ணை வடமேற்கிலுள்ள சிப்பித்தறை எனும் குறிச்சியில் பிறந்தேன். நெய்தலும் மருதமும் மயங்கும் சூழல். கோம்பையன் மணல் சுடலை ஒருபுறம், ஆறுகால் மடம் மறுபுறம். வயல் வேலை, சுருட்டுத் தொழில் பார்க்கும் எளிய மக்கள், என் மாமனார் சுருட்டு முதலாளி, பத்துப் பதினைந்து தொழிலாளர்கள் அங்கு வேலை செய்வர். நான் இந்துக் கல்லூரி மாணவன். பாடசாலை விட்ட பின் சுருட்டுக் கொட்டிலில் வேலை செய்தவர்களுக்கு நான் வீரகேசரி பத்திரிகை வாசிப்பேன். விடுமுறைக் காலத்தில் பாரதம், இராமாயணம் வாசிக்க வேண்டும். தொழிலாளர்களில் மூத்தவர் பெரியப்பு. அவருக்குப் புராண இதிகாசங்கள் தண்ணீர் பட்ட பாடு. அவரை 'உச்ச' ஏலாது. பண்டைய கிரேக்கத்தில் இருந்த rhetoric (சொல் லாடல்), பயிற்சி போல எனக்குப் புராண வாசிப்புப் பயிற்சி!

> ஒரு மாணவன் சக மாணவனுடன் போட்டியிட்டு எத்தனையாம் இடம் பெற்றான் என்பது முக்கியமில்லை. அவன் சென்ற தடவை எத்தனை புள்ளிகளைப் பெற்றான் என்பதையும் இம்முறை எத்தனை புள்ளிகள் பெற்றுள்ளான் என்பதையும் கவனிக்க வேண்டும். அவன் மற்றவர்களை முந்தவேண்டும் என்பதல்ல, அவனது புள்ளிகளால் அவன் முன்னேற்றம் அவதானிக்கப்பட வேண்டும், அவனையே அவன் முந்த வேண்டும் (He must excel himself) என்பார்.

**மகேஷ்:** வீட்டுக்கு வெளியே அயலில், ஊரிலிருந்து ஏதாவது ஊட்டம் கிடைத்ததா?

**சோப:** மாமாவும் தொழிலாளர்களும் கிருபானந்தவாரியாருடைய பரம இரசிகர்கள். வாரியார் 1946, 47 வாக்கில்தான் முதன்முதலாக யாழ்ப்பாணம் வந்தார். மாதக் கணக்காகத் தங்கி, குடாநாட்டின் மூலை முடுக்குகளிலுள்ள கோவில்களில் பக்தியுரை செய்வார். மாமா எதையும் தவற விடுவதில்லை. குதிரை வண்டியில் புறப்பட்டுவிடுவார். நானும் கூடப் போவேன். ஏழு எட்டு வயதில் பெரிதாக எதுவும் புரிந்திருக்காது. ஆனால் தமிழோடிசை பாடல் என் செவியில் முதன்முதலாகப் பாய்ந்தது அந்தப் பருவத்திலேதான்! அதன் பிறகு 1954, 1955 ஆம் ஆண்டுகளில் வாரியார், வில்லூன்றியிலும் கொக்குவிலிலும் பேருரைகள் ஆற்றியபொழுது குறிப்பெடுத்துப் படித்திருக்கிறேன். தினமும் அவரைச் சந்தித்துச் சந்தேகங்களைக் கேட்டுத் தெளிந்திருக்கிறேன்.

**மகேஷ்:** வாரியார் எவ்வளவு தூரம் அவரது ஆற்றலால் உங்களைப் பாதித்தார்?

**சோப:** தமிழோடிசை பாடல் என்று சொல்லுவேன். அவர் பாடும் இராமாயணம், கந்தபுராணம் முதலிய காவியங்களில் வரும் பாடல்கள் இன்னிசையோடு கலந்து இரு செவிகளிலும் அமுதமாகப் பாயும்.

மகேஷ்: திருப்புகழும் அப்படித்தானே?

**சோப:** சொல்லாமலே புரியும் திருப்புகழ் வாரியாருடைய சிறப்பு (special). அது சந்தத் தமிழ்; லய சமுத்திரம்.

**மகேஷ்:** தங்கள் கவிதைகளை நிறையவே வாசித்திருக்கிறேன் சந்தத்திலமைந்த கவிதைகளை நீங்கள் எழுதுவது வாரியாரின் செல்வாக்கு ஒரு காரணமா?

**சோப:** ஆம்!; இதனால் சந்தத்தில் நெடுகவே எனக்கு ஈடுபாடு இருந்து வந்துள்ளது.

**மகேஷ்:** மிகுந்த ஈடுபாட்டுடன் கல்விச் சேவையிலும் உழைத்திருக் கிறீர்கள். அதனால் பெற்ற அனுபவ வெற்றிகள் என்று எதைச் சொல்வீர்கள்?

**சோப:** ஆசிரியத் தொழிலில் ஈடு படுவதே எனது இளவயதுக் கனவு. ஆனால் சந்தர்ப்ப சூழ்நிலைகளால் பதினெட்டு வயதிலேயே முதலில் தொலைபேசித் திணைக்களத்திலும் பின்னர் எழுது வினைஞனாகப் பொது வேலைத் திணைக்களத்திலும் ஆறு ஆண்டுகளைக் கழித்தேன். முதன் முறையாக 1964 இல் மாணவ ஆசிரியர்களை அரசு நியமித்தபோது அரை வாசிக்கும் குறைந்த சம்பளத்தைப் பெற ஒத்துக் கொண்டு ஆசிரியரானேன்.



**மகேஷ்:** அதனைத் தொடர்ந்து....?

**சோப:** பலாலி ஆசிரிய கலாசாலையில் ஆங்கில ஆசிரியராகச் சிறப்புப் பயிற்சி பெற்றேன். மூதூர் தொகுதியில் தம்பலகாமம் என்ற கிராமத்தில் ஆறு ஆண்டுகள் சேவையாற்றினேன். 1974இல் யாழ்ப்பாணம் திரும்பி விட்டகுறையைத் தொட்டுப் பட்டப் படிப்பை மேற்கொண்டேன்.

**மகேஷ்:** வெளிவாரியாக...!?

**சோப:** இல்லை! ஆங்கில ஆசிரியர்களுக்கான சிறப்புத் திட்டத்தில் முதலில் பேராதனையிலும் பிறகு யாழ்ப்பாணத்திலும் பட்டப் படிப்பு. தொடர்ந்து, பலாலி ஆசிரிய கலாசாலையில் விரிவுரையாளராக நியமனம். சில மாதங்களிலேயே பட்டப் பின் படிப்புக்கான பிரிட்டிஷ் கவுன்சில் புலமைப்பரிசில் பெற்று இங்கிலாந்து றெடிங் பல்கலைக் கழகத்தில் கற்றேன். நாடு திரும்பியதும் விரிவுரையாளராகப் பணியைத் தொடர்ந்தேன். 13 ஆண்டுகளின் பின்னர் நான் பயிற்சி பெற்ற அதே கலாசாலைக்கு அதிபரானேன்.

**மகேஷ்:** இக்காலங்களில் வித்தியாசமான அனுபவங்களைப் பெற்றிருப்பீர்கள்! மறக்க முடியாத மனிதர்கள் உள்ளனவா, சம்பவங்கள் ஏதாவது நிழலாடுகின்றனவா?

**சோப:** பலாலி எனக்களித்த பேறு மருத்துவர் சிவப்பிரகாசம் என்ற மேதை. அவர் எங்களுக்குக் கற்பிக்க வந்தபோது ஓய்வு பெற்றிருந்தார். 70 வயதிருக்கலாம். எளிமையான தோற்றம், நாவில் கிராமியத் தமிழ், இவர் இலக்கணக் கொட்டர் எனப் பேசப்பட்ட வ. குமாரசாமிப் புலவருடைய மகன் சைவப்பெரியார் சிவபாதசுந்தரத்தின் ஒன்றுவிட்ட தம்பி. இலங்கையில் உளவியலில் முதன் முதல் கலாநிதி பட்டம் பெற்றவர். லண்டனில் சேர் சார்ள்ஸ் ஸ்பியர்மான் (Sir Charles Spearman), சேர் பேர்சி நன் (Sir Percy Nunn), சேர் சைரில் பட் (Sir Cyril Burt) முதலிய விற்பன்னர்களிடம் பாடங் கேட்டவர்.

**மகேஷ்:** இவரது தனித்துவ ஆளுமை......?

**சோப:** மற்றைய பேராசிரியர்கள் தகவல்களைத் திணித்துக் கொண்டிருப்பார்கள். சிவப்பிரகாசத்தார் எம்மைச் சிந்திக்கத் தூண்டுவார். 'ஒரு மாணவன் சக மாணவனுடன் போட்டியிட்டு எத்தனையாம் இடம் பெற்றான் என்பது முக்கியமில்லை. அவன் சென்ற தடவை எத்தனை புள்ளிகளைப் பெற்றான் என்பதையும் இம் முறை எத்தனை புள்ளிகள் பெற்றுள்ளான் என்பதையும் கவனிக்க வேண்டும். அவன் மற்றவர்களை முந்த வேண்டும் என்பதல்ல, அவனது புள்ளிகளால் அவன் முன்னேற்றம் அவதானிக்கப்பட வேண்டும், அவனையே அவன் முந்த வேண்டும் (He must excel himself) என்பார்.

**மகேஷ்:** உங்களை உருவாக்கிய நல்லாசிரியர்களாக வேறு யாரைக் குறிப்பிடுவீர்கள்?

**சோப:** யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் வித்துவான் கார்த்திகேயனிடம் தமிழும் கொம்யூனிஸ்ற் கார்த்திகேசனின் ஆங்கிலமும் கற்கும் வாய்ப்புப் பெற்றேன். முன்னவரிடம் தனிப்பட தேவாரம், கலித்தொகை, சிவஞானபோதத்தில் முதன் மூன்று சூத்திரங்கள் பாடங் கேட்டதுண்டு. பள்ளிப் படிப்பைவிட அவர்களுடைய ஆளுமையால் ஈர்க்கப்பட்டேன் என்பதே உண்மை.

கொம்யூனிஸ்ற் கார்த்திகேசனுடைய எளிமை, மனிதாபிமானம், கொள்கைப் பிடிப்பு ஆகியவற்றை மதத்தலைவர்களிடம்கூட நான் கண்டதில்லை. சுந்தரம் டிவ கலாலா நிர்வாக சேவைக்குத் தெரிவான போது காத்தார் சொன்னது 'மிக உயர்ந்த இடத்துக்குப் போகிறாய். அங்கிருந்து கீழே நோக்கிப் பார் சமுதாயத்தின் கடைநிலையில் இருப்பவனை முன்னுக்குக் கொண்டுவர உன் பதவியைப் பயன்படுத்து'. தனது மாணவனாக இருந்த கைலாசபதியைப் பற்றி கார்த்திகேசன் சொன்னது, 'என்னுடைய மாணவர்களிற் பலர் தேவாரம் திருவாசகத்தை வைத்துக் கொண்டு விண்ணுலகத்தை நோக்கிக் கொண்டிருக்க ஒரு மாணவன் மட்டும் சமூகவியல், மானிடவியல் பற்றிய பாடங்கள் பற்றிய நூல் எங்களை வாசித்துக் கொண்டிருந்தான். மண்ணுலகம் பற்றிச் சிந்தித்த அந்த

மாணவன்தான் கைலாசபதி'

**மகேஷ்:** தங்களின் ஆங்கிலப் புலமை, மரபுக் கவிதை மீதான ஈடுபாடு என்பன இந்தச் சமூகத்திற்கு எவ்வளவு பயனுள்ளதாக அமைந்திருந்தது?

**சோப:** மனித மூளையின் மேற் பட்டையின் வலப் பக்கம் கணிதச் செயற்பாடுகளை முகாமை செய்யும். இடப் பக்கம் மொழித் தொழிற்பாட்டுக்கானது. எனக்கு இயல்பாகவே மொழித்திறன் வாய்த்ததற்கு எனது உடற்கூறே காரணம் போலும். தமிழ், ஆங்கிலம் ஆகிய இரு மொழிகளும் கைவந்தவனாய் பரிணமித்தமையால் மொழியின் சிகரமாகிய கவிதை எனக்கு ஊடகமாயிற்று, உயிராயிற்று! சிந்தனையின் ஊற்றுத் தமிழே! தமிழோடு ஆங்கிலம் கலந்து நான் பேசுவதில்லை.

**மகேஷ்:** தங்களின் மொழி பெயர்ப் புப் பணிகள் பற்றி....?

**சோப:** 1979இல் பேராதனைப் பல்கலைக்கழக நூலகத்தில் ஆபிரிக்க கவிதைகள் (African Poetry) என்ற யுனெஸ்கோ (UNESCO) வெளியிட்ட கவிதைத் தொகுதியை தற்செயலாகப் புரட்ட நேர்ந்தது 'எல்லாம் இழந்தவர்கள்' என்ற டேவிட் டியொப் எழுதிய கவிதை என்னைக் கவரவே அதைத் தமிழாக்கினேன். பண்டிதர் க.வீரகத்தியை ஆசிரியராகக் கொண்ட கிருதயுகத்தில் அது வெளியானது.

கைலாசபதி என்னை அழைத்துப் பாராட்டினார். 1982இல் யாழ்ப்பாணம் வந்த புருலு அமிர்தநாயகம் தமிழ்ப் படைப்புகளை ஆங்கிலத்தில் மொழி பெயர்க்க வேண்டியதன் தேவைபற்றி வலியுறுத்தினார். ஏ.ஜே.கனகரத்தினா, எஸ்.ராஜசிங்கம், செல்ல கனகநாயகம் ஆகியோருடன் என்னையும் அழைத்த கைலாஸ் மொழி பெயர்ப்புப் பணியை முடுக்கி விட்டார். நுஃமானின் 'தாத்தாமாரும் பேரர்களும்' மகாகவியின் 'தேரும் திங்களும்' உட்பட சில கவிதைகளை மொழி பெயர்த்தேன். அமிர்தநாயகத்திற்கு அனுப்பப்பட்ட மொழி பெயர்ப்புக் கவிதைகள், ரஞ்சினி ஒபயசேகர பதிப்பித்த ஜேர்னல் ஒவ் சவுத் ஏசியன் லிட் ரேச்சர் (Journal of South Asian Literture - 1989) இல் வெளிவந்தன. அந்த நாள் தொடக்கம் எனது மொழி பெயர்ப் புப் பணி தொடர்ந்தது.

**மகேஷ்:** கவிதை மொழி பெயர்ப்பில் மாத்திரமா ஈடுபட்டுள் ளீர்கள்?

**சோப:** அல்ல, குழந்தை சண்முகலிங்கத்தின் மூன்று நாடகங்களை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்தேன். தமிழ்ச் சிறுகதைகளை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்து கொடகே மூலம் வெளியிட்டேன். ஆங்கிலத்தின் வழி தமிழுக்கு நான் கொண்டுவந்த 'தென்னாசியக் கவிதைகள்' ஒரு முக்கியமான தொகுதியாகும். அது சாகித்திய மண்டலப் பரிசு பெற்றது. 'பர்மியப் பிக்கு சொன்ன கதை'யும் பரிசு பெற்ற மற்றொரு மொழி பெயர்ப்பு நூலாகும்.

**மகேஷ்:** கவிதை மொழி பெயர்ப்புக்கு அப்பால் சமூகப் பணியை மையப்படுத்தியே 'யாழ் விருது' வழங்கப்படுகிறது. தங்களுக்குக் கிடைத்த இந்தப் பெருமையை நாமும் பாராட்டுவதுடன், உங்கள் சமூகப்பணி பற்றிச் சொல்லுங்கள்.

**சோப:** சைவவித்தியா விருத்திச் சங்கம், இந்த நாட்டின் கல்வி வளர்ச்சியிலும் தமிழ், சைவநெறி, பண்பாடு ஆகியவற்றிலும் தடம்பதித்த பழம் பெரும் நிறுவனம். வடக்கு, மலையகம், கிழக்கு முதலிய பிரதேசங்களில் 187 பாடசாலைகளையும் திருநெல்வேலியில் சைவாசிரிய கலாசாலை ஒன்றையும் ஏழைப் பிள்ளைகளுக்கான பல இல்லங்களையும் நிறுவிப் பராமரித்து வந்தது. 1962இல் அரசு பாடசாலைகளைப் பொறுப்பேற்கவே நிறுவனம் சிறிது தளர்ச்சி கண்டது. 1993இல் சைவ வித்தியா விருத்திச் சங்கப் பணியில் ஈடுபட்ட நான், ஓய்வுக்குப் பின்னர் முழுநேரத் தொண்டனாக இயங்குகிறேன். இது 27ஆவது வருடம்.

**மகேஷ்:** தாங்கள் செய்த பணிகளின் ஊடாகவும் கிடைத்த பாராட்டுக்கள் ஊடாகவும் பெற்ற அனுபவத்தின் ஊடாகவும் சமூகத்திற்குத் தாங்கள் சொல்ல விரும்புபவை?

**சோப:** தனக்குத் தனக்கென்றால் சுளகு படக்குப் படக்கெனும் என்ற பழமொழி தமிழ் இனத்திற்குப் பொருந்துவது போல வேறு யாருக்கும் பொருந்துவதில்லை. நாட்டைப் பொறுத்த மட்டில் இன்று குடும்ப ஆட்சி உச்சத்தில் இருக்கின்றது. இதன் கருத்து என்னவென்றால், புத்தனாகவோ ஜேசுவாகவோ நாவலராகவோ தன்னலம் மறுத்து வாழ்வது எல்லோராலும் முடியாது, ஆனால், நாங்கள் - குறிப்பாக இளைஞர்கள் செய்யக் கூடியது என்னவென்றால் எங்கள் முயற்சியில் ஒரு பகுதியை, வருவாயின் ஒரு சிறு பகுதியை பொதுப் பணிக்கு, வீழ்ந்து படுத்தோரைக் கைதூக்கி விடுவதற்குப் பயன்படுத்தவேண்டும். நான் புதிதாக எதையும் சொல்லவில்லை. திருமூலர் சொன்னது தான்,


*யாவர்க்குமாம் இறைவர்க்கு ஒரு பச்சிலை*
*யாவர்க்குமாம் பசுவுக்கு ஒரு வாயுறை*
*யாவர்க்குமாம் உண்ணும் போது ஒரு கைப்பிடி*
*யாவர்க்குமாம் பிறர்க்கு இன்னுரை தானே*

இவை யாவராலும் செய்யக் கூடியவை. இதுவே மூப்புத் தகுதி ஒன்றால் மட்டும் நான் இந்தச் சமூகத்திற்கு விடுக்கும் செய்தி.

**மகேஷ்:** அரச பணியிலிருந்து ஓய்வு பெற்ற பின்னரும் ஓய்வின்றிப் பொதுப் பணியில் ஈடுபட்டுள்ள தாங்கள் எமது வேண்டுகோளை ஏற்றுச் செம்மண் வாரமலர் நேர்காணலில் பங்கு கொண்டு உற்சாகமாகச் செயற்படுவதை அவதானிக்கிறேன். தங்களின் பயன்மிகு கருத்துக்கள் எமது வாசகர்களின் சிந்தனைக்குச் சிறப்பான தீனியாகும் என்ற நம்பிக்கையுடன் நன்றிகளைத் தெரிவிக்கிறேன். நன்றி.

சோப: நன்றி வணக்கம்

# எங்கே போகிறோம்?



எழுத்தாளர் மு.சிவநேசன் எழுதும் தொடர்

இன்று மீண்டும் தேங்காய் எண்ணெய்தான் ஆரோக்கியமானது என்கின்ற முடிவுக்கு அறிவியல் உலகம் வந்து கொண்டிருக்கிறது என்றால் இடைக் காலங்களில் நடைபெற்ற எண்ணெய் வியாபாரங்களும் விளம்பரங்களும் எமது ஆரோக்கியத்தைத் தேவை இல்லாமல் கெடுத்தது தான் மிச்சம்.

பசுப்பாலில் வாசனை போய்விட்டது. நெய்யில்கூட வாசம் இயற்கையாக இல்லை. காரணம் பசு வளர்ப்பு முறையும் அவற்றின் உணவுகளுமே. ஆனால் ஒரு துளி நெய்விட்டுச் சாப்பிட்ட மனிதன் இன்று நெய் வெண்ணெய் (Cheese) என்று அப்படியே கபளீகரம் செய்யப் பழகிக்கொண்டுள்ளான். இதனால் தனி மனித உணவுச் சமநிலை மட்டுமல்ல, ஆரோக்கியம் மட்டுமல்ல, உற்பத்தி, வியாபாரம், பண்ணை முறைமைகள் எனப் பல மாற்றங்கள் பாதகமாகவே மாறி வருகின்றன.

அவரவர் தமக்குத் தேவையான தானியங்களையும் பால் உற்பத்திகளையும் மேற்கொண்ட காலத்தில் இருந்த பரிசுத்தம் இன்று மறைந்து விட்டது. ஆபத்தான இரசாயனங்கள் பெருமளவு உற்பத்தியின் இடை நடுவில் புகுந்து விளையாடத் தொடங்கிவிட்டன.

> தமக்குத் தேவையான தானியங்களையும் பால் உற்பத்திகளையும் மேற்கொண்ட காலத்தில் இருந்த பரிசுத்தம் இன்று மறைந்து விட்டது. ஆபத்தான இரசாயனங்கள் பெருமளவு உற்பத்தியின் இடை நடுவில் புகுந்து விளையாடத் தொடங்கிவிட்டன.

5

நகரங்களை நோக்கிய படை யெடுப்பு, உடலுழைப்பு இன்மை, கலோரிச் செறிவு மிக்க உணவுகள் என்று எம்மை நாமே கெடுத்துக் கொண்டுள்ளோம். குழந்தைகள் படித்தால் போதும் என்கின்ற போட்டி மனப்பாங்கு, அவர்களின் ஆரோக்கியத்துக்கு எமன் ஆகின்றது.

பிடித்தமானதை வாங்கிக் கொடுத்து வயிற்றை நிரப்பிப் பள்ளிக்கு அனுப்பி வைக்கவே பெற்றார் துடிக்கிறார்கள். அவர்களின் உணவில் பேணப்பட வேண்டிய ஊட்டச் சமநிலை பற்றியோ, உடற்பயிற்சி பற்றியோ, கல்வி சாரா நடவடிக்கைகள் பற்றியோ கவலைப்படும் நிலையில் பெற்றோர் இல்லை என்பது கவலைக்கிடமான நிலமையே.

பொதி செய்யப்பட்ட உணவுகளை வாங்கு பவர்களில் எத்தனை பேர் அவற்றின் உறையில் உள்ள உள்ளீடுகள் அவற்றின் சாதக பாதகங்களைப் பற்றிக் கவலைப்படுகிறார்கள்?

உண்ணுகின்ற உணவுக்காக விளைவு தந்த சூரியனுக்கும் உழவர்களுக்கும் பசுக்களுக்கும் நன்றியுடன் பொங்கலிட்டு வாழ்ந்த இனம் நாங்கள் என்றால் இதில் எவ்வளவு அறிவியல் யதார்த்தம் புதைந்து கிடக்கிறது.

ஒரு தனிமனிதனின் ஒரு வருட உணவுக்காக எங்கெல்லாம் யார் யார் எப்படிப் பாடுபடுகிறார்கள் என்னென்ன பொறி முறையில் இவை எம்மை வந்தடைகின்றன என்றெல்லாம் எவராவது இன்று சற்றாவது சிந்திக்கிறோமா? பணமிருந்தால் எல்லாவற்றையும் வாங்கிக் குவித்துவிடலாம் என்றுதான் எல்லோரும் நினைக்கிறார்கள்.

மட்டுமல்ல இன்று பணம் கொடுத்து நாங்கள் கபளீகரம் செய்யும் உணவில் அடுத்தவருக்குப் போய்ச் சேர வேண்டிய பங்கு கணிசமாக இருக்கிறது. இது துரோகம் மட்டுமல்ல அதற்கான தண்டனையே உடனடியாக நோய்களின் வடிவத்தில் வந்து வாட்டுகிறது. எமது உணவை பெறுகின்ற வழிகளில் இடையில் உள்ள பொலித்தீன் பாவனை பற்றிய சிந்தனை அவசியமானது. உற்பத்தி முறைகள், பொதியிடல், எடுத்து செல்லும் பைகள், உணவு அருந்திவிட்டு வீசும் கரண்டிகள், கோப்பைகள், தண்ணீர்ப் போத்தல்கள் எல்லாம் எம்மைவிட ஆயுள் கூடியவை. ஒருமுறை பாவித்துவிட்டு வீசுகின்ற பையை இரண்டு முறை ஒவ்வொருவரும் பாவித்தாலே உலகளவில் உற்பத்தி அரைவாசி ஆகிவிடும். இதையெல்லாம் யார் கணக்கில் எடுக்கிறார்கள்.



ஒரு பையில் போடும் பொருள்களுக்கே இரண்டு பைகள் கேட்கிறார்கள். அதுவும் இரட்டைப் பை கேட்கிறார்கள். துணிப் பையைப் பயன்படுத்தும் ஒருவர் மாதமொன்றுக்கு நூற்றுக்கணக்கான பொலித்தீன் பைப் பாவனையைத் தவிர்க்கிறார். அவரது சுற்றுச்சூழல் பங்களிப்பு மகத்தானது.

(தொடரும்)

# இசைப் புயல்போல அமைதிப் புயல் இது!



இசையமைப்பாளர் ஒருவர் அமைதியாக அசத்திக்கொண்டிருக்கிறார் என்று பொது வெளியில் ஒரு கதை. இதனால் இசைப் புயல் என்று முத்திரை பதிக்கப்பட்ட ஏ.ஆர்.ரஹ்மானைப்போல இவர் அமைதிப் புயல் என்று வர்ணிக்கப்பட்டிருக்கிறார். 'புரியாத புதிர்', 'விக்ரம் வேதா' ஆகிய படங்கள் தொடங்கிக் கவனிக்கவைத்து வரும் சாம் சி.எஸ். தான் அவர். மாதவன் நடித்துவரும் 'ராக்கெட்ரி', அறிவழகன் இயக்கத்தில் அருண் விஜய் நடிக்கும் படம், ரெஜினா கஸாண்ட்ராவின் 'சூர்ப்பனகை', விஜய் சேதுபதியின் '800', சசிகுமாரின் 'ராஜ வம்சம்', ஜெய் நடிக்கும் 'எண்ணித் துணிக', உதயநிதி ஸ்டாலின் நடிக்கும் 'கண்ணை நம்பாதே' ஆகிய தமிழ்ப் படங்களுடன், 'மோச கல்லு', ரவி தேஜாவின் பெயரிடப்படாத படம், ஹரீஷ் கல்யாண் நடிக்கும் நேரடித் தெலுங்குப் படம் எனத் தெலுங்கிலும் கைநிறையப் படங்களை இவர் வைத்திருக்கிறார் என்று கூறப்படுகிறது. இவை தவிர, புஷ்கர் காயத்ரி இயக்கி முடித்திருக்கும் இணையத் தொடருக்கும் இசையமைக்கிறாராம். பாடல்கள், பின்னணி இசை இரண்டிலுமே பெயர் பெற்றிருக்கிறார் இவர்.

- கலியுக பித்தன் -



# கடமை விலக்கேல்!

பிள்ளை! அந்த ரேடியோக்கு சத்தம் எப்பன் வைச்சு விடனை என்றுசொல்லிவிட்டு காதை கூர்மையாக்கி கொண்டிருந்தார் கந்தப்பு. சொல்லி முடிப்பதற்குள் மூன்று முறை இருமிவிட்டார். நாடாளுமன்ற தேர்தல் முடிவுகளை அறிந்து கொள்வதில் எண்பத்திரெண்டு வயது முதிர்ந்த கந்தப்புவிற்கு அவ்வளவு ஆர்வம். நாடு சுதந்திரம் அடைந்ததில் இருந்துஇன்றுவரை நாட்டுஅரசியல் நிலைமை, அரசியல் தலைவர்கள் பற்றிய பரந்த அறிவையும் அனுபவத்தையும் கொண்டிருந்தார்.

சன்னமாக முனங்கிக் கொண்டிருந்த ரேடியோ இப்போது பெருங்குரலெடுத்து ஓலமிடத் தொடங்கியிருந்தது. கூடவே இந்தாளுக்கு வேற வேலையில்லைஎன்ற முணுமுணுப்புக் கேட்டது.

> **என்னனை பேசிறியள்? என்ன கடமை? உந்த குண்டு மழைக்கிளையும் காடு காடா நாங்க தாவி ஓடேக்கையும் உந்த.. உந்த.. உவங்கள் எங்க போனவையாம்? எத்தினை நாள் பங்கருக்குள்ள சாப்பிடாம பட்டினி கிடந்திருப்பம்.. அப்பேக்க இவங்க சொகுசாதானே இருந்தவங்கள்! இப்ப வந்து கம்பு சுத்தினமோ!**

இடைக்கிட ஒவ்வொரு தேர்தல் தொகுதிகளினதும் முடிவுகள் சொல்லப்பட தனக்குள்ளையே எதையோ கணிப்பிட்டு கொண்டிருந்தார். உந்தப் பதவியாசை பிடிச்சு எங்கட அரசியல்வாதியள் என்ன ஆட்டம் போடுறாங்கள். ஒத்துமையா நிண்டு கொண்டு எங்கட சனத் துக்கு கிடைக்க வேண்டியதை எடுத்து குடுக்கலாமே...! தன்னுடைய மனக்கொதிப்பைதனக்குள்ளையே கொட்டித் தீர்த்தார்.



▲ க.நா.சு.



▲ எம்.வி. வெங்கட்ராம் ஓவியங்கள்: மனோகர்

என்னனை! மத்தியானம் எழும்பிறனீங்க இன்டைக்கு என்னடான்னா, காலங்காத் தாலையே படுக்கையால எழும்பியாச்சு போல இருபத்தியேழு வயதில் பூவையும் பொட்டையும் தொலைத்த மூத்த மகள் சந்திராவின் வார்த்தைகள் அவர் காதுகளில் பாய்ந்தன.

ஓமனை! உந்த எலெக்ஸன் முடிவுகள் அறிவிக்கிறாங்களெல்லோ, அதை கேட்பமெண்டுதான் எழும்பினான்.

பொல்லாத எலெக்ஸனும் மண்ணும் தான் வேண்டா வெறுப்பாக சொல்லி கொண்டே கந்தப்புவின் வலது கை பக்கமாக தேநீர் கோப்பையை வைத்தாள். அவளது மன கொதிப்போடு சேர்ந்து சிலதுளி தேநீரும் வெளியில் சிதறியது.

என்ன பிள்ள நீ.. பாத்து கீத்து வைக்கிரேலையோ... பாரு நிலத்துல ஊத்திண்டுட்டு. எறும்பு சனியன் இனி மொய்க் கப் போகுது எதார்த்தமாகச் சொல்லி விட்டு, அருகிலிருந்த பழைய துண்டால் அதனை ஒற்றி எடுத்தார் கந்தப்பு.

அவருடைய பதிலுக்கு காத்திருக்காது வெளிவந்த கண்ணீர், நிலத்தில் சிந்தாதவாறு முந்தானையால் ஏந்தி கொண்டே உள்ளே சென்று விட்டாள் மகள்.

என்ன நடந்துபோட்டு தெண்டு உப்புடி மூஞ்சையத் தொங்க போட்டுக் கொண்டு போறாள் கொஞ்சம் சத்தமாகவே சொன்னார்.

எனே அப்பா! எப்பனுக்கு பேசாம இருங்கோவன். அனுபவிக்க வேண்டிய வயசில தாலியை அறுத்து கொண்டு அவள் படுறபாடு உங்களுக்கு தெரியாதே? இடது பக்கம், முழங்கால் வரை துண்டாடப்பட்ட காலோடு ஊன்று கோலை வைத்து கெந்தி கொண்டு, கந்தப்புவின் அரு காமையில் வந்தமர்ந்தான் சந்திராவின் தம்பி விக்னேஷ்.

சரி, சரி உதுகள விடு.. உந்த எலெக்ஸன் நிலவரங்கள கொஞ்சம் கேப்பமன். கந்தப்பு அந்தச் அபசகுணச் சூழலை விரைந்து கடக்க விரும்பினார்.

உங்களுக்கு உங்கட எலெக்ஸன் தான் முக்கியமா போச்சு என்ன..? உவங்களாள எங்களுக்கு என்ன கிடைச்சுப் போட்டுதெண்டு ஆர்வமா கேட்டு கொண்டு இருக்கிறியள்? மகன் விசனப்பட்டான்.

ஒரு நாட்டின்ட அரசியல் நடப்பை பற்றித் தெரிஞ்சு வைச்சிருக்கோணுமடா தம்பி. அவங்கள் செய்தான்னென்ன விட்டான்னென்ன, எங்களுக்கெண்டு ஒரு கடமை இருக்கெல்லோ?

என்னனை பேசிறியள்? என்ன கடமை? உந்த குண்டு மழைக்கிளையும் காடு காடா நாங்க தாவி ஓடேக்கையும் உந்த.. உந்த.. உவங்கள் எங்க போனவையாம்?

எத்தினை நாள் பங்கருக்குள்ள சாப்பிடாம பட்டினி கிடந்திருப்பம்.. அப்பேக்க இவங்க சொகுசாதானே இருந்தவங்கள்! இப்ப வந்து கம்பு சுத்தினமோ! வாழ்க்கையில் அவன் அனுபவித்த வலிகளும், ஏமாற்றங்களும் வார்த்தைகளாக வந்து விழுந்தன.

தம்பி, நானும் தான் உன்னோட காட்டுக்க தாவினான், பங்கருக்க பட்டினி கிடந்தனான், உன்ட அக்கான்ட புருன் குண்டுபட்டுச் செத்துப்போன பிறகும், கண்ணிவெடியில வைச்சு நீ காலை இழந்தா பிறகும் உங்கட ரெண்டு பேர்ட வலியையும் ஒண்டா நான்தான் சுமக்கிறன். உனக்கு மட்டும் வலி இல்லையடா தம்பி... கந்தப்புவின் குரல் தளுதளுத்தது.

இஞ்சபாரப்பா! எங்கட சனத்துக்கு நிறைய பிரச்சினை இருக்கு.. அதுகளெல்லாம் தீருமோ தீராதோ எங்களுக்குத் தெரியாது.. அதுக்காக உந்த எலெக்ஸனை விலத்தி வைச்சு எந்த பிரயோசனுமும் இல்லை.. எங்கட உரிமையெல்லாம் இல்லாமல் போய்க் கொண்டு இருக்கேக்க எங்களுக்கு இருக்கிற ஒரே உரிமை இப்பிடியான எலெக்ஸன்தானே... அவர் பேசி கொண்டிருக்கும் போதே சந்திராவும் வெளியில் வந்து இவர்களுடன் அமர்ந்து கொண்டாள்.

எங்களுக்கு உவங்கள் ஒன்னும் செய்யாமல் விட்டாலும் பரவாயில்லை. ஆனா எங்கட வாக்குரிமையை சரியா பயன் படுத்தோனும். எங்கள ஆளப்போறவனை நாங்க தான் முடிவு பண்ணோனும். கடைசியில எங்களுக்கு விரும்பினவன் எங்களை ஆளுறான் எண்டிற நிம்மதியாவது கிடைக்குமெல்லோ. இல்லாட்டிப் போனா காலம்பூராவும் அடுத்தவனை பிழை பிடிச்சே வாழ்க்கையை நடத்த வேண்டி வரும். சொல்லி முடித்து ஏக்க பெருமூச்சை விட்டார்.

சந்திரா தலைக விழ்ந்து அமர்ந்திருந்தாள். அவள் ஆழமா யோசித்துக் கொண்டிருக்கக்கூடும்.

விக்னேஷ் கடும் பிரயத்தனப்பட்டு ஊன்று தடிகளை பிடித்து எழுந்தான்.

எங்கையடா போறா? அப்பன் பேசினது புடிக்கேலையோ? கந்தப்பு அவனைப் பார்த்து ஆதங்கப்பட்டார்.

பதில் சொல்லாமல் கெந்தி, கெந்தி ஒலித்து கொண்டிருந்த வானொலிக்கு அருகில் சென்று, அதன் சத்தத்தை இன்னும் அதிகரித்தான்..

அது "அவர்கள்" வென்றதை அறிவித்துக்கொண்டிருந்தது.

## கிக் — 2 படத்திலும் ஜாக்குலின்!



இலங்கை நடிகையான ஜாக்குலின் பெர்னாண்டஸ் நடிகர் சல்மான் கான் நடிக்கும் கிக் - 2 படத்தின் கதாநாயகியாக நடிக்க உள்ளார் என்று அறிவிக்கப்பட்டிருக்கின்றது.

செவ்வாய்க்கிழமை 35 வயதை எட்டிய ஜாக்குலினின் இந்தப் படம் தொடர்பான அறிவிப்பு சமூக ஊடகங்களில் படத்தின் தயாரிப்பாளர் வர்தா நதியட்வாலாவினால் அறிவிக்கப்பட்டது. ஜாக்குலின்தான் கிக்- 1 படத்தின் கதாநாயகியாகவும் நடித்தவர்.

கொரோனா கெடுபிடிகள் குறைந்ததும் விரைவில் இந்தப் படத்தின் படப்பிடிப்புத் தொடங்கும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கை மாடலும் நடிகையுமான ஜாக்குலின் 2009ஆம் ஆண்டு முதல் இந்திப் படங்களில் நடித்துப் புகழ்பெற்றவர். தொடர்ந்தும் அவர் இந்திப் படங்களில் நடித்து வருகின்றார்.

**"எங்களுக்கும் தொகையாக் குடுக்கிறநேரம் தோற்றாது. கொஞ்சமா... ஆயிரம் ஐந்நூறு எண்டு குடுத்தா நட்டம். அவைக்கு இந்த மெழுகுதிரி ரெண்டு ரூபாய்க்குத்தான் குடுக்கிறம். அவை ரெண்டு ரூவா மூண்டு ரூவா வைச்சு விப்பினம்.**



காயா

# மெழுகுதிரிப் பெண்கள்

நூற்பந்திலிருந்து பிரித்தெடுக்கப்பட்டுக் கூரையில் தொங்கவிடப்பட்ட கொழுவி ஒன்றினூடாக வந்த நூலின் நுணியைத்தான் வைத்திருந்த அந்த அச் சுக்குள் மேலும் கீழுமாகக் கொழுவி எடுத்துக் கொண்டிருந்தார் அந்தப் பெண். நூலைக் கொழுவி முடித்ததும். இரண்டு பக்க அச்சுகளையும் ஒன்று சேர்த்து இருபுறங்களிலும் இருந்த நட்டுகளை இறுகப் பூட்டினார். பின் அவற்றைச் சரிபார்த்தார்.

தனதருகில் அடுப்பில் வைக்கப்பட்டிருந்த அந்தப் பெரிய பானைக்குள்ளிருந்து (கிடாரம்) சிறியதொரு கைப்பிடியுள்ள கப் (ஜொக்) மூலம் அள்ளியெடுத்த திரவ மெழுகை அந்த அச்சில் நூல் போய் வந்த துவாரத்தினூடாக உள்ளே விட்டார். அச்சு நிறைந்தது. உடனே அதைத் தனது அருகில் மற்றொரு புறத்திலிருந்த நீர் நிறைந்த பிளாஸ்ரிக் பாத்திரத்துக்குள் (பேசின்) அமிழ்த்தினார்.

அவர் எப்படி மெழுகுதிரி வார்க்கிறார் என்று இதுவரை உன்னிப்பாகக் கவனித்துக் கொண்டிருந்த என்னைப் பார்த்து உங்களுக்கு எத்தின மெழுகுதிரி வேண்டும் என்று கேட்டார். மெழுகுதிரி தயாரிப்பது குறித்து அறிவதற்காகச் செம்மண் பத்திரிகையிலிருந்து வந்திருக்கிறேன் என்று என்னை அறிமுகப் படுத்தியதும், அப்படியா என்று ஆச்சரியத்துடன் கூறிவிட்டு பேசினுக்குள் அமிழ்த்திய அச்சுக்குள் மறுபடியும் திரவ மெழுகை ஊற்றினார்.

தான் செய்கின்ற தொழில்குறித்துப் பத்திரிகையில் போடப்போகிறார்கள் என்ற பரபரப்பு அவரைத் தொற்றிக் கொண்டது. "தண்ணீக்க வைக்கேக்க வத்திக் கொண்டுபோகும். குட்டை, சொறியாய் வரும் அதாலை திரும்ப ஒருதடவை பாத்து ஊத்த வேணும்" என்றார். தன்னை ஒளிப்படம் எடுக்கப்போகிறேன் என்று தெரிந்துகொண்டதும், கதை நடுவே நெற்றியில் சிதறிக்கிடந்த முடிகளைப் புறமொதுக்கினார். தான் வடிக்கும் மெழுகுதிரியும் மொளுமொளுப் பாக பளபளப்பாக அழகாக இருக்கவேண்டும் என்று அவர் விரும்பினார்.

இது மண்டைதீவு - சாட்டிப் பகுதியிலுள்ள சிறியதொரு மெழுகுதிரித் தொழிற்சாலை.

"கட்டி மெழுகோட கெமிக்கலைச் சேத்து உந்தக் கிடாரத்துக்க போட்டு அடுப்பில வைச்சு எரிக்கிறதுதான் முதல் வேலை. மெழுகு உருகித் தண்ணித் தன்மைக்கு வாற வரைக்கும் நல்லா எரிச்சப் பிறகு அடுப்பை மெல்லிய தணலிலை விடவேணும். பிறகு இந்த மாதிரி அச்சுக்குள்ள நூலை விட்டு மூடி, மெழுகை ஊத்தித் தண்ணீக்க வைச்சு எடுத்ததாச் சரி"

மற்றொரு அச்சுக்குள் நூலைக் கோர்த்தவாறே தான் செய்கின்ற வேலையைப் பற்றி முழு மூச்சில் சொல்லி முடித்தார் அவர். இப்போது நூலைக் கோர்த்த மற்றைய அச்சுக்குள்ளும் மெழுகை ஊற்றி முடித்தார். அதை நீருக்குள் அமிழ்த்திவிட்டு ஏலவே நீருக்குள் அமிழ்த்தி வைத்த அச்சை வெளியில் எடுத்தார். இவ்வாறு மாறி மாறி ஒவ்வோர் அச்சாக நூலைக் கோர்த்து மெழுகை ஊற்றி, நீருக்குள் அமிழ்த்தி எடுத்துக் கொண்டிருந்தார். அவரின் கைவசம் இரண்டு அச்சுகள் தானிருந்தன.

"ஒரு நாளைக்கு ஒரு முப்பத்தஞ்சு, நாப்பது கிலோ மெழுகில வேலை செய்வன். உருக்கின மெழுகு மூண்டு நாலு மணித்தியாலங்கள் அப்பிடியே தண்ணியா இருக்கும் அதுக்கிடையில ஊத்தி முடிக்காட்டி சொர சொரப்பாகிக் கொண்வரும். அப்பிடி வரேக்க திரும்பவும் அடுப்பை எரிச்சு மெழுகை இளக்கமாக்க வேணும்" எனக்கு மேலதிக விளக்கத்தைத் தந்த அவர் தன்னுடைய பெயர் ஜீவா என்று அறிமுகப்படுத்திக்கொண்டார். கணவனைப் பிரிந்த பின்னர் அவரது குடும்பத்தைத் தலைமை தாங்குவதற்கு அவருக்கு இந்த மெழுகுதிரித் தொழிலே கைகொடுக்கின்றது.

"இஞ்சையுள்ள சேர்ச் வழிய எடுக்கிற பழைய - எரிச்ச மெழுகோட யாழ்ப்பாணத்தில பெட்டா எசன்ஸிலையும் புது மெழுகு வாங்கிறனாங்கள். சேர்ச் வழிய கொழுத்துற மெழுகுதிரியலில இருந்து எடுக்கிற எரிஞ்ச மெழுகை ஒரு விலை போட்டுத் தருவினம். நல்ல மெழுகு வாங் கிறதெண்டால் கிலோ முன்னூர் வா. நாங்கள் தொகையாத் தான் எடுக்கிறனாங்கள். அதாலை கொழும்பி லையிருந்தும் எடுக்கிறனாங்கள்" தொழிலின் போக்குவரவுகள் தொடர்பில் எம்முடன் பேசினார் மற்றொரு பெண்.

அந்தச் சிறிய தொழிற்சாலையின் தலைமை அதிகாரியாகத் தோன்றினார் அவர். தன் பெயர் நிரோஜினி என்று அறிமுகப்படுத்திக்கொண்டார். அவர்தான் தொழிற்சாலையின் உரிமையாளரும்கூட.

"முந்தியிருந்தே எங்கடை அம்மாவை கோயிலுக்குச் செஞ்சு (மொழுகுதிரி) குடுத்துக்கொண்டு வந்தவையள். பேந்து இவர் (கணவர்) காணாமப் போனாப்பிறகு நான் செய்த தேங்காய் யாவாரத்தால போதிய வருமானம் இல்லையெண்டாப்போல எங்கடை கோயிலுக்குக் கொஞ்சம் கொஞ்சம் ஊத்திக் குடுத்தன். பிறகு வேற வேற இடங்களிலையிருந்தும் கேட்டுக் கேட்டு வந்திச்சினம். இப்ப மெழுகுதிரி மட்டும் ஊத்துறம். அம்மா தொடங்கின காலத்தில இப்பிடி அச்சுகள் ஒண்டும் இல்ல. வளையம் ஒண்டில தோய்ச்சுத் தோய்ச்சு எடுத்துச் செய்யிற



முறைதானிருந்துது. அது சரியான சிரமம். நாங்கள் இந்தியாவிலயிருந்து கொண்டந்த ஆக்களிட்ட இந்த அச்சுகள வாங்கிச் செய்ய வெளிக்கிட்டம். நாங்க தொடங்கி இப்ப பத்து வருசமாகுது... இல்லயில்லக்கூட.... இவர் காணாமப் பேயே... 14 வருசம்... அப்ப நாங்க தொடங்கிப் 12, 13 வருசமாகுது..."

"எங்களுக்கு ஓடருக்கு நிறையக் கோயிலுகள் இருக்குது. நாங்க தூரங்களெண்டிட்டுத்தான் போறேல்ல. தொகையாக் குடுக்கிறதெண்டு சொன்னாப் பாசையூருக்குத்தான். மற்ற இடங்களுக்கெல்லாம் சும்மா ஆயிரம், ஐந்நூறு எண்டுதான் குடுக்கிறது. கொண்டேய்க் குடுக்கிறதுக்கு எங்களுக்குக் கட்டுபடியாகாது. ரெண்டாயிரம், மூவாயிரம் எண்டு எடுப்பினமெண்டால் கொண்டுபோய்க் குடுக்கலாம்"

தங்கள் தொழிற்சாலையை சிறியது என்கிற நிலையில் இருந்து நடுத்தரம் என்பதற்கு உயர்த்த முடியாமல் இருப்பதற்கான சவால்களை அவர் விளக்குகின்றார்.

"எங்களை மாதிரிப் பல இடங்களில செய்யினம் தான். வேதக் கோயிலுகளில அநேகம் செய்யினம். பாசை யூரில தொகையாக் குடுக் கிறதுக்குப் பெரிசா ஒருத்த ரும் இல்லையெண்டபடியா எங்களக் கேட்டவை. முந்தி ஸ்ராட்டில ரெண்டாயிரம் மூவாயிரம்தான் போனது. இப்ப கொஞ்சம் கூடக் குடுக்கிறம்.

இது பழைய மெழு கெண்டபடியா ரெண்டு ரூவாய்க்குக் குடுக்கிறம். புது மெழுகெண்டா அப்பி டிக் குடுக்கக் கட்டுபடியா காது. மூண்டு ரூவாயாவது வேணும்.

மெழுகு, நூல், எண்ணை... (அச்சுக்கு அடிக்கடி எண்ணெய் பூசிக் கொள்ளவேணும்) சிற்றிக் அசிட் எண்டு சொல்லி ஒரு கெமிக்கல், அது கிலோ முன்னூறு ரூவா, அது ஒரு கிலோ மெழுகுக்கு 100 கிராம் போடவேணும், அப்பதான் மெழுகு கொஞ்சம் ஸ்ரோங்க வரும், இப்படிச் செலவுகள் நிறைய.

**"மெழுகு உருகித் தண்ணித் தன்மைக்கு வாற வரைக்கும் நல்லா எரிச்சப் பிறகு அடுப்பை மெல்லிய தணலிலை விடவேணும். பிறகு இந்த மாதிரி அச்சுக்குள்ள நூலை விட்டு மூடி, மெழுகை ஊத்தித் தண்ணீக்க வைச்சு எடுத்ததாச் சரி"**

அதனால கொண்டுபோய் விக்கிறதால இலாபம் கிடைக்காது.

இந்தத் தொழிற்சாலை மூலம் கிடைக்கும் வருமானத்தில் இப்போது 3 குடும்பங்களின் வாழ்க்கை நல்லபடி நகர்கின்றது. முதலில் சரோஜினியின் வீட்டில் இருந்துதான் இயங்கத் தொடங்கினார்கள். பின்னர் பிரதேச செயலகத்தால் ஒரு கட்டடம் இவர்களின் தொழிற்சாலைக்கென வழங்கப்பட்டுள்ளது. இப்போது அதிலிருந்தே வேலை செய்கிறார்கள்.

நேர்த்தியா திட்டமிடலும் சரியான நிபுணத்துவ ஆலோசனைகளும் சந்தை வாய்புக்கான வழிகாட்டல்களும் இவர்களுக்குக் கிடைத்தால் இன்னும் இவர்கள் வளர்வதற்கு வாய்ப்புக்கள் உள்ளன. ஊரில் பல பெண்களுக்கும் இந்தத் தொழிற்சாலையின் ஊடாகப் பயனடையும் நிலை ஏற்படும்.

சரோஜினியின் உழைப்பும் இந்தத் தொழிற்சாலையும்தான் அவரையும் அவரது குடும்பத்தை யும் காப்பாற்றுகின்றது. தொழில்பற்றிய பேச்சுக்கு இடையே வழக்கமான கேள்வியான "உங்கள் கணவர் என்ன செய்கிறார்?" எட்டிப் பார்த்தபோது, காணாமலாக்கப்பட்ட அவரது நினைவுகள் அவர் கண்களின் ஓரத்தைக் கசிய வைக்கின்றன.

தமது குடும்பங்களுக்காக இந்தப் பெண்களும் மெழுகுதிரிபோல் உருகிக் கொண்டுதானிருக்கிறார்கள்.

## முகக் கவசங்களுக்கு நன்றி!

கொரோனா பரவி வருகிறது என்று பேச்சு எழ ஆரம்பித்தபோது வாய்க்குள் நுழையாதிருந்த கொரோனா என்கிற வார்த்தை இப்போதெல்லாம் பலருக்கும் மனனமாகிவிட்டது. வெளியுலகு முழுதும் பலவேறு தரப்பட்ட மக்களும் முகக் கவசங்களை அணிந்து திரிந்த போது, அதை ஒளிப்படங்களில் மாத்திரமே பார்த்துப் பழக்கப்பட்ட, கிண்டலடித்த நம்மவர்கள் எல்லோரும் தற்போது முகக் கவசங்களுடன்தான் உலா வருகின்றார்கள்.

முகக்கவசங்களுடன் வீதிகளில் திரிகிறவர்களை, அறிந்தவர் - தெரிந்தவர்களை, உறவினர்களை யாரென்று இனம் காண முடியாத நிலையொன்று உருவாகிவிட்டது. வாயையும் மூக்கையும் மூடி அணியப்படுகின்ற இந்த முகக் கவசங்களால் வாகனங்களில் பயணித்துக் கொண்டிருக்கும்போதே வெற்றிலையை மென்று துப்புபவர்களின், புகைப்பவர்களின் செயற்பாடுகள் ஓரளவுக்காவது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர முடிந்துள்ளது போலும்.




வாயை மூடியணியப்படுகின்ற இந்த முகக் கவசங்களால் வாயை மூடிப் பேசுகின்ற நிலை உருவாகியுள்ளது. இதனால் வாயால் விளைகின்ற வினைகள் பல குறைவடைய வாய்ப்புண்டுதான். இந்த முகக் கவசத்தால் பாதிக்கப்பட்டிருப்பது இவர்கள் மட்டுமல்ல. முக அலங்காரத்தில் உச்சம் காட்டும் நம் ஊர்ப் பெண்களும்தான். முகக் கவசத்தால் மூடப்படுகின்ற மூக்கு, வாய் தவிர்த்துக் கண்ணுக்குத் தாவியுள்ளது அவர்களின் மேக்கப்.

என்னதானிருந்தாலும் கொரோனாவைத் தடுக்கிறதோ இல்லையோ வெற்றிலை மற்றும் புகைத்தல் உள்ளிட்ட பலவற்றைக் குறைத்ததற்காக முகக் கவசங்களுக்கு நாம் நன்றி சொல்லியாகவேண்டும்

# ஆறாவது குண்டு

நெடுங்கதை அத்தியாயம் 04

**கலியுக பித்தன்**



அவனது கண்கள் இயல்பிலும் நான்கு மடங்கு விரிந்தன. வெளியிலிருந்த மழை வானத்தை போல அவன் முகமும் நன்றாக கறுத்திருந்தது. அடிக்கடி தொண்டைக்குழிகள் மேலும் கீழும் ஏறி இறங்கின. இதயத்துடிப்பு அவன் செவிகளில் தெளிவாகக் கேட்டது. கைகால்கள் தன்னிச்சையாக நடுங்கத் தொடங்கின. அங்கே வைக்கப்பட்டிருந்த கடதாசி பொட்டலத்தை நோக்கி அச்சத்துடன் நகர்ந்து, அதனருகே முழங்கால்களை மடித்து அமர்ந்தான். பொட்டலத்தை எடுத்து பிரிக்கவா இல்லை பொலிசுக்குத் தகவல் கொடுப்பதா என்று அவன் முடிவு எடுப்பதற்குள், அந்த மாயாவி கொடுத்த பத்து நிமிட அவகாசம் முடியவே, அவனிடம் இருந்து ராகுலுக்கு அழைப்பு வந்தது.

‘என்ன ராகுல் சேர்! பொட்டலம் இருக்குதா?’

‘ஓ....ஓ.....ம்....’ சொல்லி முடிப்பதற்குள் மூன்று தடவை எச்சிலை விழுங்கி கொண்டான்.

‘இதுக்கே இப்பிடி எண்டா, அந்த பொட்டலத்தை திறந்து பார்த்து, அதுக்கு பிறகு அடுக்கடுக்கா வாற பிரச்சினைகளை எப்டி சேர் சமாளிக்கப் போறீங்க...?’ கேலிச் சிரிப்போடு, சிறு அதட்டல் அந்த குரலில் தெரிந்தது.

யாரோ கைகளையும், கால்களையும் கட்டிப்போட்டு, கண்களில் சிறு ஊசியால் அணுவணுவாக குத்துவதை போன்று ராகுல் துடித்தான்.

‘எதுக்கு என்னை இப்பிடிச் சித்திரவதை பண்றீங்க’ சோகம் தோய்ந்த குரலில் கேட்டான்.

‘ஹா... ஹா... நான் முதலில சொன்னதைத் தான் திரும்பவும் சொல்றன் மிஸ்டர் ராகுல்... இதுக்கே இப்பிடி எண்டா இனிமே வாறது களை எப்படி சேர்... ஹா... ஹா....’

‘எனக்கு எதுவுமே புரிய மாட்டேங்குது’

‘இட்ஸ் யஸ்ட் கர்மா தான் ராகுல் சேர்!’

‘என்ன கர்மா, புரியாத மாதிரியே பேசுறீங்களே’

பதில் இல்லை...

‘ஹலோ சேர்.. ஹலோ ...’அந்த மர்மக் குரல் அறிவித்தல் இன்றி தன் இணைப்பை அறுத்து கொண்டது. தலை, கால் தெரியாமல் குழம்பி போய்க் கிடந்தான் ராகுல்.

சுழன்று அடிக்கும் புயல் காற்றிலே உயர்ந்த கோபுர உச்சியிலே தனித்துவிடப்பட்டவனாய் தவித்துக் கொண்டிருந்தான். கோபுரத்தில் இத்தனை தெய்வங்கள் இருந்தும் ஒரு தெய்வத்தின் கண்களுக்குக் கூடவா இந்த அப்பிராணியைத் தெரியவில்லை. மனசுக்குள் புழுங்கிக் கொண்டான்.

தர்மசங்கடமான இந்த தருணத்தில் அவனுக்கு தேவைப்பட்டது எல்லாம் சிறிய ஆறுதல் ஒன்றுதான். அந்த ஆறுதல் தன்னுடைய பயணப்பையில் உண்டு என்று அவன் உள்மனம் உரக்கச் சொல்லிற்று. சற்றுத் தெளிவோடு எழுந்து, தன்னுடைய பயணப்பையைத் திறந்து ஒரு சிறிய கவரை எடுத்து அதைப் பிரித்துப் பார்த்தான். அங்கே அவன் பத்திரப்படுத்தி வைத்திருந்தது காணாமல் போயிருந்தது. பதறியடித்து அறை முழுதும் தேடத் தொடங்கினான்.

• • •

‘என்ன சேர், அந்த ரூமுக்கு போயும் நமக்கு எதுவுமே சிக்கலையே’ ஏமாற்றத்தோட சந்துரு சொன்னான்.

> அடிமட்ட கிராமத்தில் பிறந்து, பின்தங்கிய வாழ்க்கை வாழ்ந்து இறந்து போவதில் எனக்கு உடன் பாடில்லை. அடுத்த கட்டத்துக்கு என்னையும் எங்கள் கிராமத்தையும் கொண்டு செல்ல வேண்டும். இங்கேயே இருந்தால் அதைச் செய்ய முடியாது என்று எனக்கு நன்றாகவே தெரியும். அதனால்தான் நான் கொழும்புக்குச் செல்கிறேன்.

‘சந்துரு! எல்லாமே நமக்கு உடனடியாக் கிடைக்காது. சில நேரங்களில கிடைக்கேல்லையே எண்டு தவிப்போம். ஆனா நமக்குத் தேவையானது அங்கேயேதான் கிடக்கும்’ நிதானமாக கவிந்த் சொல்ல,

‘அப்போ நான் சரியா சேர்ச் பண்ணேல்ல எண்டு சொல்றீங்களா சேர்’ ஆச்சரியமா கேட்டான் சந்துரு.

‘ஹா... ஹா... நான் உங்களுக்கு முந்திட்டேன்னு சொல்றன் மிஸ்டர் சந்துரு’ அப்டி எண்டா.... அந்த ரூம்ல...’

‘யெஸ் சந்துரு, அந்த ரூம்ல நமக்கு ஒரு துருப்பு கிடைச்சிருக்கு’ புன்னகையோடு கவிந்த் சொன்னான்.

‘யூ ஆர் ப்ரிலியண்ட் சேர்..’ பூரிப்போடு புகழ்ந் தான் சந்துரு.

‘வெயிட்.. வெயிட்.... அந்தத் துருப்பு நமக்கு பயன்படுமா, அப்டிப் பயன்பட்டா எந்த வகையில அது நம்ம கேசுக்கு உதவப் போகுது எண்டு எனக்குச் சொல்ல தெரியல.’

மீண்டும் சந்துருவின் முகத்தில் ஏமாற்றம் படர்ந்து போய் இருக்க அவன் அமைதியானான். கவிந்த் அண்ணாந்து பார்த்து ஏதோ யோசனையில் தன்னை மூழ்கடித்து கொண்டிருந்தார்.

‘அது என்ன மாதிரி துப்பு எண்டத நான் அறியலாமா?’ உயரதிகாரிக்கு கொடுக்க வேண்டிய மரியாதையைக் கொடுத்தே கேட்டான் சந்துரு.

‘அது உங்களுக்கு தெரியக் கூடாத ஒண்டெண்டா நான் அதைப் பற்றி உங்களுக்கு மூச்சும் காட்டியிருக்க மாட்டேன்’ முறுவலித்து கொண்டே சொல்லி சந்துருவின் தோளை நம்பிக்கையோடு தட்டிக் கொடுத்தார் கவிந்த்.

‘சரிதான் சேர் என்றாலும்....’ லேசாக இழுத்து பாதியிலையே நிறுத்தி கொண்டான்.

‘அங்கே ஒரு லெட்டர்கிடைச்சது’ என்று சொல்லிக் கொண்டே லெட்டரை சந்துரு கையில் திணித்தான் கவிந்த்.

‘அன்புள்ள ராகுலுக்கு! இந்த விஷயத்தை நேராக உங்களிடம் சொல்லும் தைரியம் எனக்கு இல்லை. அதனால் தான் லெட்டரில் எழுதிவிட்டு செல்ல முடிவெடுத்தேன்.

இந்த அடி மட்டக் கிராமத்தில் பிறந்து, பின்தங்கிய வாழ்க்கை வாழ்ந்து இறந்து போவதில் எனக்கு உடன்பாடில்லை. அடுத்த கட்டத்திற்கு என்னையும் எங்கள் கிராமத்தையும் கொண்டு செல்லவேண்டும். இங்கேயே இருந்தால் அதைச் செய்ய முடியாது என்று எனக்கு நன்றாகவே தெரியும். அதனால்தான் நான் கொழும்புக்குச் செல்கிறேன்.

அங்கு என்னையும் வளர்த்து, எங்கள் கிராமத்தையும் வளர்த்துக்கொள்வதற்கான முயற்சியில் இறங்கிவிடப் போகிறேன். ஊரவர்களுக்குச் சொல்லி புரிய வைப்பது கடினம். அதனால்தான் உங்களுக்கு மட்டும் சொல்லிவிட்டுப் போகிறேன். ஓடுகாலி நாய் என்று ஊர் சொன்னால் கவலையில்லை. நீங்களும் என்னை அப்படி எண்ணி விடக் கூடாது என்பதற்காகவே இந்த லெட்டர். முடிந்தால் காத்திருங்கள்..

காதலுடன் உங்கள் ‘ரஸ்விகா’ என்று முடிந்தது அந்தக் கடிதம்.

லெட்டரை வாசித்து முடித்த சந்துரு ‘சேர் இந்தப் பெயர் ........’அவன் சொல்லி முடிப்பதற்குள் ‘யெஸ் மிஸ்டர் சந்துரு, யூ ஆர் கரெக்ட், நம்ம கேஸ்ல சம்மந்தப்பட்ட பெயர்தான் என்றான் கவிந்த்.

(தொடரும்)

# சுயமாகச் சிந்திக்கும் பெண்கள் மீது ஏன் பயம்?

நவீனா

புராணப் பெண் கதாபாத்திரங்களில் மிகவும் புகழ்வாய்ந்தவள் மெடூசா. ஆனால், அவளுக்குக் கிடைத்திருக்கும் புகழ்ச்சி முற்றிலும் எதிர் மறையானது. நீர்க் கடவுள் மீது அவள் காதல் வயப்பட்டதால் சபிக்கப்பட்டு ரத்தக் காட்டேரியாகி, முடியெல்லாம் பாம்பாக மாறி, பச்சை நிறத்தில் கோரமான உருவமடைகிறாள். அவளது முகத்தைப் பார்க்கும் எவரும் கல்லாக மாறிவிடுவார்கள் என்கிறது கிரேக்கப் புராணம். இதுவரை ஆண்கள் தவிர எந்தப் பெண்ணும் மெடூசாவால் கல்லாக மாறியதாகக் குறிப்புகள் இல்லை; அவளோடு உறவு கொண்டு விலகிய காதலனான நீர்க்கடவுளுக்கு எந்தத் தண்டனையும் வழங்கப்படவில்லை. 'நீங்கள் மெடூசாவைக் காண, அவளை நேருக்கு நேர் மட்டுமே பார்க்க வேண்டும். அவள் ஒரு கொலைப் பாதகியல்ல. அவள் அழகானவள். மேலும், அவள் சிரித்துக்கொண்டிருக்கிறாள்' என்கிறார் ஹெலன் சிக்ஷ. இதுவரை மெடூசாவை நேரில் பார்த்தவர்கள் அனைவரும் கல்லாகிவிட்டனர் என்றால் மெடூசாவின் கோரமான உருவத்தைப் பற்றிக் கல்லாகிப்போனவர்களால் இந்த உலகத்துக்கு எப்படிச் சொல்லியிருக்க முடியும்?

ஆகப், பொய்யான பரப்புரைகளால் ஒடுக்கப்பட்டாள் மெடூசா.

நம் ஊரிலும் இப்படி ஒரு பெண் இருக்கிறாள். தமிழ் இலக்கியங்களில் சேக்கிழார் புராணம் தொட்டு இன்னும் பலருடைய எழுத்துகளில் தோன்றும் பழையனூர் நீலிதான் அவள். நமக்கு மிகவும் பரிச்சயமானவள். அவளுக்கென்று தனியாகக் கோயில் எழுப்பி வழிபட்டாலும் 'நீலிக்கண்ணீர்' என்ற சொல்லாடல் மூலம் வேஷக்காரியாகவே நமக்கு அறிமுகப்படுத்தப்பட்டிருக்கிறாள். தன்னைக் கொன்ற கணவனைப் பழிவாங்கத் துடிப்பவளாவும், பிசாசாக மாறி மரங்களில் தொங்கிக்கொண்டிருந்தவள் எனவும் சித்திரிக்கப்பட்டிருக்கிறாள். நீலியிடமிருந்து அவளது கணவனைக் காப்பாற்ற முடியாமல்போன தற்காக எழுபது ஊர்களின் தலைவர்கள் தீயில் இறங்கியதாக பழையனூரின் கல்வெட்டுக்குறிப்பும்கூட நமக்குச் சொல்கிறது. இந்த இரண்டு புராணக் கதைகளிலும் பெண்களை ரத்தக்காட்டேரியாகவும் பிசாசாகவும் சித்திரிக்கும் அளவுக்கு அந்தப் பெண்கள் அப்படி என்ன குற்றம் இழைத்தார்கள்? மனதுக்குப் பிடித்த ஓர் ஆணை வாழ்க்கைத் துணையாகத் தெரிவு செய்ததும், தனக்கு இழைக்கப்பட்ட அநீதியை எதிர்த்துக் குரல் கொடுத்ததும் குற்றங்களா? அவர்களுக்கு நிகழ்ந்த கொடூரங்களைக் கல்லைக் கட்டிக் கடலில் இறக்கிவிட்டு, அவர்களின் இன்னொரு பக்கத்தை மட்டும் மிகைப்படுத்திப் பேசுவது என்ன நியாயம்?

திருமணம் எனும் கலாச்சார நடவடிக்கை முற்காலந்தொட்டு சாதி, சமய வேறுபாடுகளெல்லாம் உருவாகும் முன்னரே பெண்களை ஒடுக்குவதற்கான கட்டமைப்பாக இருந்து வந்ததை மெடூசாவின் சாபம் வழியாகப் புரிந்து கொள்ளலாம். இவ்வாறு ஓர் ஆணின் மீது காதல் வயப்பட்ட பெண்ணை ஏறெடுத்துப் பார்க்கும் எந்த ஆணும் கல்லாக மாறிவிடுவான் என அச்சுறுத்தும் அளவுக்கு சுயமாகச் சிந்திக்கும் பெண்கள் மீது சமூகத்துக்குப் பயம் இருந்திருப்பதாகத் தோன்றுகிறது.

நீலியின் கதை திருமணத்துக்குப்பின் பெண்களுக்கு நிகழும் பிரச்சினைகளை எடுத்துக் காட்டுகிறது. பெண்ணுக்கு எதிராக இழைக்கப்படும் அநீதிக்கு நியாயம் கேட்பது அவளது வேலையாக இருந்திருக்கிறது. ஓர் ஆணின் இறப்புக்குச் சமூகம் பொறுப்பேற்கும்போது ஒரு பெண்ணின் இறப்பைத் தனி நபர் பிரச்சினையாகச் சமூகம் கருதுகிறது. நீலிக்குக் கோயில் எழுப்பியதையும், இந்தக் கதையைப் பல தலைமுறைகளுக்குக் கடத்தி பெண்களின் பழிவாங்கும் எண்ணம் அவர்களை அழித்துவிடும் என்று சொல்வதையும் திருமணத்துக்குப் பின் சாந்த குணத்தை மட்டுமே எந்தச் சூழலிலும் பெண்கள் கடைப் பிடிக்க வேண்டும் என்று பாடம் எடுப்பதற்காக நிகழ்ந்த அரசியலாகவும் பார்க்கலாம்.

## வெறும் பகல்

வானவன்

மண் பொசுங்கும்
கொடு வெயிலில்
நீண்டு செல்கின்ற தனித்த
தெரு முழுமையையும்
அந்தரித்தலைந்து அளந்து
திரிகிறது.

நின்றாறச் சிறுபுள்ளியளவு
நிழல் மையத்தை
அது தேடுகிறதா?

அண்ணத்திலொட்டிய
நாவுக்கு
சிறு துண்டு நீரையூற்ற
தேடுகிறதா??

உடல் கசகசத்து
ஆடைசொட்டும்
வியர்வையைக் காயவிட
சிறு கொடிதான்
தேடுகிறதா???

கேட்க ஒரு
சீவனுமுலவாத பொட்டல்
- தெருவில்
அலைந்தலைந்து
அந்தரித்துப் போகிறது.

அது எதைத்தான்
தேடுகிறது
பொசுக்கும் கொடுவெயில்
எக்காளிக்குமப் பொழுதில்????

கீற்று முகிலின் சிறுதுளிகூட
போய்மறைந்த பொழுதில்
நின்றாற முடியாத
நெடுந் தெருவில்
நானுந்தான்...

அலைவுற முடிகிறது.
முடிவுகள் ஏதுமற்று...

## நீரெனப்படுவது...

சி.ப.வேந்தன்

தேநீரின் வாசனை
ஒரு கொழுந்துக்காரியின் வியர்வையை
ஞாபகப்படுத்துவதில்லை என்பதாய்
நீ சொல்கிறாய்
கடலில் வாழ்ந்ததற்காக மீன்கள் உப்புக் கரிக்குமா
என்கிறேன் நான்
பாயாசத்தில் கடிபட்ட உலர் திராட்சை
பல்லிடுக்கில் வசிப்பதில்லை
என்கிறாய் நீ
ஆனாலும் ஒரு துளிப் பாயாசம் பெரும்
திருமணத்தையே ஞாபகப் படுத்தும்
என்றேன்
அரைஞான் கயிறு மறைந்திருப்பதே தர்மம் என்றதற்கு
தாலிக் கயிற்றுக்கு இடுப்பில் என்ன வேலை என்றேன்
இளநீரையும் தேங்காயையும் கொண்டாடு
குரும்பட்டிக்காகக் குறைபடாதே எனக் கற்பிக்கிறாய்
பூம்பாளையைப் பூச்சி அரிப்பது பற்றி
என்ன நினைக்கிறாய் என்றேன்
கற்பனைவாதம் எனக்குப் பிடிப்பதில்லை
எனச் சினக்கிறாய்...
பூவையும் வண்டையும் இணைத்தால் போதுமா?
காற்று மோதாமல் மொட்டு முகிழ்ப்பது
முறையில்லையே என்கிறேன்
மூளையில் முக்கால்வாசியைத் தின்றுவிட்டாயா
என ஏசுகிறாய்
சிலுவை என்பது மரம்தான் அதற்கென்ன மதிப்பு
பாடுகள் சுமந்தவன் அவன்தானே என்றதற்கு
ஒரு மரம் பாடுகள் பட்டுத்தானே சிலுவையாகிறது
மதமற்றவன் என என்னை வகை பிரிக்கிறாய்
நீளமாய் மௌனித்தாய்
ஏன் என்றேன்
நான் ஆறு போன்றவன் எவருக்காகவும் தேங்கி நின்று
குட்டையாக முடியாது என்றாய்
சரி குடிக்க ஒரு செம்பு தண்ணீர் கொடு
நான் நீர் போன்றவன்
ஏற்றுக் கொள்ளும் பாத்திரம்தான் என் வடிவம் என்றேன்
தண்ணீர்ச் செம்போடு வெறித்துப் பார்த்தபடி நின்றாய்
நான் நடந்தேன்
உனக்குத்தான் தேங்கி நிற்கத் தெரியாதே
உன் கண்ணீரைப்போல
கண்ணூறு வழிய பார்த்தபடியே நின்றாய்
ஒரு துளி நீர் தீட்டையே தொலைக்கிறது
நீ எம்மாத்திரம்...?



■ அஜந்தன்

"கானை மட்டுமே வைத்துக் கொண்டு விசாரணைகளைத் தொடரவேண்டிய கட்டாயம் காவல்துறையினருக்கு.



# ஒரு கான் விசாரணை பல கைதுகள்!

குற்றங்கள் பெருகிவிட்ட நிலையில் அவற்றை விசாரித்து, குற்றவாளிகளைப் பின்தொடர்வதும் பிடிப்பதும் எவ்வளவுக்கெவ்வளவு துன்பங்கள் நிறைந்ததோ அவ்வளவுக்கவ்வளவு கேட்பதற்கு அவை விறுவிறுப்புக்குக் குறைவில்லாதவை.

பல குற்றங்களில் அவற்றைச் செய்தவர்களைப் பிடிப்பதற்கான துரும்பு இலகுவில் கிடைத்துவிடாது. மிகச் சின்னதாக, நுட்பமானதாக அது இருக்கும். அதைக் கண்டடைவதும் நூல் பிடித்தால் போன்று அதைத் தொடர்வதுமே ஒரு விசாரணையாளரின் வெற்றியைத் தீர்மானிக்கும்.

குற்றவாளிகள் பெற்றோல் எடுத்து வந்த ஒரு கான் மட்டுமே ஒரு குற்றக் கும்பலைக் கைது செய்வதற்கான துரும்பாக இருந்தது என்றால் ஆச்சரியமாயில்லையா?

யாழ்ப்பாணம், உரும்பிராயில் ஒருநாள் காலை வேளையில் வீடு ஒன்றினுள் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த ஹயஸ் வான், புதுரக மோட்டார் வண்டி என்பன திடீரென உள்நுழைந்த கும்பல் ஒன்றினால் எரித்துச் சாம்பராக்கப்பட்டன. உட்பட வீட்டின் சாளரக் கண்ணாடிகள் அடித்து நெருக்கப்பட்டதுடன் முன் பக்கம் முழுவதும் பெற்றோல் ஊற்றியும் எரிக்கப்பட்டது.

2019ஆம் ஆண்டு இரண்டாம் மாதம் 20ஆம் திகதி இந்தச் சம்பவம் இடம்பெற்றது.

விசாரணைக்கு வந்த காவல் துறையினருக்கு ஒரே திகைப்பு. ஏனெனில் எந்தவிதக் காரணமும் இன்றி அந்த வாகனங்கள் எரிக்கப்பட்டிருந்தன. வீட்டில் இருந்தவர்களோ அப்பிராணிகள். அவர்களுக்கு யாருடனும் எந்தப் பிரச்





சினையும் இல்லை. எந்தக் கோப தாபங்களும் இல்லை.

விசாரணையாளர்களுக்கு எங்கே தொடங்குவது எப்படித் தொடங்குவது என்றுகூடப் பிடிபடாத நிலைமை. சம்பவம் குறித்த வழக்கு கோப்பாய் காவல் நிலையத்தில் பதியப்பட்டிருந்தபோதும் மாவட்டக் குற்றத் தடுப்புப் பிரிவுக் காவலர்களும் இந்த வினோத சம்பவம் தொடர்பில் விசாரணைகளில் ஈடுபட்டனர். எவருக்கும் எந்தத் துப்பும் கிட்டவில்லை.

சம்பவ இடத்தில் கிடைத்த தெல்லாம் ஒரு பெற்றோல் கான் மட்டுமே. அது வன்முறைக் கும்பலால் எடுத்து வரப்பட்ட ஒன்று. 5 லீற்றர் கொள்ளளவு கொண்ட அந்தக் கானில்தான் வன்முறையாளர்கள் பெற்றோலை எடுத்துவந்திருந்தார்கள்.

சம்பவம் நடந்த இடத்திற்கு அருகில் எங்கும் மறைகாணியும் (சி.சி.ரி.வி.கமாராக்கள்) இருக்கவில்லை. வீட்டில் இருந்தவர்களிற்கு வந்தவர்கள் யார் என்பது குறித்து ஒரு முன்யோசனைகூட இல்லை. வன்முறைக் கும்பலைச் சேர்ந்தவர்கள் தமது முகங்களை மூடிக் கட்டியபடி வந்திருந்ததால் முக அடையாளமும் தெரியவில்லை.

கிடைத்த கானை மட்டுமே வைத்துக்கொண்டு விசாரணைகளைத் தொடரவேண்டிய கட்டாயம் காவல் துறையினருக்கு. வன்முறைக் கும்பல் அருகில் உள்ள ஏதாவதொரு எரிபொருள் நிரப்பு நிலையத்தில் பெற்றோல் வாங்கிக்கொண்டுதான் இங்கு வந்திருப்பார்கள் என்று ஊகித்த காவலர்கள் அந்தத் திசையில் விசாரணைகளைத் தொடங்கினர். ஆனால் பலாலி வீதியில் இருந்த எந்தவொரு எரிபொருள் நிலையத்திலும் பயனுள்ள தகவல்கள் எவையும் அவர்களுக்குக் கிடைக்கவில்லை.

காவலர்கள் தமது விசாரணை வளையத்தை விரிவாக்கினார்கள். காங்கேசன்துறை (கேகேஎஸ்) வீதியில் உள்ள ஒரு நிலையத்தில் பணியாற்றும் ஓர் இளைஞன் அந்தக் கானை அடையாளம் பிடித்தான். மோட்டார் சைக்கிளில் வந்த இருவர் தமது நிலையத்திலேயே இந்தக் கானில் பெற்றோல் நிரப்பிச் சென்றார்கள் என்று உறுதிப்படுத்தினார்.

துப்பு மாட்டிய மகிழ்ச்சியில் உடனடியாக அந்த நிலையத்தின் மறைகாணிப் பதிவுகளை ஆய்வு செய்த காவலர்கள், கானுடன் வந்து பெற்றோல் நிரப்பியவர்களில் ஒருவரை அடையாளம் கண்டனர். அவர்கள் பல்சர் ரக மோட்டார் சைக்கிளில் வந்திருந்தனர். அவர்களில் ஒருவர் எந்தவிதக் கிலேசமும் இன்றி, தனது தலைக் கவசத்தைக் கழற்றி தலைமுடியைச் சிலுப்பிவிட்டுப் பின்னர் கோதிச் சரிப்படுத்திக்கொண்ட காட்சி தெளிவாகப் பதிவாகியிருந்தது. அவரது முகமும் தெளிவாகத் தெரிந்தது.

அந்த எரிபொருள் நிரப்பு நிலையத்தில் இருந்து உரும்பிராயில் சம்பவம் நடந்த இடத்திற்குச் செல்லக்கூடிய பாதைகளை ஆராய்ந்த காவலர்கள், அவற்றில் ஆங்காங்கே இருந்த மறைகாணிப் பதிவுகளையும் பெற்றுக் கொண்டனர். அவற்றின் அடிப்படையில் அந்த பல்சர் ரக மோட்டார் சைக்கிள் அந்த எரிபொருள் நிலையத்தில் இருந்து உரும்பிராய் வரை பயணித்ததை உறுதிப்படுத்தினர்.

காணொலிப் பதிவுகளில் முகம் காட்டிய இளைஞரைப் பற்றிய விசாரணைகளைத் துரிதப்படுத்திய காவலர்கள் சாவகச்சேரி, மட்டுவிலில் வைத்து அவரைக் கைது செய்தனர். அவரிடம் நடத்தப்பட்ட விசாரணைகளில் கிடைக்கப்பெற்ற தகவலின் அடிப்படையில் ஊர்காவற்றுறை, மண்கும்பான், யாழ். நகரம் ஆகிய இடங்களில் வசிக்கும் 20 முதல் 26 வயதுக்கு இடைப்பட்ட 8 பேரைக் கைது செய்தனர். சந்தேகநபர்களிடம் இருந்து 3 கூரிய வாள்கள், கஜேந்திரா கோடரி, சாதாரண கோடரிகள் இரண்டு என்பவற்றையும் மீட்டனர்.

இந்த வழக்கில் இருந்து தப்பிப்பதற்காக ஒரு லட்சம் ரூபாய் லஞ்சம் கொடுக்க முற்பட்டனர் என்றும் அவர்கள் மீது குற்றச்சாட்டுப் பதிவு செய்யப்பட்டுள்ளது. நீதிமன்றத்தில் முற்படுத்தப்பட்ட அவர்கள் அனைவரும் விளக்கமறியலில் வைக்கப்பட்டனர்.

விசித்திரம் என்னவென்றால், இவர்கள் தாக்குதல் நடத்திய வீட்டில் இருந்தவர்களுக்கும் இவர்களுக்கும் முன்பகை எதுவும் இல்லை என்பதுதான்.

இதற்கு முன்னர் அந்த வீட்டில் வாடகைக்கு இருந்த ஓர் இளைஞனுடன் தமக்கிருந்த பகையைத் தீர்ப்பதற்காக அவர் வீடு மாறியது தெரியாமல் அந்த வீட்டுக்கு வந்து அங்கு புதிதாகக் குடிவந்தவர்களின் வாகனங்களை எரித்தும் சொத்துக்களைச் சேதப்படுத்தியும் அட்டகாசம் புரிந்திருக்கிறார்கள்.

இனிமேல் வாடகைக்கு வீடு எடுக்கும்போது முதலில் இருந்தவர்கள் பற்றியும் தீர விசாரிக்க வேண்டும்போல... ■


## மியா கலிஃபாவின் மூக்குக் கண்ணாடி!



என்ன அது மியா கலிஃபாவின் மூக்குக் கண்ணாடி? அலாவுதினின் அற்புத விளக்குப் போன்றதோ? அல்லது போனால் அது என்னவாகவிருக்கும்?

மியா கலிஃபா என்பவர் லெபனானைப் பூர்வீகமாகக் கொண்ட பெண். தற்போது அமெரிக்காவில் வசித்து வருகிறார். அவரது மூக்குக் கண்ணாடியே தற்போது பிரபலமாகியுள்ளது. அதைவிட அவரும் பிரபலம். முதலில் அவருடைய மூக்குக் கண்ணாடிக் கதைக்கு வருவோம். அண்மையில் மத்திய கிழக்கு நாடான லெபனானின் தலைநகர் பெய்ரூட்டில் நடந்த அமேனியம் நைதரேற்று வெடிப்பில் பாதிக்கப்பட்ட தனது நாட்டு மக்களுக்கு உதவுவதற்காகத் தனது கண்ணாடியை ஏலத்தில் விட்டுள்ளார் மியா கலிஃபா. பெய்ரூட் வெடிப்பில் நூற்றுக்கும் அதிகமானோர் சாவடைந்தும், அதில் நான்காயிரத்துக்கும் அதிகமானோர் காயம் அடைந்தும் 3லட்சம்பேர் வீடிழந்தும் உள்ளனர். இந்த நிலையிலேயே அவர்களுக்கு உதவும்பொருட்டுத் தனது மூக்குக் கண்ணாடியை ஏலத்தில் விட்டிருக்கிறார் மியா கலிஃபா. தற்போது வரை அந்தக் கண்ணாடியை வாங்குவதற்கான தொகை ஒரு லட்சம் அமெரிக்க டொலர்களை எட்டியுள்ளது. ஏன் மியா கலிபாஃவின் கண்ணாடிக்கு இந்த விலை. மியா கலிஃபா அமெரிக்க ஆபாசப் படத் துறையின் முன்னாள் நடிகை. அதனால் தான் கலிபாஃவின் மூக்குக் கண்ணாடி இவ்வளவு ஏலத்தை எட்டியுள்ளதாம்! இவ்வளவு விலை கொடுத்து வாங்குபவர் இந்தக் கண்ணாடியை வைத்து என்னதான் செய்வாரோ....?

# சூரியன் ஏன் சிவக்கிறது?



காலையில் சூரியன் தோன்றும்போதும், மாலையில் அது மறையும்போதும் கண்ணைக் கவரும் சிவப்புக் காட்சி கொள்ளை அழகு. சில மணித்துளிகள் மாத்திரமே நீடிக்கின்ற அந்தச் சிவப்பழகுக்குக் காரணம் என்னவாக இருக்கும்? விளக்கம் சொல்கிறது அறிவியல்!

காலை, மாலைப்பொழுதுச் சூரியன் சிவப்பாக... அதாவது இளம் சிவப்பாக (செம்மஞ்சளாக) இருப்பதற்குக் காரணம் இரண்டு விடயங்கள் கூட்டாக நிகழ்வதாலேயே. அதன் போதான ஒளிச்சிதறல் தான் இப்படி மனதை வருடுகிறது. பூமியைச் சுற்றிப் படர்ந்துள்ள வளிமண்டலத்துக்குள் சூரியனின் ஒளிக் கதிர்கள் நுழையும் போது ஏற்படுகின்ற ஒளிச்சிதறல். இதைச் சரிவரப் புரிந்து கொள்ளவேண்டுமாகில், முதலில் நாம் ஒளியைப் பற்றிப் புரிந்துகொள்ள வேண்டும். சிவப்பு, செம்மஞ்சள், மஞ்சள், பச்சை, நீலம், கருநீலம், ஊதா - என 7 நிறங்கள் கலந்திருக்கின்ற சூரிய ஒளியில் சிதறல் ஏற்படுகிறது. ஆனால் அது சம அளவில் நடப்பதில்லை. ஒவ்வொரு நிறத்திற்கும் அலைநீளம் மாறுபடும். அதனால்தான் ஒவ்வொரு நிறத்தின் கலவையும் வெவ்வேறு மாதிரி தெரிகிறது. அதிலும் ஊதா நிறத்தின் அலை நீளம் மிகவும் குறைவானது. சிவப்பு நிறத்தின் அலை நீளம் மிகவும் அதிகமானது. இது ஒன்று.

மற்றையது வளி.

மனிதர்கள் சுவாசிக்கின்ற ஒட்சிசன் உள்ளிட்ட வாயுக்களின் அடுக்குகளைக் கொண்டது வளி மண்டலம். இதில் பல அடுக்குகள் இருக்கின்றன. அந்த வெவ்வேறு காற்று அடுக்குகள் வழியாகச் சூரியனின் ஒளிக்கதிர்கள் செல்லும்போது, வெவ்வேறு தின்மங்களைக் கொண்ட ஒவ்வொரு வாயுவின் வழியாகச் செல்லும்போது, பிரிந்தும், வளைந்தும், சிதறியும் செல்கிறது. வளி மண்டலத்தில் ஊசலாடிக் கொண்டிருக்கும் துகள்களும் இந்த ஒளிச்சிதறல்களை உள்வாங்கிப் பிரதிபலிக்கும். சூரியன் மறையும் போதும், உதிக்கும்போதும், வளி மண்டலத்தின் உயரத்தில் உள்ள அடுக்குகளை குறிப்பிட்ட ஒரு கோணத்தில் சூரியனின் கதிர்கள் கடக்கின்றன. அப்போதுதான் இந்த அழகுக் காட்சி கண்ணுக்குக் கிட்டுகிறது.

சூரியன் வானத்தின் உச்சியில் இருக்கும்போது, காற்று மண்டலத்தில் சிதறல் ஏதும் இல்லாமல் அதன் ஒளிக் கதிர்கள் வருகின்றன. வரும்போது அப்படியே கிரகிக்கப்படுவதால், ஒளியின் பிரதானமான நீல நிறம் மட்டும் வானாகக் கண்ணுக்குத் தெரிகிறது.

சூரியன் கீழ்வானத்தில் இருக்கும்போது, நீலம், பச்சை ஆகிய நிறங்கள் சிதறடிக்கப்படுகின்றன. செம்மஞ்சள் கலந்த சிவப்பு நிறம் நமது கண்களைக் கவர்கின்றது என்று விளக்குகிறார் கிரீன்விச் றோயல் அருங்காட்சியகத்தைச் சேர்ந்த வானியல் நிபுணர் எட்வர்ட் புளூமர். கொரோனா முடக்க நிலை காரணமாக வேறு வேலையில்லாமல் வானத்தை ரசிப்பவராக நீங்கள் இருந்தால் இந்த அவதானங்களைத் தினமும் நிகழ்த்தி வானத்தை ரசிக்கலாம். சூரியன் பிரகாசமாக இருக்கும்போது மழை பெய்தால், சூரிய ஒளி மழைத்துளிகளின் மீதும் படும்போது வெவ்வேறு அலைநீளத்துக்கு சிதறடிக்கப்படும். அதனால் எல்லா நிறங்களும் காற்று மண்டலத்தில் சிதறிவிடும். அதை வானவில்லாகவும் நீங்கள் காணலாம். 19 ஆம் நூற்றாண்டில் சூரிய ஒளியையும் வளி மண்டலத்தையும் நீண்ட நேரம் அவதானித்து லோர்ட் ரேய்லேய்ஜ் (*Lord Rayleigh*) என்பவர் வானத்தின் நீல நிறம் குறித்து அளித்த விளக்கமே இந்தத் தேடலுக்கு வழிவகுத்தது என்பதும் பரகசியம்.


லயன் காமிக்ஸ் முத்து காமிக்ஸ்
Lion Comics & Muthu Comics

உங்கள் மனங்கவர்ந்த காமிக்ஸ் புத்தகங்கள்!
இலங்கையிலும் விற்பனையாகின்றன!




யாழ்ப்பாணத்தில்
பாக்யா புத்தகசாலை - கொக்குவில்
ஸ்ரீலங்கா புத்தகசாலை - யாழ்ப்பாணம்

கொழும்பில்
பூபாலசிங்கம் புத்தகசாலை - வெள்ளவத்தை
கந்தையா அன்ட் சன்ஸ் - 357, காலிவீதி, பம்பலப்பிட்டி

தபாலில் பெற விபரங்களுக்கு (SMS மட்டும்) - 0769 355 944

https://www.facebook.com/tamilcomics/

லயன், முத்து காமிக்ஸ் குழும வெளியீடுகளை அனுமதியின்றி அச்சுவடிவிலோ மின்னிதழ் வடிவிலோ விற்பனை செய்தல், பரிமாறுதல் போன்ற நடவடிக்கைகள் காப்புரிமைச் சட்டப்படி தண்டனைக்குரிய குற்றமாகும்! – வெளியீட்டாளர்



Car For Sale



NISSAN SUNNY, 2000, reg 2003, B15 ,1290CC, Japan, White, AC, auto shutters, central lock, security alarm, AMW Maintenance, no accident history, 168000km. for sale Point Pedro

T.P: 0774694262




NKD TOWNSHIP

காணி விற்பனைக்கு
தலைமன்னார் வீதியில் மன்னார் நகருக்கு மிக அருகாமையில்
முன்பதிவுகளுக்கு

Perch ரூ.60,000 தொடக்கம்

077-75859365
077-9262225

30 அடி அகலமான உள்வீதிகள்
வங்கிக்கடன் வசதி
இலவச வீட்டு வரைபடம்
இலவச ஆலோசனை



# ஏட்டிக்குப் போட்டியாக மரம் நடும் பிரபலங்கள்!

கொரோனாப் பெருந்தொற்று அடிமட்ட மனிதர்களிடையே பரும் பாதிப்புகளை ஏற்படுத்திவருவது ஒருபுறமிருக்க, மேல் மத்தியதர மற்றும் மேல்தட்டு வர்க்கத்தினரிடையே தேவையற்ற பல பிரச்சினைகளையும் தோற்றுவிக்கிறது போலுள்ளது.


கொரோனா இடர்க் காலத்தில் மனிதர்கள் உணவுச் சேகரிப்பிலும், தமது தொழிலைத் தக்க வைப்பதிலும் ஈடுபட, மேல் வர்க்கத்தினர் தாம் சேர்த்து வைத்திருக்கின்ற பணத்தைச் செலவழிப்பதற்குத் தமக்குக் கிடைத்த பொழுதுபோக்குக் காலமாக அதைப் பயன்படுத்திக்கொண்டனர். ஓடிஓடி உழைத்துக்கொண்டவர்களுக்கு நல்லதொரு ஓய்வுகாலம் குடும்பங்களோடு செலவிடக் கிடைத்தது.

சினிமாத் துறையில் இருக்கும் பிரபலங்கள் இப்படி காலம் கடத்துவது குறித்த செய்திகள் ஊடகங்களில் எப்படியும் முக்கிய இடத்தைப் பிடித்துவிடுகின்றன. படப்பிடிப்புகள் இல்லாத நிலையிலும், தொழில் துறைகள் முடங்கிப்போயுள்ள நிலையிலும் பிரபலங்கள் பலரது முரண்பாடுகள் - நுள்ளுப் பிராண்டி கிள்ளுப் பிராண்டிகளும் ஊடகங்களில் அரங்கேறிக் கொண்டிருக்கின்றன. தமிழ்த் திரையுலகில், வனிதா விவகாரம்,





பொலிவூட்டில் சுஷாந் சிங் இறப்பையொட்டிய சம்பவங்கள் எனப் பல நடந்து வருகின்றன. இதன் தொடராகத் தற்போது தெலுங்கிலும், தமிழ்த் திரையுலகிலுமாக மரம் நடுகின்ற விவகாரம் ஒன்று பேசு பொருளாகியிருக்கிறது. வேலையில்லாது வீட்டிலிருக்கின்ற பிரபலங்கள் ஏட்டிக்குப் போட்டியாக மரம் நடத் தொடங்கியிருக்கிறார்கள் என்றும் சொல்லலாம். நடந்தது என்னவென்றால்... தெலுங்குத் திரையுலகின் முன்னணி நடிகரான மகேஷ் பாபு அண்மையில் தனது பிறந்த நாளைக் கொண்டாடியிருந்தார், அதன்போது மரம் ஒன்றை நாட்டிய அவர் நடிகர் விஜய், சுருதி ஹாசன் ஆகியோரையும் அவ்வாறு மரம் நடமுடியுமா? எனக் கேட்டுக் கொண்டார். மகேஷ் பாபுவின் சவாலை விஜய் ஏற்பாரா என ரசிகர்கள் மத்தியில் கேள்வியெழ... மகேஷ் பாபுவின் சவாலுக்குப் பதிலளிக்கும் விதமாக மரம் ஒன்றை நட்டு ஒளிப்படத்தையும் வெளியிட்டார் விஜய். இது பெருமளவில் பேசப்படும் விடயமானதும் அஜித் ரசிகர்கள் சும்மா இருப்பார்களா? அஜித் மரம் நட்டிருந்த பழங்கால ஒளிப்படம் ஒன்றைப் பதிவிட்டு விஜய் மரம் நடுவதற்கு வித்திட்டதே நமது தல அஜித் தான் என்று சொல்லிப் பெருமைப் பட்டுக்கொண்டனர். இது போக, சுந்தர பாண்டியன், தர்மதுரை, கடைக்குட்டிச் சிங்கம், ஜிகர்தண்டா, தெறி, பிகில் போன்ற படங்களில் நடித்த சௌந்தர ராஜா, மரக்கன்றுகளை நடுவது மட்டுமில்லாமல் அதை பாதுகாக்க வேண்டும் என்றும் தெரிவித்துத் தன் பங்குக்கு ஒரு மரம் நடும் ஒளிப்படத்தையும் வெளியிட்டார். உலக சுற்றுச் சூழல் தினத்தையொட்டி மரம் நடும் 'கிரீன் இந்தியா சேலஞ்ச்' என்ற திட்டம் ஆரம்பிக்கப்பட்ட தொடர்ச்சியாக இந்த விடயங்கள் அரங்கேறி வருகின்றது. எப்படியானாலும் நல்லது நடந்தால் நல்லதுதானே..!!





# என்நாளும் நலம் வாழ

மருத்துவர்: கந்தையா சோதிதாசன்

**மஞ்சள்** - மங்கையர் கொஞ்சும் மஞ்சள்



மஞ்ஞனைய கூந்தல் மடமாதே
மாநிலத்தில் மங்கையர் கொஞ்சும்
மஞ்சள் மகிமை கேள்
பொன்னாகும் மேனி பளபளக்கும்
கரப்பான், சொறி சிரங்கு, கண்டாலே ஓடும்.
கஞ்சா விசம், கடும் இருமல்தான் தீரும்
நுண்கிருமிநோய் எதிர்க்கும். பலம்பெருக்கும்.
அஞ்சுகமே வயிற்றுப்புண், வாய்வுத் தொல்லை
ஏதும் அண்டாது. இன்னும் கேள்
மிஞ்சாது உணவு இதன் மிகை ருசியால்
மஞ்சளினால் மங்கலமும் சேரும் உணர்.

மேகம் போன்ற கூந்தலை உடைய இளம் பெண்ணே இந்த உல கத்தில் பெண்களால் அதிகம் விரும்பப்படும் மஞ்சள் கிழங்கின் சிறப்புக் களைக் கேள்.

மஞ்சளை (கஸ்தூரி மஞ்சள்) முகத்திற்கு பூசிக்குளிக்க, முகத்தில் உள்ள மருக்கள் வடுக்கள் நீங்கி பொன்போலாகும். இதனுடன். குப்பைமேனி சேர்த்தரைத்து பூச சொறி சிரங்கு வேனில் கட்டிகள் குணமாகும்.

கஞ்சா உண்டால் ஏற்படும் மயக்கத்தையும் மஞ்சள் நீக்குகிறது.

பனங்கற்கண்டு, திப்பிலி, மிளகு, மஞ்சள் சேர்த்திடித்து பாலில் இட்டு அருந்த கடுமையான இருமலும் குணமடைகிறது.

இது நோயெதிர்ப்பு சக்தியினை தருவதோடு. தேக வலிமையையும் அதிகரிக்கும். கிளி போன்றவளே. இதனால் வாய்வு நீங்குவதோடு வயிற்றுப்புண்ணும் குணமாகிறது. உணவிற்கு நல்ல மணத்தையும் ருசியையும் கொடுக்கும் மஞ்சள் தமிழர் சமையலில் சிறப்பிடம் பெறுகிறது.

மேலும் இதைத் தண்ணீரில் கலந்து தெளிக்க வீட்டில் *மங்கலம் சேரும் என் பதையும் உணர்வாயாக!



*விழாக்களில் எடுத்துச் செல்லப்படும் மங்கல பொருட்களில் ஒன்றாக மஞ்சள் சேர்க்கப்படுகிறது.



# தண்ணியிலையும் அரசியலாம்! உண்மையோ?

கதிரேசன் காத்தவராயன்

அண்டைக்கொரு நாள் தம்பிராசர் கிளப்பிவிட்ட குடி தண்ணிப் பிரச்சினை மண்டையைப்போட்டுக் குடைஞ்சு கொண்டிருக்க, வழக்கம் போலை அதிலை... வாசிகசாலைப் பக்கம் போனன் பாருங்கோ.. அங்க தம்பிராசர் நிண்டார்.

“உன்ர நினைப்போட வாறன் நீ இஞ்ச நிக்கிறாய்! அதிசயமாயல்லே கிடக்குது!” எண்டபடியே அதிலை இருந்தன்.

“இஞ்சார் தம்பிராசா! இந்தத் தண்ணிப் பிரச்சினையிருக்கல்லே இதுக்கொரு தீர்வு வராதோ?” எண்டு நான் சொல்லி வாயை மூட முன்னம், “ஏனப்பா! கதிரேசு எலெக்சன் கிலெக்சன் ஏதாச்சும் கேக்கிற திட்டம்போலை உனக்கு?” எண்ட குரல் அங்கை ஓராள் வைச்சு வாசிச்சுக்கொண்டிருந்த பேப்பருக்குள்ளாலை கேட்டுது.

“அட துரையண்ணை! நீங்கள் இஞ்சயே இருக்கிறியள்!” ஆச்சரியத்தோட கேட்டன்.

“இருக்கிற குளங்களிலை தூரள்ளுவாரில்லை... வாய்க்காலுகளும் தூர்ந்து போச்சுது... எனிப் பத்தாததுக்கு நெல்லு வயலுகளுக்குள்ள எல்லாம் அரச திட்ட வீடுகள்... சின்ன மழைக்கும் வீட்டுக்குள்ள வெள்ளமெண்டு சனமும் அரசி யல்வாதியளும் பேப்பர்க்காரரும் சத்தம்போட்டுச் சண்டைக்குப்போய் சொட்டுத் தண்ணியையும் விடாமலுக்கு பைக்கோவாலை வெட்டிக் கடலுக்க விட்டுப்போடுகினம். தண்ணி தேங்கி நிண்டால்த்தானே நிலத்துக்குள்ள ஊறி இறங்கும்?” எண்டு சின்னத்துரையர் நிப்பாட்டினார்.

‘என்ன துரையண்ணை! தண்ணியைப் பற்றிக் கதைக்கிறன் நீங்கள் அரசியலைக் கொண்டு வாறியள்? என்னை வம்புக்கிழுக்காட்டி உங்களுக்குப் பத்தியப்படாது போலை?” எண்டன்.

“இல்லைக் கதிரேசு எல்லாம் அரசியலாகிப் போச்சுதல்லே? அது தான் சொன்னனான் ....” எண்டபடி பேப்பரை மடிச்சு அதுக்கு மேல கல்லை வைச்சபடி முழு நேரக் கதைக்குத் தயாரானார் துரையண்ணை.


ஆள் கிணத்துக்கு நிலையமெடுக்கிறதிலை வலு விண்ணன். எடுத்த நிலையங்களிலை நல்ல தண்ணிக்குப் பஞ்சமே வாரேல்லை. இப்ப இப்ப பிழைக்குதெண்டு ஒரு கதை அடிபடுகுது. ஆளிலை அந்த சக்தி குறைஞ்சு போச்செண்டும் கதை.

“துரையண்ணை! ஓண்டு கேப்பன் குறை நினைக்கக்கூடாது...” எண்டு ஒரு சின்ன இழுவையோடை... ‘என்னண்ணை உங்கட நிலையங்கள் ரண்டொண்டு பிழைச்சுப் போச்செண்டு கதையடிபடுகுது...அப்பிடியோ?” எண்டன் தயங்கினபடி.

துரையண்ணை ஒரு பார்வை பாத்திட்டு, “இஞ்சார் கதிரேசு அது தான் எனக்கும் ஒரே குழப்பமாக் கிடக்குது. ஊற்றுச் சரியாப் பிடிபடுகுதில்லை. அப்பிடிப் பிடிபடுகிறதுகளும் சவராய்த்தான் படுகுது...” எண்டு சொல்லத்தொடங்க, “தம்பிராசர் கிடந்தாத்தானே வர?” எண்டு குறுக்கிட்டார்.

நானும் துரையண்ணையும் கதையை நிப்பாட்டிப்போட்டு தம்பிராசற்றை பக்கம் திரும்பினம்.

“அண்டைக்கு நான் சொன்னதுதான் நிலத்தடித் தண்ணியெண்டிறது மண்ணுக்கடியிலை பாறையளிலை கிடக்கிற குழியளிலை தேங்கின தண்ணிதான். நீ துரையண்ணை அதுகளைத்தான் காட்டிக்குடுக்கிறனி. கிணத்துக்கெண்டாப் பறவாயில்லை... குழாயடிக்கிறதுக்குமல்லே காட்டுறாய்... இழு இழுவெண்டு இழுத்தெறியிறம். தேங்கின தண்ணி நெடுகவும் கிடக்குமோ? வத்தத்தானே செய்யும்... அதோட வத்திற இடத்துக்கு நிலத்துக்குக் கீழாலை கடல் வரும். தண்ணி உப்பாகாமல் என்ன செய்யும்? தண்ணியைத் தேக்கிறதுக்கும் வழியில்லை...” தம்பி ராசர் ஒரு மாதிரியாக மூச்செடுக்கிறதுக்காய் ஓய்ந்தார்.



“அப்ப உதுக்கு வழியொண்டு மில்லையோ?” எண்டு சினன்னத்துரையரும் கதைக்குள்ள புகுந்தார்.

“ஏனில்லை? நாட்டுக்குள்ள மழைத் தண்ணியைத் தேக்கி வைச்சால் அது வடிஞ்சு கீழுக்குப்போய் நிலத்தடித் தண்ணி நல்ல தண்ணியாயும் வத்தாத தண்ணியாயும் நிக்குமல்லே? அதுக்கல்லே பிரச்சனையாக் கிடக்குது” எண்டு துரையண்ணை சொல்ல, “இருக்கிற குளங்களிலை தூரள்ளுவாரில்லை... வாய்க்காலுகளும் தூர்ந்து போச்சுது... எனிப் பத்தாததுக்கு நெல்லு வயலுகளுக்குள்ள எல்லாம் அரச திட்ட வீடுகள்... சின்ன மழைக்கும் வீட்டுக்குள்ள வெள்ளமெண்டு சனமும் அரசியல்வாதியளும் பேப்பர்க்காரரும் சத்தம்போட்டுச் சண்டைக்குப்போய் சொட்டுத் தண்ணியையும் விடாமலுக்கு பைக்கோவாலை வெட்டிக் கடலுக்க விட்டுப்போடுகினம். தண்ணி தேங்கி நிண்டால்த்தானே நிலத்துக்குள்ள ஊறி இறங்கும்?” எண்டு சின்னத்துரையர் நிப்பாட்டினார்.

தம்பிராசர் அப்பாவித்தனமாகக் கேட்டார், “அண்ணை! கேணியளிலை நெற்பரப்பு நிலப்பரப்பு எண்டு ரண்டு பரிவாயாமல்லே உறுதியிலை எழுதிக்கிடக்கு.... நிலப்பரப்புதான் குடியிருப்புக்கு. நெற்பரப்பிலை குடியிருக் கேலாதமல்லே? அப்ப வீடுகள் கட்டுறதுக்கு அனுமதிச்சதிலையில்லே அண்ணை பிழை கிடக்குது? ஆரண்ணை அனு மதிச்சது? ஏன் அனுமதிப்பான்?”

“தம்பிராசு!.... அதுதான் அரசியல்... பிரச்சினையெண்டு ஒண்டுமில்லையெண்டால் அரசியலெண்டது சரிவருமோ? அதுதான் பிரச்சினை...” எண்டபடி எழும்பி நடக்கத் தொடங்கினன்.

## முருங்கை இலை முட்டைப் பொறியல்

நவீன அறிவியல் உலகமே வியந்து நிற்கின்ற சிறு விருட்சம் என்று முருங்கையைச் சொல்லலாம். முன்னோர்களின் வீடுகள் தோறும் பின் - அடி வளவுகள், வேலிகள் என்பனவற்றில் சாதாரணமாக வளர்க்கப்பட்டு வந்த முருங்கை அன்றைய நாள்களில் அன்றாடம் ஏதாவதொரு உணவுப் பொருளாக உள்வாங்கப்பட்டது. முக்கியமாக வறுத்து (வறை) உணவுடன் சேர்த்தனர். அத்தகைய முருங்கை இலையில் ஏராளம் ஊட்டச் சத்துகள் இருக்கின்றன என்று அறிவியல் உலகம் தாமதமாகவே கண்டறிந்தது. முருங்கையிலும் குறிப்பாக அதன் இலைகள் மிகவும் சத்தான பகுதி என்றும் அவற்றில் அத்தியாவசிய ஊட்டச்சத்துக்கள் கணிசமாக இருக்கின்றன என்றும் கூறி வளரும் நாடுகளில் ஊட்டச்சத்து மிக்க உணவாக முருங்கை இலையைப் பரிந்துரைத்தனர். அவற்றைக் உலர்த்திப் பொடியாக்கி மாத்திரைகளாக்கி வழங்கினர். அது ஒரு நல்ல வியாபாரம் என்று கருதிக்கொண்டு இப்போது வடக்கு, கிழக்கில் இருந்தும் முருங்கையிலை ஏற்றுமதியாகிக் கொண்டிருக்கிறது. ஆனால், நம்மவர்கள் மத்தியில் முருங்கை இலைப் பயன்பாடு இல்லாது வருகிறது. அதனால் அதை எப்படியாவது உணவில் சேர்த்துவிடவேண்டும் என்கிற ஆதங்கத்தில் இந்த உணவு.

தற்காலத்தில் முட்டையைப் பொரித்துண்பதை (ஒம்லேட்) பெரும்பாலானவர்கள் சாதாரணமாக்கிக் கொண்டுள்ளதால் அதனுடன் முருங்கை இலையையும் இணைத்து உணவாக்குவதையே முருங்கை இலை முட்டைப் பொரியல் என்கிறோம்.

### தேவையான பொருள்கள்

மூன்று முட்டைகள், கைப்பிடியளவான முருங்கை இலை, 2 தேக்கரண்டித் தேங்காய்ப் பால், ஒரு பெரிய வெங்காயம், 3 பச்சை மிளகாய்கள், சிறியளவில் இஞ்சி, சிறிதளவில் தேங்காய்த் துருவல், சிறிது சீரகம், ஒரு தேக்கரண்டி இறைச்சிச் சரக்குத் தூள், சிறிதளவு

மஞ்சள் தூள், மிளகு தூள், தேவையான அளவு உப்பு, எண்ணெய் - தேவையான அளவு

### எப்படிச் செய்வது?

முருங்கை இலையைக் கழுவிக் கொள்ளுங்கள். முட்டையை அடித்துப் பாலுக்குள் ஊற்றி நன்றாக அடித்து கலக்குங்கள்.

பெரிய வெங்காயம், பச்சை மிளகாய், இஞ்சி போன்றவைகளை சிறிதாக நறுக்கித் தேங்காய் துருவல், சீரகம் போன்றவைகளை சேர்த்து அரையுங்கள் (மிக்சி). அரைத்த பின்னர் அவற்றோடு முருங்கை இலை, சரக்குத் தூள் சேருங்கள். அத்துடன் மீதமிருக்கும் அனைத்து பொருள்களையும் சேர்த்து மீண்டும் இலேசாக அரையுங்கள். முட்டையையும், உப்பையும் சேர்த்துக் கலக்குங்கள். அதனுடன் அரைத்த பதார்த்தங்களையும் சேர்த்துக்கொள்ளுங்கள். வழமையாக முட்டை பொரிப்பதைப்போலப் பொரித்தெடுத்துக் கொள்ளுங்கள்.



# அகராதி பிடிச்சவன் பதில்கள்



**கே:** **சிறிராம்**, நல்லூர்
சமூக ஊடகத்தின் ஆதிக்கம் பற்றி என்ன நினைக்கிறீர்கள்?

**ப:** நான் என்ன நினைப்பது இருக்கட்டும். இங்கிலாந்தில் வெளிவரும் ஒரு ஆங்கிலப் பத்திரிகையில் கோல்ட்புறாக், டேர்பிஷயார் என்கிற ஒரு சிறு கிராமத்தைச் சேர்ந்த பீற்றர் வைற் என்பவர் "என் சொந்த சமூக ஊடகம்!" என்கிற தலைப்பில் சமூக ஊடகங்கள் பற்றிய அருமையான புரிதல் தரும் சிறு ஆக்கம் ஒன்றை எழுதியிருக்கிறார். முடிந்தவரைக்கும் அவரது உணர்வுகள் சிதையாத வகையில் தமிழில் தரமுயற்சிக்கிறேன் வாசித்துப் பாருங்கள்.

என்னிடம் கணினி ஒன்று இல்லை. ஆனால் முகப்புத்தகம் (பேஸ்புக்) மற்றும் கீச்சகம் (ருவிற்றர்) ஆகியன பற்றி நான் கேள்விப்பட்டிருக்கின்றேன். அதனால் அந்த இரண்டிலும் இயங்குபவர்களின் செய்பவற்றின் அடிப்படையில் நடந்துகொண்டு ஊரில் நண்பர்களைத் தேடிக்கொள்வது என்று முடிவு செய்தேன்.

ஒவ்வொரு நாளும் எனது தெருவில் நடந்துசென்று என்னைக் கடந்து செல்பவர்களை எல்லாம் இழுத்து வைத்து அவர்களிடம்.... நான் என்ன சாப்பிட்டேன், எப்படி உணர்ந்தேன், முதல் நாளிரவு என்ன செய்தேன், மிச்சமிருக்கும் நாளில் என்னென்ன செய்யப் போகின்றேன் என்பவற்றைப் பற்றியெல்லாம் சொன்னேன்.

என்னுடைய மனைவியினது, மகளினது, என் வீட்டு நாயினது, நான் வைத்திருக்கும் பூந்தோட்டம் பற்றியது, நான் விடுமுறையில் இருந்தபோது எடுத்தது என்று எல்லாப்படங்களையும் அவர்களிடம் காட்டினேன். முக்கியமாக நான் நீச்சல் குளத்தில் களித்த நேரத்தில் எடுத்த படங்களையும் அவர்களைப் பார்க்க வைத்தேன்.

அவர்கள் என்ன பேசுகிறார்கள் என்பதை உற்றுக்கேட்டேன். அவர்களை நான் "விரும்புகின்றேன்" (லைக்) என்று சொன்னேன். அவர்கள் பேசிய விடயங்களில் நான் ஆர்வப்பட்ட ஒவ்வொன்று குறித்தும் அவர்கள் என்னிடம் எதுவும் கேட்காதபோதும் நானாகவே எனது கருத்தைச் சொன்னேன். அது அவர்களுக்கு விருப்பமாக இருந்ததா இல்லையா என்பதைப்பற்றி நான் கவலைப்படவில்லை.

இவையெல்லாவற்றையும் செய்ததைத் தொடர்ந்து.... ஆம்! நான் வெற்றியடைந்தேன். என்னையும் நால்வர் தாமாகவே பின்தொடரத் தொடங்கினார்கள். அவர்கள் இரு காவல்துறையினர் (பொலிஸ்), ஒரு சமூகப் பணியாளர் மற்றும் உளவியல் துணையாளர்.

இதைவிட சமூக ஊடகங்கள் குறித்து நானும் ஏதாவது விளக்கம் சொல்லவேண்டுமா என்ன?

**கே:** **சசிகுமார்**, மட்டக்களப்பு
வடக்கு - கிழக்கில் தேர்தல் முடிவுகள் பற்றிய உங்கள் கருத்து?

**ப:** வாய்ப்புக் கேட்டவர்களுக்கு எல்லாம் மக்கள் அதைத் தாராளமாகக் கொடுத்திருக்கிறார்கள். இந்த வாய்ப்பைப் பயன்படுத்திக்கொண்டு ஒவ்வொரு கட்சியும் அடுத்த 5 வருடங்களுக்கு என்ன செய்யப்போகின்றன என்பதை நாம் இனிக் குந்தியிருந்து வேடிக்கை பார்க்க வேண்டியதுதான். எல்லோரும் சேர்ந்து தமிழர்களுக்கு வாய்க்கரிசி போடாத வரைக்கும் மகிழ்ச்சி. ஆனால், எனக்கென்னவோ அடுத்த பொதுத் தேர்தலின்போது தாம் சொன்னவற்றையெல்லாம் செய்யாது விட்டதற்கு அல்லது தங்கள் தோல்விக்கெல்லாம் மற்றைய கட்சிதான் காரணம் என்றும் குற்றச்சாட்டு மழைதான் பொழியும் என்று உள்ளே 'பட்சி' சொல்கிறது.

**கே:** **கரன்**, இணுவில்
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தனது தேசியப் பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினர் பதவியை அம்பாறை மாவட்டத்திற்குக் கொடுத்தது சரியா?

**ப:** வடக்கு கிழக்கின் 8 மாவட்டங்களில் 7 மாவட்டங்களுக்கும் தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் இருக்கின்றபோது அம்பாறைக்கு மட்டும் அது கிட்டாமல் போவது நியாயமில்லை. வடக்கு கிழக்கு இணைப்பு, தேசியம், தாயகம், தேசம் என்றெல்லாம் பேசிக்கொண்டு தமிழர்கள் அதிகம் நெருக்கடியையும் அச்சுறுத்தலையும் சவால்களையும் எதிர்கொள்ளும் ஒரு மாவட்டத்திற்கு நாடாளுமன்றப் பிரதிநிதித்துவம் வழங்கப்படுவதை எதிர்ப்பீர்களானால், அது எந்தக் காரணத்தை முன்னிட்டாக இருந்தாலும் அதற்குப் பின்னர் அவர்கள் அதற்குப் பின்னர் தமிழர் தாயகம், தேசியம் எல்லாம் பேசக்கூடாது.

**கே:** **தயாளன்**, வடமராட்சி
புரிந்தும் புரியாமலும் ஒரு ஜோக் சொல்லுங்கள் பார்க்கலாம்!

**ப:** ஒரு கணவனும் மனைவியும் உரையாடிக் கொண்டிருந்தார்கள். மனைவி கேட்டாள் "ஒவ்வொரு தடவை நான் திட்டும்போதும், எடுத்தெறிந்து பேசும்போதும் எப்படிக் கோபத்தைக் கட்டுப்படுத்துகிறீர்கள்?" - என்று, கணவன் அலட்டிக் கொள்ளாமல் பதில் சொன்னான். "மலசல கூடத்தைச் சுத்தம் செய்வேன்" என்றான். மனைவிக்கோ ஆச்சரியம் "கழிப்பறையைச் சுத்தம் செய்வது எப்படிக் கோபத்தைத் தணிக்கும்" என்று கேட்டாள். கணவன் அதற்கும் அலட்டிக்கொள்ளாமலேயே பதில் சொன்னான். "உங்கள் பற்தூரிகையைக் கொண்டுதான் கழிப்பறையைச் சுத்தமாக்குவேன்"

உங்கள் கேள்விகளை
**551 A, கஸ்தூரியார் வீதி,**
யாழ்ப்பாணம்
என்கிற தபால் முகவரிக்கு
அல்லது
**shemman.redsoil@gmail.com**
என்ற மின்னஞ்சல் முகவரிக்கு
அனுப்பி வையுங்கள்.


யாழ்ப்பாணம்
சுன்னாகம் 021 224 2022
பருத்தித்துறை 021 492 3201
கச்சேரி 021 222 6699
ஆவரங்கால் 021 222 6688
தெல்லிப்பளை 021 224 3737
சாவகச்சேரி 021 227 0700
நெல்லியடி 021 300 6550
கிளிநொச்சி 021 228 5505
விசுவமடு 021 320 1515
பூநகரி 021 320 1818
முழங்காவில் 021 300 6544
வவுனியா 024 222 7777
மன்னார் 023 225 1656

கிருபா லேணர்ஸ்
கிருபா லேணர்ஸ் KIRUBAA LEARNERS
தொலைபேசி இல.
021 222 4353
021 492 3200
071 454 6960


அரச அங்கீகாரம் பெற்ற கனரக
(A) சாரதிப் பயிற்சிப் பாடசாலை
கல்விச் சேவையுடன் ஒன்றிய நிறுவனம்

☆ குறிப்பிட்ட காலப்பகுதியில் விரைவான சாரதி அனுமதிப்பத்திரம்.
☆ மும்மொழிகளிலும் வாகனப் பயிற்சி.
☆ இரவு நேர வாகனப் பயிற்சி.
☆ எழுத்துப் பரீட்சைக்கு விசேட வீதி ஒழுங்கு வகுப்புக்கள்.
☆ தவணை முறைக் கட்டணங்கள்.
☆ அசோக் லேடன் பஸ் மூலமான கனரக வாகனப் பயிற்சி.
☆ சகல கிளைகளிலும் பயிற்சி வகுப்புக்கள்.

தலைமைக் காரியாலயம்
226, கஸ்தூரியார் வீதி
யாழ்ப்பாணம்.

யாழ்ப்பாணம், வவுனியா, மன்னார், கிளிநொச்சி
வட மாகாணத்தின் முதல்தர சாரதி பயிற்சிப் பாடசாலை

# சொன்னார்கள்! செய்தார்கள்!



– வி.அருணாசலம்

> அனைத்து அரசியல் கட்சிகள், சுயேச்சைக் குழுக்கள் என எல்லாமே இசை நிகழ்ச்சிகளை நடத்தியும் பிரமுகர்களை அழைத்துப் பேச வைத்தும், ஆங்காங்கே தொண்டை கிழியக் கத்திக் கொண்டும் இருந்தபோது 'மகிந்த குடும்பத்தின் மூளை' என வர்ணிக்கப்படும் பசில் ராஜபக்ச மிக அமைதியாகத் தனது தேர்தல் பரப்புரையைத் தொலைக்காட்சி ஒளிபரப்பு மூலம் நடத்தி முடித்தார்.

2.8.2020 அன்று நள்ளிரவுடன் 2020ஆம் ஆண்டுப்பொதுத் தேர்தலுக்கான பரப்புரைக் கூட்டங்கள் முடிவுக்கு வந்தன. அன்றிரவு பத்து மணி தொடக்கம் 12 மணி வரையில் இலங்கைச் சுயாதீன தொலைக் காட்சியில் நடந்த 'தீரணய' என்கிற நிகழ்ச்சியில் (தீர்மானம் எனத் தமிழில் அர்த்தப்படும்) பொதுஜன பெரமுன கட்சியின் நிறுவனரான பசில் ரோஹன ராஜபக்ச சிறப்புநேர்காணல் ஒன்றை வழங்கிக் கொண்டிருந்தார். சுயாதீன தொலைக்காட்சியில் ஒளிபரப்பான அந்த நேரடி ஒளிபரப்பு சம நேரத்தில் இலங்கை ரூபவாகினி அலைவரிசையிலும் ஒளிபரப்பானது. கோவில் திருவிழாக்களும், பொதுவான நிகழ்ச்சிகள் - கொண்டாட்டங்களும் ஒரே நேரத்தில் பல தொலைக்காட்சிகளில் ஒளிபரப்பாவதைப்போல நடந்தது இந்த இணை ஒளிபரப்பு. இது குறித்துத் தமிழ் ஊடகப் பரப்பில் ஒரு வார்த்தையாவது வெளிவந்ததாகத் தெரியவில்லை.

**மகிந்த குடும்பத்தின் மூளை**

பொதுஜன பெரமுன உட்பட அனைத்து அரசியல் கட்சிகளும் சுயேச்சைக் குழுக்களும் இசை நிகழ்ச்சிகளை நடத்தியும் பிரமுகர்களை அழைத்துப் பேச வைத்தும், ஆங்காங்கே தொண்டை கிழியக் கத்திக் கொண்டிருந்தபோது மகிந்த குடும்பத்தின் மூளை என வர்ணிக்கப்படும் பசில் ராஜபக்ச மிக அமைதியாகத் தனது தேர்தல் பரப்புரையை இந்தத் தொலைக்காட்சி ஒளிபரப்பு மூலம் நடத்தி முடித்தார்.

இலங்கையிலுள்ள அரசியல் வாதிகளில் மிகச் சிறந்த ஒழுங்கமைப்பாளரும் இவரே. மக்கள் அமைதியாக இருக்கும்பொழுது தனது கருத் துகளைக் கூறுவதற்காக அந்த நேரத்தை அவர் தெரிவு செய்திருக்கலாம். தான் அதிபராகத் தெரிவானால் நாட்டுக்கு என்னவெல்லாம் செய்ய விருக்கிறேன் என்று 2019ஆம் ஆண்டு நவம்பர் மாதத்தில் அதிபர் தேர்தல் நடைபெறுவதற்கு ஒரு சில நாள்களுக்கு முன்பு தெரண தொலைக்காட்சியின் அரசியல் ஆய்வுத் தளமான 360 பாகையில் கலந்துகொண்ட அன்றைய அதிபர் வேட்பாளரான தற்போதைய அதிபர் கோத்தாபய ராஜபக்ச கூறினார். இரவு 10.30 மணிக்கு தொடங்கிய அந்த நிகழ்ச்சியை அநேகமாக எல்லாச் சிங்கள மக்களும் வீட்டில் இருந்த படி பார்த்தார்கள். அதன் பின்னரான தேர்தல் முடிவில் கோத்தபாய ராஜ பக்ச அமோக வெற்றியீட்டியிருந்தார்.

**தமக்குத் தாமே சூனியம் வைக்கும் வேட்பாளர்கள்**

2019ஆம் ஆண்டுத் தேர்தலையொட்டிக் கோத்தாபய ராஜபக்ச தொலைக்காட்சியில் பேசுவதற்கு முன்னர் சஜித் பிரேமதாச, அனுரகுமார திஸநாயக்கா ஆகியோர் தம்முடன் நேரடி விவாதத்துக்கு வருமாறு கோத்தாபயவை அழைத்திருந்தார்கள். அவ்வாறான நிகழ்ச்சிகளில் மக்களின் கவனம் சிதறடிக்கப்பட்டுவிடும் என்பது ராஜபக்ச தரப்புக்கு நன்கு தெரிந்திருந்ததால் அது தவிர்க்கப்பட்டு, மற்றவர்களைப் பற்றிப் பேசுவதை விடுத்துத் தாம் என்ன செய்யவிருக்கிறோம் என்று உறுதியுடன் இறுதிப் பேச்சை முன்வைத்தார் கோத்தாபய. முடிவாக மக்கள் மத்தியில் அவரது வெற்றி உறுதி செய்யப்பட்டது. தமிழ்த் தலைவர்கள் போல ஊடகங்களில் விதண்டாவாதம் நடத்தித் தமக்குத் தாமே சூனியம் வைக்கும் வேலைகளை அவர்கள் செய்திருக்கவில்லை.

**பசிலின் வெற்றிக் கணிப்பு**

இரண்டாவதாகத் தெரிவாகும் வேட்பாளரைவிட 15 லட்சம் மேலதிக வாக்குகளால் கோத்தபாய ராஜபக்ச வெற்றியீட்டுவார் என்று 2019 ஆண்டுத் தேர்தலுக்கு 3 நாள்கள் இருக்கையில் பசில் ராஜபக்ச கருத்து வெளியிட்டார். முடிவில் 13 லட்சத்து 60 ஆயிரம் வாக்குகளால் கோத்தபாய ராஜபக்ச வெற்றியீட்டினார்.

பொதுத் தேர்தலுக்கு முன்னர் தீரணய என்ற நிகழ்ச்சியில் கலந்துகொண்ட பசில் ராஜபக்ச அன்று அதிபர் தேர்தலுக்கு முன்னர் கூறியதைப்போன்றே இப்போதும் எதிர்வு கூறலை வெளியிட்டார். பொது ஜன பெரமுன கட்சி 150 ஆசனங்களைப் பெறும் என்றும் மூன்றில் இரண்டு பெரும்பான்மைப் பலத்தைக் கோத்தபாய ராஜபக்சவுக்கு வழங்குவது அவரது ஆட்சியைப் பலப்படுத்தவும் நாட்டைப் பாதுகாக்கவும் வாய்ப்பாக அமையும் என்றும் இதன் மூலம் 19ஆம் திருத்தம் உட்படப் பல விடயங்களை மாற்றியமைக்க முடியும் என்றும் கூறினார்.

**19ஐ மாற்றியமைக்க வேண்டிய அவசியம்**

19ஆம் திருத்தத்தை மாற்றியமைக்க வேண்டியதன் அவசியத்தை அந்தத் தொலைக்காட்சி நிகழ்ச்சியில் மிகத் தெளிவாக விளக்கியிருந்தார் பசில் ராஜபக்ச. 1978ஆம் ஆண்டில் ஜே.ஆர்.ஜெயவர்த்தனாவால் உருவாக்கப்பட்ட அரசமைப்பில் குறைபாடுகள் இருந்ததாலேயே 19 தடவைகள் மாற்றம் செய்யவேண்டியிருந்திருக்கிறது. ஆனால் புதிய அரசமைப்பு இந்தக் குறைபாடுகளை நிவர்த்தி செய்ததாக அமையவிருக்கிறது என்றும் குறிப்பிட்டார். அதே வேளை 21 மாவட்டங்களில் தாமரை மொட்டுச் சின்னத்தில் பொது ஜன பெரமுன தேர்தலில் களமிறங்கியது (யாழ்ப்பாணம், கிளிநொச்சி தவிர). 70 லட்சம் வாக்குகளை இலகு வாகப் பெறமுடியும்; அதன் மூலம் 150 ஆசனங்களைப் பெற முடியும். 2ஆவது நிலையிலுள்ள எந்தக் கட்சியும் அதன் அரைவாசித் தொகையான 75 ஆசனங்களைக் கூடப் பெறமுடியாது போகும் என்றும் குறிப்பிட்டார். இந்த மூன்றில் இரண்டு அதிகாரத்துக்கான ஆணையை மக்களே வழங்க வேண்டும். மக்களின் ஆணையைப் பெற்ற பின்னர் அதிகாரமிக்க அதிபரிடமிருந்து பறிக்கப்பட்ட அதிகாரங்கள் மீண்டும் சேர்க்கப்படும். முழு நாட்டுக்கும் தேவையான அரசமைப்பு உருவாக்கப்படும். அதன் மூலம் நாட்டின் பாதுகாப்பு உறுதி செய்யப்படும் என்றார்.



பசில் அதன் பிதாமகர்

**உறுதியான இறுதிப் பேச்சு**

தேர்தல் வெற்றிக்கான தனது குடும்பப் பணியை 2 மணி நேரத்துக்குள் தனது நேர்காணலின் மூலம் முடிவுறுத்தியிருந்தார் பசில் ராஜபக்ச. இந்தப் பொதுத் தேர்தலில் தாமரை மொட்டு அதிக ஆசனங்களைப் பெறும் என்ற பசில் ராஜபக்சவின் எதிர்வுகூறலுக்கு ராஜபக்ச குடும்பத்தில் காணப்படும் இறுக்கமான கட்டமைப்பே காரணமாகும். ஆனால் தமிழ் ஊடகங்களில் மகிந்த குடும்பத்துக்குள் பிளவு, விரிசல், அதிருப்தி என்றெல்லாம் எழுதப்பட்டது. இந்த நேர்காணலில் வடக்கு கிழக்கு மாகாணங்களின் வெற்றி அல்லது தோல்வி பற்றி அவர் அலட்டிக் கொண்டதாகத் தெரியவில்லை. ஆனால், தேர்தல் முடிந்ததன் பின்னர் வடக்குக் கிழக்கில் இருந்து வெற்றி பெறும் 5 வேறுபட்ட தரப்பினர் தம்முடன் இணைந்து செயற்படவிருக்கின்றனர் என்று அவர் குறிப்பிட்டார். தேர்தல் பரப்புரைக்குரிய அனுமதிக் காலம் முடிவதற்கு 2 மணி நேரம் இருந்தபோது தனது இறுதி நம்பிக்கையை உறுதிபட மக்கள் மனங்களில் பதியும் வகையில் முன்வைத்திருந்தார் பசில். வடக்கு கிழக்கில் 3 மாவட்டங்களில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வெற்றி பெறும் என்றார்.

தேர்தல் முடிவில் அவர் கூறியது அப்படியே நடந்தது. மொட்டு மூன்றில் இரண்டு பெரும்பான்மையைப் பெற்றது. கூட்டமைப்பு 3 மாவட்டங்களில் மட்டுமே வென்றது. சிங்களவர்களுக்கு ஆள்வதற்கும் சரியாகத் திட்டமிடுவதற்கும் ஏற்ற தலைமைகள் கிடைத்துள்ளன. தமிழர்களுக்கு.....?

# வாழ்க்கையையும் குளிர்விக்கும் வெள்ளரிப் பழம்!



- குமரன் -

நடக்கவே முடியாது தள்ளாடும் வயது. சுருக்கு விழுந்த தோல், வெற்றிலைபாக்குப் போட்டு கறை படிந்த பற்கள். இவை தான் நாகராசாவின் அடையாளங்கள். தள்ளாடும் நிலையிலும் உழைத்தே உண்பேன் என்னும் தற்துணிபில் வாழ்கிறவர்.

"கொஞ்சம் பொறுதம்பி! உதில... பிள்ளையாரைக் கும்பிட்டிட்டு வாறன்.." என்று சொன்னபடி வீதியோரம் அமைக்கப்பட்டிருந்த பிள்ளையார் சிலையை கையெடுத்துக் கும்பிட்டு தனக்கும் தன்னை கொண்டிழுக்கும் காளை மாட்டுக்கும் வீபூதியை பூசிக் கொள்கிறார்.

"கைஹ.. சூ..சூ.." என்றவாறு அந்த வெள்ளரிப்பழங்களை நிரப்பிய வண்டிலை இழுக் கின்ற மாட்டினை அதற்குப் புரிந்த பாசையில் புறப்படுமாறு கட்டளை வழங்க, அந்த மாடும் அவரது சொல்லைக் கேட்டு மெல்ல மெல்ல அசையத் தொடங்கியது. மெது மெதுவாக நடந்தபடியே பேசத் தொடங்கினார்.

வெக்கை காலத்தில் சூட்டைத் தணிக்கும் அருமருந்தான வெள்ளரிப் பழங்களை விற்பதுதான் நாகராசா ஐயாவுக்குத் தொழில். பல ஆண்டுகளாக அவர் இந்தத் தொழிலில் ஈடுபட்டிருப்பதை நான் கண்டிருக்கின் றேன். எனக்குத் தெரிந்தவரை அவருக் குத் தெரிந்த தொழில் இது மட்டும்தான்.

"ஒருத்தரும் இஞ்சால இல்லாம வெளிக்கிடேக்க (1995 யாழ்ப்பாண இடம்பெயர்வு) நாங்கள் குடும்பமா வன்னிக்குப் போனம், அங்க போய் எங்கட சீவியத்துக்காண்டி தோட்டம் தான் செய்தது. அதில வாற காசை வச்சுத்தான் வீட்டுச்செலவுகளை பார்த்தம். அதுக்கு பிறகு சண்டை தொடங்கீட்டுது. பாதை திறந்தமூட்டம், கடவுளே எண்டு எந்தப் பிரச்சினையும் இல்லாமல் ஒருமாதிரி இஞ்சால வந்திட்டம். இஞ்சால வந்து இப்ப இருவது வருசதுக்கு மேல ஆகுது. இஞ்ச வந்தும் தோட்டம்தான் கை குடுத்தது. நாங்கள் இருக்கிறது சங்கு வேலியில, தோட்டம் செய்யிறதுக்கு காணி கிடந்தபடியால யாரிட்டையும் கையேந்தாம தோட்டம் செய்ய தொடங்கினம்."

இந்தத் தள்ளாத வயதிலும் அசையாத அவரது பயணம் தொடர்கின்றது.

"எண்ட குடும்பத்தில என்னையும் மனிசியையும் மூண்டு பிள்ளையளையும் சேர்த்து மொத்தம் 5 பேர். ஐஞ்சு பேரிண்ட செலவுகளையும் நான் ஒருத்தன்தான் பாக்கவேண்டி இருந்திச்சு. பெடியன் ஒருமாதிரி படிச்சு இப்ப மட்டக்களப்பு கம்பஸ் போறான். மற்றது 2 பெம்பிளப்பிள்ளையள் ஒருத்தி வீட்ட இருக்கிறாள், இளையவள் ஏ.எல். படிக்கிறாள். ஒரு மாதிரிப் பிள்ளையள் வளர்ந்திட்டுது. இருந்தாலும் என்னால ஏலும் வரைக்கும் இந்த வியாபாரத்தைக் கைவிடமாட்டன்.." என்றபடி வெள்ளரி பழத்தைச் சுமந்து சென்ற மாட்டினைத் தடவி கொடுத்தார்.

"பாதை திறந்து வந்து முதல் கொஞ்சக்காலம் தனிய நெல்லும் வேற கொஞ்ச காய் கறியளையும் நட்டுத் தான் எண்ட சீவியத்தைப் பார்த்தன். ஓரளவுக்கு சமாளிக்கக் கூடிய மாதிரிக் கிடந்திச்சு. இப்ப ஒரு பத்து வருசமாதான் இந்த வெள்ளரிப்பழ வியாபரம் செய்யிறன். முதல் நெல்லு விதைச்சு அதை அறுத்தாப்பிறகு தான் வெள்ளரி நடுறது. கூட ஆனி மாதத்தில இருந்து ஐப்பசி வரையான காலத்திலதான் இந்த வெள்ளரி நடுறது. ஒருக்கால் நல்லா வரும் ஒருக் கால் நட்டமா போயிடும். ஐஞ்சு பரப்பு, ஆறு பரப்பு காணி கிடக்கு. அதில நாலு முழத்துக்கு ஒரு கொடி நடுறது, கிட்டத்தட்ட 150 - 200 கன்று வரும். அதில விளையிற பழத்துக்கு ஏற்ற போலதான் வியாபாரமும் நடக்கும். கூட இந்த காலங்களில மழை வாறதால பழம் வெடிச்சும் அழுகியும் அழியிறது கூட. இருந்தாலும் ஓரள வெண்டாலும் லாபம் வாற படியால விடாமல் தொடர்ந்து செய்யிறன்"

வாழ்க்கையில் நாகராசா ஐயாவுக்கெனப் பெரும் கனவுகள், எதிர் பார்ப்புகள் எதுவுமில்லை. பிள்ளைகளைப் படிப்பிக்க வேண்டும், பெண் பிள்ளைகளுக்கு நல்ல இடமாகப் பார்த்துத் திருமணம் செய்து வைக்கவேண்டும். வாயுக்கும் வயிறுக்குமாய் கிடைக் கின்ற பணம் இருந்தால் போதும். அவ்வளவுடனேயே மனிசன் சந்தோசமாக வாழப் பழக்கிக்கொண்டு விட்டார்.

"எனக்கிப்ப 64 வயசாகுது. இந்த வயசில என்னால தோட்டம் கொத்தி வாய்க்கால் கட்டி உந்தக் காய்கறி விவசாயம் செய்யிறது சரியான கஸ்டம். ஒரு நாளைக்கு 2,000த்தில இருந்து 4,000, 5,000 எண்டு பழத்தை பொறுத்து இந்த வியாபாரத்தில காசு வரும் எப்பிடிப் பார்த்தாலும் மாட்டிண்டை தீவனம் வீட்டுச்செலவு எண்டு எல்லாம் போனாலும் கையில காசு கொஞ்சம் மிஞ்சும். இதுக்கு மேல என்னட்டை பழம் இல்லாட்டி வெளியில வாங்கித்தான் விக்கிறது அப்பிடி விக்கேக்க பெரிசா எண்டு லாபம் கிடைக் காது. எங்கடை சாப்பாட்டுச்செலவு போக மாட்டுக்கு ஒருநாளைக்கு எட்டுக் கிலோ தவிடு வேணும்.. ஒரு நாள் முழுக்க நடக்கிறது தானே அதுக்காக வெளிக்கிடேக்க 4 கிலோ தவிடு வைக்கிறது. போனாப் பிறகு 4 கிலோ வைக்கிறது.." என்றவாறு நிழல் பரப்பி நின்ற ஆலமரத்தின் கீழ் இளைப்பாற ஒதுங்கினார்.

ஒதுங்கியவர் மீண்டும் மாட்டினை தடவிக்கொடுத்தபடி "என்னைப் போலத்தான் இவனும் சோர்ந்து வயக்கெட்டுப் போய்விட்டான். நாங்கள் வன்னியால வரேக்கே கொண்டந்தது. மாடா உழைக்கிறதெண்டு சில பேர் சொல்லுவினம் அதுக்கு நல்ல உதாரணம் உவன்தான்.." என்கிறார் வாஞ்சையோடு.



"நானும் விடிய நடக்க வெளுக்கிட்டா ஒவ்வொரு இடம் இடமா நிண்டு ஆறுதலா தான் வீட்ட போவன்.. போகேக்க பழம் வித்து முடிஞ்சா வண்டில்ல ஏறிப் போகலாம் இல்லாட்டி நடை தான்.. கால் சரியான கொதிவலி தான் என்ன செய்யிறது உழைச்சாத் தான் காசு எண்டதால இப்பிடி திரியிறன்..

ஒரு பழம் நூறு, நூற்றைம்பது, இருநூறு எண்டு அளவுக்கு ஏத்தமாதிரி விற்பன்.. வெய்யில் காலத்திலதான் விரும்பி வாங்குவினம் எங்கட ஆக்கள். சில பேர் யூஸ் போட்டுக் குடிக்க விருப்பமா வாங்குவினம், சாப்பிடுற ஆக்கள் வாங்கிக் கொண்டு போய் சீனி போட்டு சாப்பிடு வினம். வெள்ளரிப் பழத்துக்கு எண்டு தனி கிராக்கி இருக்குது.."

"இப்ப இர்ண்டு.. மூண்டு நாளா பெஞ்ச மழையில பழங்கள் வெடிச்சு பழுதாப் போய்ச்சு. மிஞ்சினத வைச்சு தான் இப்ப வியாபாரத்துக்கு வந்தன்.. இனி இந்த மழை தொடந்து வந்திச்சு தென்டா வியாபாரம் சொல்லிக்கொண்டில்ல. இது சரியான கஸ்டமான தொழில் என்ன செஞ்சு பேரட்டம் எண்டுபோட்டுத் தொடர்ந்து செய்யிறன், இனி பெடியன் படிச்சு ஒரு உத்தி யோகத் துக்கு வந்தா மெல்ல மெல்ல.. குறைச்சு கொள்ள வேண்டியதுதான்.." என்று எதிர் காலத்தை சிந்தித்தவாறே தனது வியாபரத்தைக் கவனிக்கிறார் அவர்.

## டோனிக்கு ஓய்வே இல்லை



2019ஆம் ஆண்டு உலகக் கோப்பைப் போட்டிக்குப்பின் டோனி கிரிக்கெட் போட்டிகளில் விளையாடத நிலையில் அவர் இந்தியக் கிரிக்கெட் சபையின் ஒப்பந்தத்திலிருந்து நீக்கப்பட்டார். இந்த நிலையில் மகேந்திரசிங் டோனி, 2021, 2022 ஐபிஎல் 20/20 போட்டிகளில் விளையாடுவார் என்று சென்னை சுப்பர் கிங்ஸ் அணியின் தலைமை நிர்வாக அதிகாரி காசி விஸ்வநாதன் நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

எந்தவிதமான கிரிக்கெட் ஆட்டங்களிலும் கடந்த ஓர் ஆண்டுகளாக விளையாடாமல் இருந்து வரும் டோனி, ஐக்கிய அரபு இராட்சியத் தில் அடுத்த மாதம் 19ஆம் திகதி முதல் நவம்பர் 10ஆம் திகதி வரை நடக்கும் ஐ.பி.எல். போட்டியில் விளையாடுவார் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

உலகக் கோப்பைப் போட்டிக்குப்பின் நடந்த மேற்கிந்தியத் தீவுகள் தொடர், ஆஸ்திரேலியத் தொடர், இலங்கையுடனான தொடர், பங்களாதேஷ் தொடர், நியூஸிலாந்து பயணம் என எதிலுமே இந்திய அணி சார்பில் விளையாடவில்லை. இதனால் டோனி ஓய்வு பெறப்போகிறார் என்கிற பேச்சு எழுந்தது.

ஆனால், ஐ.பி.எல். போட்டியில் டோனி விளையாடுவதை வைத்து அவரைத் தேசிய அணியில் சேர்ப்பது செய்யப் படும் என்று பயிற்சியாளர் ரவிசாஸ்திரியும் இந்தியக் கிரிக்கெட் சபைத் தலைவர் சவுரவ் கங்குலியும் ஆக மொத்தத்தில் டோனி இப்போதைக்கு ஓய்வு பெறப்போவதில்லை.

# வினாக்களில் தொங்கும் எமது கல்விப் போக்கு...

பேர் அறிஞன் 04



தேர்வு முடிவுகள் வெளியாகும் ஒவ்வொரு தடவையும் கணிக்கப்படும் புள்ளிவிவரங்களை முன்வைத்தே முன்னேற்றமா, பின்னடைவா என்பது கணிக்கப்படுகிறது. இதுவொரு பருமட்டான குறிகாட்டிதான் என்பதை மறந்து கடந்த காலங்களுடன் ஒப்பீடு செய்து திருப்தியையும் அதிருப்தியையும் வெளிப்படுத்துவது அபத்தமானது. இவ்வாறான முடிவுகளைப் பெறுவோர் தேர்வுத்தாளின் தன்மை, தேர்வு காலச் சூழல் (காலநிலை, பொருளாதார நிலை, அரசியல் மற்றும் சமூக இயக்கம்) சார்ந்த நிலை தேர்வுநாடியில் செலுத்தும் செல்வாக்கு (உடல் உள மாற்றம்) என்பன தொடர்பில் கவனமேதும் செலுத்துவதில்லை.

ஒப்பீட்டிற்காக எடுத்துக்கொண்ட தேர்வு நாடிக் குழு வேறு தற்போதைய குழு வேறு என்பதை அறியாதவர்களோ தனியாள் வேறுபாடுகள் குறித்த அறிவில்லாதவர்களோ அல்லர். ஆனால் ஒவ்வொரு தேர்வு முடிவுகளின்போதும் ஏன் இந்த நடைமுறையையே பின் பற்றுகின்றனர்? பழக்க தோசமா? யாரையும் திருப்திப்படுத்தவா? அல்லது தம்மையும் கல்வியில் அக்கறையுள்ள சமூக சிந்தனையாராகக் காட்டிக்கொள்ளவா?

இந்த விடயம் தொடர்பில் வெளியிடப்படும் தகவல்களின் மறுபக்கம் அல்லது யதார்த்தம் தொடர்பில் சிந்தனையாளர்கள், கல்வியியலாளர்கள், சமூக அக்கறையுடையோர் ஏன் கேள்வியெதையும் எழுப்புவதில்லை என்பது புதிரானது. இவ்வாறான புள்ளி விவரத் தொகுப்புக்களை வெளியிடும் ஊடகங்கள் கூட குறுஞ்சிந்தனையுடன்தான் செயற்பட்டு மாணவர் பரம்பல் சமநிலையைற்றதாக்குவதாகவும் கருத இடமுண்டு.

அதிதிறமைச் சித்திகளைப் பெற்ற மாணவர் விவரத்தை எண்ணிக்கை அடிப்படையில் வெளியிடுவதைத் தவிர்த்து குறித்த பாடசாலையின் விழுக்காட்டில் காட்டலாமே? இதனை எல்லோருமே வசதியாகத் தவிர்த்துக்கொள்கிறோம் என்பதுதான் உண்மை. விழுக்காட்டில் அதிதிறமைச் சித்திகள் பாடசாலைகளுக்கு எதிராகக் காட்டப்படுமானால் பல பிரபலமான பாடசாலைகள் தொடர்பாக இருக்கின்ற விம்பங்கள் சிதறும் என்பது நிச்சயமானது.

காரணம் வடித்தெடுத்துக் குவிக்கப்பட்ட பெருந்தொகையான மாணவருள் கிடைத்த பெறுபேற்றினளவு குறித்த அதிர்ச்சியான முடிவுகள் அந்த ஆய்வுகளில் கிடைக்கப்பெறலாம். இவ்விடத்தில் வெறுமனே எண்ணிக்கையை மட்டும் கொண்டு பாடசாலையை மதிப்பிடுவதன் அபத்தம் வெளிவரும். இவ்விடயம் ஆய்விற்குரியது ஆயினும் கவனிக்கப்படாதிருக்கிறது.

பாடத்திட்டத்திற்கு மீள வருவோம். பொருத்தமான பாடத்திட்டம் தொடர்பான ஆய்வுகள் செய்யப்பட்டு பிரயோக அல்லது கற்பித்தல் நுட்பங்கள் வகுக்கப்படுகின்றனவா? இல்லை என்பதைவிடப் பதில் வேறில்லை. கல்விசார் உயர் கற்கை நிறுவனங்களில் இருக்கின்ற பழைய பாடத்திட்டம் எவ்வாறு புகுத்தப்படலாம் என்பதற்கான போதனையைவிட வேறெதுவும் நடைபெறுவதில்லை. பழைய பாடத்திட்டமாயினும் அது தொடர்பான ஆய்வுகளேதும் மண் சார்ந்து, பிரதேசம் சார்ந்து மேற்கொள்ளப்பட்டிருக்கின்றனவா?

முன்கூறப்பட்டதுபோல இவர்கள் முன்னேற்றகரமான நாடுகள் எனக் கருதிக்கொண்டிருக்கும் நாடுகளில் அவர்கள் தமக்காகத் தமது சூழலில் மேற்கொண்ட ஆய்வுகள், பரிசோதனைகளது அடிப்படையில் தயாரித்துக் கைவிட்ட அல்லது பின்பற்றுகின்ற திட்டங்கள் மற்றும் அதற்கான நுட்பங்களை அப்படியே மொழி மாற்றியோ மாற்றாமலோ தலைகளில் சுமக்கும்வரை சுமந்து அடுத்த்வரிடம் அப்படியே கையளிக்கும் நிலைதான் உள்ளது.

உயர் கற்கைகளுக்காக வழங்கப்படுகின்ற ஆய்வுகள், செயற்றிட்டங்கள் எல்லாமே அதற்குள்ளேயே இருக்குமாறும் பார்த்துக்கொள்ளப்படுகிறது. நெறிப்படுத்தப்படுகிறது. முன்னவர் பாதுகாத்துக் கையளித்ததை அப்படியே அடுத்தவரிடம் கையளிக்கின்ற பொறுப்புணர்வையும் சொல்லித்தந்ததை அப்படியே செய்தோம், செய்கிறோம் என்கின்ற கடமையுணர்ச்சியையும் தவிர வேறேதும் இருக்கிறதா?

சமூகவியல், உளவியல், கல்வியியல், பொருளியல் என்று வகைவகையாக அள்ளி விழுங்கி அந்தரப்படும் ஒரு கூட்டமாகவே இருக்கிறோம் என்பதை மிகக் கவலையுடன் ஏற்கவேண்டிய நிலையே உள்ளது. எமது சிந்தனை மற்றும் திட்டங்களில் அவை எவையுமே சம்மந்தப்படுவதில்லை என்பதும் அவதானிக்க முடிந்தவற்றுள் ஒன்று.

மேலும் அனேகமாக அப்படியான ஆக்கபூர்வமான திட்டங்களேதும் வகுக்கப்பட்டதாகவும் தெரியவில்லை. எங்கோ இடப்பட்ட திட்டங்கள் தொடர்பான சுற்றறிக்கைகளை அடுத்தவரிடம் பாரப்படுத்தி வேலையறிக்கையைப் பெற்று அனுப்புவதோடு தம்பணி முடிவுறுத்தப்படுவதையே அதிகாரிகள் பலரும் விரும்புபவர்களாக உள்ளனர் என்பதும் கவனிக்கத்தக்கதே.

விடயதானம் அதாவது பாடப்பரப்பு ஆக்கும் அதிகாரமெல்லாம் எம்மிடமிருக்கிறதா? என்று சாக்குப்போக்குச் சொல்கிறவர்கள் தமிழ் மொழியும் இலக்கியமும், சைவநெறி மற்றும் பரதநாட்டியம் போன்ற பாடங்கள் பெறுபேற்று ரீதியில் காட்டும் பின்னடைவுக்கு என்ன சொல்லப் போகிறார்கள்? காலத்துக்குக் காலம் இலகுபடுத்தியும் விளைவு போதாதே என்ற ஆதங்கமும் உண்டு.

கற்பிக்கும் பாடத்துறை சார்ந்த ஆசிரியர்கள் சந்தேகக்கண் கொண்டு பார்க்கப்படுகிறார்கள், குற்றவாளிகளும் ஆக்கப்படுகிறார்கள். ஒரு பகுதிக்கான குற்றத்தையும் பழியையும் அவர்கள் ஏற்றேயாகவேண்டும்.

இவ்விடத்தில் மொழித்திறன் மற்றும் பிரயோகம், விழுமியம் மற்றும் பண்பாடுசார் விடயப்பரப்பென்பது பாட நூலிற்குள் அடங்கியிருந்து வினா-விடை மனனச் செயன்முறையால் நிறைவுபடுத்தக்கூடிய ஒன்றல்ல என்கிற உண்மையை முதலில் ஏற்றுக் கொள்ள வேண்டும்.

இவை வாழ்வியலூடாக அன்றாடப் பயில்வாக அனுபவங்களாக இயல்பாக இருப்பதற்கான ஆரோக்கியமான சூழலைத் திட்டமிடலாளர், கல்வியாளர், கல்வி நிர்வாகம், ஆசிரியர்கள், பெற்றோர் மற்றும் தனியார் - தனியாள் கல்விச் செயற்பாடுகள் எல்லாமாகக் கூட்டுச்சேர்ந்துகொண்டு முடக்கியதன் விளைவுதான் அது என்பதே உண்மையாகும்.

சுயதேடல், சுயகற்றல், சுயமீட்டல், சுயமதிப்பீடு என்பன நடைபெற எங்காவது வழிகள் செய்யப்பட்டுள்ளனவா? ஊக்குவிப்புகள் உண்டா? என்பதற்கான யதார்த்தமான பதிலைக் கண்டடைய வேண்டும். கற்பதால் தேர்விற்கு விடையளிக்கமுடியும் உயர் பெறுகளைப் பெறமுடியும் என்பதற்கப்பால் வாழ்விற்கும் உதவும் என்கிற நம்பிக்கையை ஊட்டக்கூடிய நடைமுறைகள் இருக்கின்றனவா?

தற்கொலை, குடும்பப் பிரிவுகள், போதைக்கு அடிமைப்படல், சமூக ஒழுங்கீனங்கள் - வன்முறைகள் போன்ற எல்லோரதும் கவனம் மற்றும் கவலைக் குரிய விடயங்களின் மூலமே மேற்கூறப்பட்ட கேள்விக்கான பதில் இல்லை என்பதுதான். அது மறுக்கவியலாதது. கல்வி என்பதுகூட உள நெருக்கீடுகளுக்கான வழிகோலியாக மாறிவிடக்கூடிய சூழலையும் ஏற்படுத்துகிறோம் என்பதையும் மறுக்க முடியாது.

பரீட்சை அச்சம், பாடசாலைக்கள்ளம், பெறுபெற்றின் பின்னான முறையற்ற முடிவுகள் தொடர்பாக விரிவாக விளக்கவேண்டிய அவசியம் இவ்விடத்தில் இல்லை.

இவ்வாறான சூழலில்தான் புதிதாக எமது கவனத்தைக் கவர்ந்திருக்கிறது தொலைக் (பேசிவழி) கல்வி. இதனது நோக்கம் பாடத்திட்டத்தை வீட்டிலிருந்தே முடித்தல். வேறெதுவும் இருப்பதாகத் தெரியவில்லை. ("சும்மா இருந்தால் சோறாகுமோ வாடா சோமா காலாட்ட" என்கிற செவிவழிக் கூற்று நினைவிற்கு வரலாம்.)

இந்தப் போதனைமுறையிலுள்ள சாதக - பாதக யதார்த்த நிலை எந்தளவிற்கு புரிதலுக்குட்டிருக்கிறது என்பது கவனத்திற்குரியது. அதீத கணனிப் பாவனை மற்றும் தொலைபேசிப் பாவனை கண்களைப் பாதிக்கிறது. நினைவாற்றல் மற்றும் தீர்வு காணுதல் திறன்களில் எதிர்மறையான விளைவுகளை உண்டு பண்ணுகின்றது என்கின்ற ஆய்வு முடிவுகள் தொடர்பில் சிறிதளவேனும் கவனமெடுக்கப்படவில்லை என்றே எண்ணத் தோன்றுகிறது.

இவை நீண்டகால விளைவுகள் எனக்கூறப்பட்டாலும் பல்வேறு விதமாக அனுபவிக்கத் தொடங்கிவிட்டோம் என்பதும் உண்மையே.

(தொடரும்....)



## கப்டன் மார்வெல் 2

ஹொலிவூட்டின் சினிமாக் கலையகமான மார்வெலின் 23ஆவது படமாகக் கடந்த ஆண்டு வெளியான படம் 'கப்டன் மார்வெல்'. ப்ரீ லார்ஸன் நாயகியாக நடித்த இந்தப் படத்தை ஆன்னா போடென், ரயான் ∴ப்ளெக் ஆகியோர் இயக்கியிருந்தனர். மார்வெல் தயாரிப்பில் உருவான முதல் பெண் சுப்பர் ஹீரோ படம் இதுவாக அமைந்தது.

உலகமெங்கும் 1 பில்லியன் அமெரிக்க டொலர்களை வசூலித்தது. இந்த நிலையில் இந்தப் படத்தின் அடுத்த பாகத்துக்கான வேலைகளைத் தொடங்கியுள்ளது மார்வெல் நிறுவனம். ஆனால், இந்தப் படத்தை இயக்கும் பொறுப்பு ஆன்னா போடெனிடமிருந்து தற்போது நியா டாகோஸ்டாவிடம் சென்றுள்ளது.

நியா தற்போது 'கேண்டிமேன்' எனும் படத்தை இயக்கி வருகிறார். இந்தப்படத்தின் வேலைகள் முடிந்ததும் 'கப்டன் மார்வெல் –2' படத்தின் பணிகளைத் தொடங்குவார் என்று கூறப்படுகிறது. இதன்படி நியா டாகோஸ்டா மார்வெலின் நிறுவனத்தின் படத்தை இயக்கும் நான்காவது பெண் ஆவார். இதற்கு முன் 'கப்டன் மார்வெல்', 'ப்ளாக் விடோ', 'தி எடர்னல்ஸ்' ஆகிய படங்களைப் பெண் இயக்குநர்கள் இயக்கியிருந்தனர். மேலும் நியா மார்வெல் படத்தை இயக்கவுள்ள முதல் கறுப்பினப் பெண்மணியும் ஆவார். 2022 ஆம் ஆண்டு ஜூலை மாதம் கப்டன் மார்வெல் 2 திரைக்கு வரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

# சுமந்திரனின் எழுச்சியும் வீழ்ச்சியும்

● ரி.பி.அன்ரன்



அரசியலுக்குள் சுமந்திரன் அழைத்துவரப்பட்டதற்கு ஒரு நோக்கம் இருந்தது என்றாலும் தமிழ் அரசுக் கட்சிக்குள்ளும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்குள்ளும் இருந்த நிலமைகள் அதைத் தாங்கிப் பிடிக்கும்மைய இயங்கு சக்தி என்கிற நிலையை நோக்கி அவரை இழுத்துப் பிடித்தன

மதியாபரணம் ஆபிரகாம் சுமந்திரன் (வயது 56) தமிழ் அரசியல் சர்ச்சைகளின் நாயகன் இப்போது. அவரை அரசியலுக்குள் அழைத்து வந்தபோது அவர் மீது பாய்ச்சப்பட்ட வெளிச்சம் உருவாக்கிய பிம்பத்திற்கு நேர் எதிர்த் திசையில் அவர் திரும்பி நின்றுகொண்டிருக்கிறார்.

2010ஆம் ஆண்டு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினராக தேசியப்பட்டியல் மூலம் நியமனம் செய்யப்பட்டார். சட்ட வல்லுநரான அவர், அரசியல் தீர்வுத் திட்ட முயற்சிகளில் முக்கிய பணியாற்றக்கூடியவர் என்ற கணிப்பின் அடிப்படையில் அழைத்துவரப்பட்டார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் மற்றும் கட்சியில் செல்வாக்குச் செலுத்தக்கூடிய சட்ட வல்லுநர் வட்டாரத்தின் தெரிவாகச் சுமந்திரன் இருந்தார்.

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் தோற்கடிக்கப்பட்டு தனித் தமிழீழக் கோரிக்கை என்பது இனியொரு போதும் சாத்தியமில்லை என்கிற முற்றுமுழுதான முடிவுக்குத் தமிழ் அரசியல் தலைவர்கள் வந்திருந்த காலம் அது. ஒன்றிணைந்த இலங்கைக்குள், பிரிக்கப்பாத இலங்கைக்குள் அரசமைப்பு ஊடாக ஒரு தீர்வைக் காண்பது மட்டுமே நடைமுறையதார்த்தம் என்று அவர்கள் நம்ப வைக்கப்பட்டிருந்த நேரம் அது.

அந்தச் சவாலை எதிர்கொள்வதற்கு சட்ட நுணுக்கம் தெரிந்த, அரசமைப்பு விடயத்தில் காத்திரமாகப் பங்களிக்கக்கூடிய ஒருவர் தமிழ் அரசியல் பரப்புக்குள் தேவையாக இருந்தனர். சுருக்கமாகச் சொன்னால் கூட்டமைப்புக்கு ஒரு நீலன் திருச்செல்வம் தேவைப்பட்டார். அந்தத் தேவைக்காகவே சுமந்திரன் அழைத்து வரப்பட்டார். ஏனெனில் கூட்டமைப்புக்குள் அன்று (இன்றும்கூட) சட்டத்தரணிகள் இருந்தபோதும் அவர்கள் அரசமைப்பு மற்றும் தீர்வு விடயங்களில் வல்லுநர்களாக இருக்கவில்லை. அதனால் சுமந்திரன் அவசியமானார்.

அரசியலுக்குள் சுமந்திரன் அழைத்து வரப்பட்டதற்கு ஒரு நோக்கம் இருந்தது என்றாலும் தமிழ் அரசுக் கட்சிக்குள்ளும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்குள்ளும் இருந்த நிலமைகள் அதைத் தாங்கிப் பிடிக்கும் மைய இயங்கு சக்தி என்கிற நிலையை நோக்கி அவரை இழுத்துப் பிடித்தன.

கூட்டமைப்பின் ஏனைய அரசியல் தலைவர்கள் தமது வாக்கு வங்கி மற்றும் தமது சுய அரசியல் என்கிற அளவில் தமது வட்டத்தைச் சுருக்கிக்கொண்டு நின்றுவிட்டதால் அதற்கு வெளியிலான கட்சியின், இனத்தின் அரசியல் நகர்வுகளை முன்னெடுக்க வேண்டிய பெரும் பொறுப்பு சுமந்திரனது தோள்களில் விழுந்தது.

இந்தப் பொறுப்பு கிட்டத்தட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முழுமையான ஒற்றை முகமாகச் சுமந்திரனை நிறுத்தியது. கூட்டமைப்பின் மிக முக்கிய அரசியல் நகர்வுகள் ஒவ்வொன்றும் சுமந்திரன் வரைந்த பாதைகளின் வழியேதான் நகர்ந்தன அல்லது நகர்த்தப்பட்டன என்கிற ஒரு நிலை ஏற்பட்டது. மகிந்த ஆட்சியுடன் பேச்சுக்களில் ஈடுபடுவது, வெளிநாட்டுத் தூதுவர்களைச் சந்திப்பது, ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபை அதிகாரிகளுடனான தொடர்பாடல்கள், மகிந்த ஆட்சியில் எதிர்க்கட்சிகளுடனான ஊடாட்டம் என்று கூட்டமைப்பின் ஒவ்வொரு அரசியல் நகர்வுகளின் பின்னாலும் நின்ற கிட்டத்தட்ட ஒரே சக்தியாக சுமந்திரன் மாறினார்.

இந்த அரசியல் நடவடிக்கைகள் பலவற்றில் கூட்டமைப்பின் ஏனைய அரசியல்வாதிகள் பலரும்கூட பங்கெடுத்தார்கள் என்கிறபோதும் அவர்கள் எல்லோரும் ஒப்புக்குச் சப்பாணி என்கிற நிலையில்தான் இருந்தார்கள். அவர்கள் இந்த விடயங்களில் எந்தப் பொறுப்புக்களையும் சுமந்திரனோடு பகிர்ந்துகொள்ளவில்லை. ஆனால் அவற்றால் கிடைத்த பெறுபேறுகளுக்குத் தாமும் உரிமைகொண்டாடத் தயங்கவுமில்லை.

> சுமந்திரனின் இந்தப் பிரமாண்டமான அரசியல் வளர்ச்சியை மற்றைய தலைவர்கள் உணரத் தொடங்கிய போது சுமந்திரனுக்கு எதிரான வியூகத்திற்குத் தனித் தனியே அவர்கள் தயாராகி இருந்தார்கள். தமிழ் அரசுக் கட்சிக்குள்ளும் சுமந்திரனுக்கு ஆதரவணி உருவாகியதைப் போலவே எதிர்ப்பும் புகைச்சல் விடத் தொடங்கியது.

### எழுச்சி

சுமந்திரனின் முதல் 5 ஆண்டு கால அரசியல் வாழ்க்கையில் தமிழ்த் தலைவர்கள் எதிர்கொள்ள வேண்டியிருந்தது ராஜபக்சக்கள் என்கிற வகையில் எதிர்ப்பு அரசியலில் இருந்து அவர்கள் விலகவேண்டிய தேவை ஏற்படவில்லை என்பதால் சுமந்திரன் தீர்மானித்த அரசியல் போக்குகள் மற்றைய தலைவர்களைப் பாதிப்பதாக அவர்கள் உணரவில்லை.

ஏனைய தலைவர்களின் இந்த பலவீனமான அணுகுமுறை அல்லது விட்டேத்தியான மனோநிலை சுமந்திரனின் கட்டுப்பாட்டுக்குள் கூட்டமைப்பை முழுமையாகக் கொண்டு வந்தது. அவர் தீர்மானிப்பதுதான் கூட்டமைப்பினதும் ஈழத் தமிழ் இனத்தினதும் தலைவிதி என்கிற நிலையை ஏற்படுத்தியது. மற்றைய தலைவர்களின் இயலாமையை அல்லது செயற்றிறன் அற்ற நிலையை சுமந்திரனும் தனக்கு வசதியாக, வாய்ப்பாகப் பயன்படுத்திக்கொண்டார். கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தனுடன் தனக்கிருந்த நெருக்கம் மற்றும் அவரை அடிக்கடி சந்திக்கக் கிடைக்கும் வாய்ப்பு என்பவற்றால் ஏனைய கட்சிகளின் தலைவர்களை அவர் இலகுவாகக் கடந்துபோனார்.

ஒரு கட்டத்தில் அவர் சொல்வது மட்டுமே கூட்டமைப்புக்குள் நடக்கும் என்கிற நிலை இருந்தது. அவரது நகர்வுகள் அனைத்துமே தலைவர் சம்பந்தனுடனும் சேர்ந்தே எடுக்கப்படும் முடிவுகள் என்கிற தோற்றப்பாட்டை அவர் ஏற்படுத்தியிருந்ததன் காரணமாக கூட்டமைப்புக்குள் இருவர் மட்டுமே முடிவெடுக்கிறார்கள் என்பதாக இது வெளியே விமர்சிக்கப்பட்டாலும் உள்ளே சுமந்திரனின் முடிவுகளை, தீர்மானங்களை, அரசியல் நகர்வுகளை ஆமோதிக்கும் நிலையில் மட்டுமே தலைவர் சம்பந்தன் இருந்தார் என்பதே உண்மை.

கூட்டமைப்புக்குள்ளும் அரசியலிலும் சுமந்திரன் உச்சமடைந்த கால கட்டம் இதுதான். இந்தக் கட்டத்தில்தான் ஆட்சிமாற்றமும் ஏற்பட்டதால் சில காலம் வரைக்கும் இந்த உச்ச நிலை நீடித்தது. கூட்டமைப்பினதும் அதன் பங்காளிக் கட்சிகளினதும் தலைவர்களாக நால்வர் இருந்தபோதும் சுமந்திரனே உத்தியோகபூர்வமற்ற தலைவராகச் செயற்பட்டார்.

அரசியலில் அவர் இந்த உச்சத்தை அடைந்தபோதுதான் அது தமது அரசியலுக்கு ஆபத்தானது என்பதையும் தாங்கள் செல்லாக்காசாகிக் கொண்டிருக்கின்றோம் என்பதையும் ஏனைய தலைவர்கள் புரிந்துகொண்டார்கள். அவர்கள் விழித்துக் கொண்ட நேரம் அவர்களால் அசைக்க முடியாத உயரத்தைச் சுமந்திரன் எட்டியிருந்தார். சுமந்திரன் என்கிற மையத்தைச் சுற்றிய ஓர் அரசியல் போக்கும் ஆதரவாளர்களும் உருவாகியிருந்தனர்.

சுமந்திரனின் இந்தப் பிரமாண்டமான அரசியல் வளர்ச்சியை மற்றைய தலைவர்கள் உணரத் தொடங்கிய போது சுமந்திரனுக்கு எதிரான வியூகத்திற்குத் தனித் தனியே அவர்கள் தயாராகிஇருந்தார்கள். தமிழ் அரசுக் கட்சிக்குள்ளும் சுமந்திரனுக்கு ஆதரவணி உருவாகியதைப் போலவே எதிர்ப்பும் புகைச்சல்விடத் தொடங்கியது.

ஆனால், இந்தச் சிறு எதிர்ப்பால் சுமந்திரன் உற்சாகமடைந்தார் போன்றே தோன்றியது. அதுவரையில் எந்த எதிர்ப்பும் இன்றி, கிட்டத்தட்ட கூட்டமைப்பின் அறிவிக்கப்படாத தலைமை என்கிற நிலைக்கு உயர்ந்த அவருக்கு, இந்தச் சிறு சலசலப்புக்களும் முனங்கல்களும் சில்லறை விளையாட்டாகப் பட்டிருக்கும் போலும். அவர் அந்தச் சிறு பொறியோடு விளையாடத் தொடங்கினார்.

### வீழ்ச்சி

இந்தக் காலப் பகுதியிலேயே கொழும்பில் ஆட்சி மாறியது.மகிந்த அதிகாரக் கட்டில் இருந்து அகற்றப்பட்டார். கூட்டமைப்பின் ஆதரவு, ஆசீர்வாதத்துடன் ஒரு ஆட்சி கொழும்பில் அமர்த்தப்பட்டது. மகிந்த குடும்பத்திற்கு எதிராக வளர்ந்து வந்த உணர்வலையைத் தந்திரோபாயமாகப் பயன்படுத்திக்கொண்டு அதிகாரத்துக்கு வந்தது ரணில் - மைத்திரி - சம்பந்தன் தலைமையிலான கூட்டு. இந்த வெற்றி சுமந்திரன் ஏற்கனவே அடைந்திருந்த உச்சத்தில் ஒரு மணி மகுடமாகத் தரித்தது. 2015 முதல் ஒரு மூன்று வருட காலத்திற்கு அது வடக்கில் மட்டுமல்ல தெற்கிலும் அவரை ஒரு அரசியல் புள்ளியாக உயர்த்தியது.

துர்க்குறியாக, ரணில் மைத்திரி சம்பந்தன் கூட்டின் தவறான போக்கு மற்றும் அணுகு முறை காரணமாக அந்த ஆட்சிக் கட்டு சரிவடையத் தொடங்கியபோது, சுமந்திரனும் பலவீனப்படத் தொடங்கினார். முக்கியமாக அவர் எல்லாத் தரப்புக்களின் எதிர்ப்பையும் சம்பாதித்துக்கொண்டு ஆதரவளித்த புதிய அரசமைப்புக்கான முயற்சிகள் முழுமையடையாது என்கிற நிலை ஏற்பட்டபோது அவரது நிலை மிகவும் பலவீனப்பட்டது.

தமிழரசுக் கட்சிக்குள்ளும் கூட்டமைப்புக்குள்ளும் அவரது இந்த நிலைக்காக ஏங்கிக் கிடந்தவர்கள் வாய்ப்பைப் பயன்படுத்திக்கொண்டனர். இந்தத் தோல்விக்கான முழுக் காரணமும் சுமந்திரன்தான் என்றனர். தமக்கும் புதிய அரசமைப்பு முயற்சிக்கும் தொடர்புகளே இல்லை என்பதைப்போன்று அதைக் கைகழுவிவிட்டுத் தூர நின்றனர். அந்தத் தோல்வி முழுக்க முழுக்க சுமந்திரனது என்று பறைசாற்றினர்.



கட்சிக்குள்ளும் கூட்டமைப்புக்குள்ளும் இப்போது சுமந்திரன் தனித்துவிடப்பட்டார். அவரைச் சுற்றிவளைத்துக் குதற இப்போது அவரது முகாமுக்குள்ளேயே பலரும் தயாராக இருந்தார்கள்.

அவர்கள் மட்டுமல்லர், வெளியே அவரதும் கட்சியினதும் அரசியல் எதிரிகளும் தயாராக நின்றார்கள். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை வீழ்த்த வேண்டுமாயின் சுமந்திரனை வீழ்த்தினால் போதும் என்கிற மைய இலக்கை எதிர்த் தரப்புத் தீர்மானித்துக் கொண்டது.

கட்சிக்குள்ளும் வெளியிலும் பரவிய இந்த எதிர்ப்பலையை வேறு எந்தத் துணையும் இல்லாது எதிர்க்க வேண்டியவரானால் சுமந்திரன். அவரோடு துணைக்கு நின்றவர்கள் அவரது அரசியல் நிழலில் கிடந்தவர்களே தவிர துணைக்கு வரமுடியாத அரசியல் கத்துக்குட்டிகளாக இருந்தமையும் அவர் நம்பியிருந்தவர்களின் சில துரோகங்களும் சுமந்திரனை இன்னும் பலவீனமாக்கின.

சுமந்திரன் அரசியலில் உச்சம் பெற்றபோது அவரே கூட்டமைப்பின் ஒற்றை முகமாக எழுச்சி பெற்றார். அந்த வெற்றியே அவரின் பலவீனமாகவும் மாறியது. அந்த ஒற்றை முகத்தை வீழ்த்திவிட்டால், சரித்துவிட்டால் கூட்டமைப்பை சிதறடித்துவிட முடியும் என்கிற இலகுவான இலக்கை எதிரிகள் நிச்சயித்துக் கொண்டார்கள். விளைவு 2020 பொதுத் தேர்தலில் சுமந்திரன் வெளியிலிருந்து இலக்கு வைக்கப்பட்டார்.

அதேநேரத்தில் இந்த வாய்ப்பைவிட்டால் சுமந்திரனை வீழ்த்திவிட முடியாது என்று கருதியவர்கள் அவரது சொந்தக் கட்சிக்குள்ளும் கூட்டுக்குள்ளும் இருந்தே அவரை வீழ்த்த முயற்சித்தார்கள். அதில் அவர்கள் கணிசமான வெற்றியையும் பெற்றுவிட்டார்கள். அவரைச் சுற்றிலும் பாதகமான (நெகட்டிவிட்டி) சூழலை உருவாக்குவதில் வெற்றி பெற்றார்கள். சசிகலா ரவிராஜின் வெற்றியைத் திருடினார் என்பதைச் கணிசமான மக்கள் நம்புவதற்கான சூழல் இதனால்தான் ஏற்பட்டது.

எல்லாத் தடைகளையும் துரோகங்களையும் தாண்டி பொதுத் தேர்தலில் சுமந்திரன் வெற்றிபெற்றுவிட்டார். அவரால்தான் கூட்டமைப்பு பலவீனப்பட்டது, வீழ்ச்சியடைந்தது என்கிற ஆழமான பதிவை மக்களிடம் இந்தத் தேர்தல் ஏற்படுத்திவிட்டுள்ளதையும் மறுக்கமுடியாது. அதுவே அவரது அரசியல் வீழ்ச்சி.

தமிழரசுக் கட்சியினதும் கூட்டமைப்பினதும் உத்தியோகபூர்வமற்ற தலைவர் போன்று, முடிசூடான மன்னனாக இருந்தவரான சுமந்திரன் கட்சியின் தலைமைப் பதவியை இந்தத் தேர்தலில் தன்னோடு கூட நின்ற சிவஞானம் சிறிதரனுடன் இணைந்து கைப்பற்ற வேண்டிய நகர்வுகளுக்குப் போயிருப்பதே அவரது வீழ்ச்சியின் அடையாளம்தான்.

இனிவரும் காலங்களில் இந்தப் போக்கை மாற்றுவது மிகக் கடினம். தாங்கள் மீண்டும் ஆட்சியைப் பிடிப்பதை ஒரு வருடகாலத்திற்கும் மேலாகத் தாமதிக்கச் செய்தவர்களில் முக்கியமானவராகச் சுமந்திரனைப் பார்க்கும் ராஜபக்சக்கள் ஆட்சியில் சுமந்திரன் மீண்டும் தனது அரசியல் உச்சத்தை எட்டுவதென்பது முயல்கொம்புதான்.

# அரசியலில் பெண் எங்கே?

• ப்ரியமதா பயஸ்









உலகின் முதல் பெண் தலைமை அமைச்சரை உருவாக்கிய நாட்டில் உள்ள 225 உறுப்பினர்களைக் கொண்ட நாடாளுமன்றில் வெறும் 13 பேர்தான் பெண்கள். அவர்களில் ஒருவர் மட்டுமே பெண் அமைச்சர்.

நாடாளுமன்றில் பெண்களின் குறைவான பிரதிநிதித்துவம் அவர்களுடைய பிரச்சினைகளை அரசியல் தளத்தில் விவாதிக்க முடியாத நிலையை ஏற்படுத்தியுள்ளது என்பது நிதர்சனமான உண்மை.

பெண்களுக்கான இட ஒதுக்கீட்டைக் கொண்டுவருவோம் எனக் கூறும் கட்சிகள், தேர்தல் காலங்களில் தங்களுடைய வேட்பாளர் பட்டியலில் பெண்களுக்கு இடம் தருவதே அதிசய நிகழ்வாக இருக்கிறது இலங்கையில், அதுவும் தமிழர் பிரதேசங்களில்.

நாடாளுமன்றத்தில் அதிகமான பெண்கள் இடம் பெறுவது, நல்ல வலுவான மற்றும் பிரதிநிதித்துவம் வாய்ந்த ஜனநாயகம் வேலை செய்கிறது என்று பொருள் என, ஐ.பி.யு. தலைவரும் மெக்சிகோ எம்.பி.யுமான காப்ரியலா குவாஸ் பரோன் வெளியிட்ட அறிக்கை ஒன்றில் தெரிவித்திருந்தார் .

பெண்களின் நாடாளுமன்ற பிரதிநிதித்துவத்தில் ஒரு சிறிய முன்னேற்றத்தை பிரதிபலிக்க முடியும் அதே நேரம், உலகளாவிய பாலின சமத்துவத்தை அடைய, நாம் இன்னும் நீண்ட தூரம் செல்ல வேண்டியும் உள்ளது.

அதனால் தான் நாடாளுமன்றத்தில் பெண்கள் நுழைவதற்கான வாய்ப்பைத் தடுக்கக்கூடிய எந்தவொரு சட்ட தடையையும் அகற்ற, நன்கு வடிவமைக்கப்பட்ட ஒதுக்கீடுகள் மற்றும் தேர்தல் முறைகளை ஏற்றுக்கொள்வதில் அதிகமான அரசியல் விருப்பத்திற்கு நாம் ஒன்று சேர்ந்து உழைக்க வேண்டியுள்ளது.

நாடாளுமன்ற மற்றும் பிரதேச, மாகாண மட்டங்களில் பெண்களுக்கு இட ஒதுக்கீடு வழங்காதது மற்றும் அரசியல் கட்சிகள் பெண்களுக்கு வாய்ப்பு தராததற்கு, பெண்கள் மத்தியில் தேர்தல் அரசியல் குறித்த விழிப்புணர்வு இல்லாததும், குடும்ப ஆதரவு கிடைக்காததும் காரணம். இந்த பாலின வளைவுக்கு குறிப்பிட்ட காரணங்கள் இருப்பதாக, ஆராய்ச்சியாளர்கள் தெரிவிக்கின்றனர்.

ஆண்களை திறமையால் அளவிடும் சமூகம், பெண்களை உடலியல் ஒழுக்கத்தால் அளவிடும் அளவிற்கு தான் பாலின சமத்துவம் குறித்த புரிதல் சமூகத்தில் உள்ளது.

> “எதிர்காலத்தில் அரசியலில் சிறந்து விளங்குவேன் என்று பெண் பிள்ளைகள் யாரும் சிறு வயதில் இலட்சியமாகக் கொள்வதில்லை. ஆண்களும், பெண்களும் சரிவிகித மக்கள் தொகை உள்ள நாட்டில் எவ்வளவு பெண்கள் அரசியலில் இருக்கிறார்கள் என்றால் 5 சதவிதத்துக்கும் குறைவு.”

எதிர்காலத்தில் அரசியலில் சிறந்து விளங்கு வேன் என்று பெண் பிள்ளைகள் யாரும் சிறு வயதில் இலட்சியமாக கொள்வதில்லை. ஆண்களும், பெண்களும் சரிவிகித மக்கள் தொகை உள்ள நாட்டில் எவ்வளவு பெண்கள் அரசியலில் இருக்கிறார்கள் என்றால் 5 சதவீதத்துக்கும் குறைவு.

இந்த விகிதம் தமிழ்ச் சமூகத்தில் இன்னும் குறைவாகவே காணப்படுகின்றது. நடந்து முடிந்த பொதுத் தேர் தலில் பெண்களுக்குக் கொடுக்கப்பட்ட வாய்புகளும், அவர்கள் ஆண்களின் வெற்றிக்குப் பயன்படுத்தப்பட்ட விதமும் நிலமை கவலைக்கிடமானது என்பதை வெளிச்சம் போட்டுக் காட்டுகின்றன.

இந்தத் தேர்தலில் போட்டியிட்ட பெண் வேட்பாளர்களில் பலரும் இன வன்முறையின் விளைவாகத் தமது கணவன்மாரை இழந்தவர்கள். அனுதாப வாக்குகளையும் பெண்களின் வாக்குகளையும் கவர்வதற்காகவே மட்டுமே இவர்கள் வேட்பாளராக்கப்பட்டார்கள் என்று கருதவே சூழல் இடங்கொடுக்கின்றது.

தமக்கான வாக்குகளுக்காக அவர்கள் பெரும் பிரயத்தனப்படத் தேவை இல்லை. விருப்பு வாக்கு கிடைக்கின்றதோ இல்லையோ, கட்சிகளுக்கு அவர்களின் வாக்குகள் இன்றியமையாதவையாகி போனமையால் அவர்கள் கட்சி அரசியலுக்கு மட்டும் பயன்படும் பகடைக் காய்களாக மாறி விடுகின்றனர்.

இந்த நிலைமை மாறவேண்டும் எனில் கண்டிப்பாகப் பெண்கள் விழிப்புணர்வு அடையவேண்டும். குருட்டாம் போக்குத் தனமாகப் பெண்ணை அரசியல் இலாபத்துக்கு மட்டும் பயன்படுத்த எந்த அரசியல் சக்திகளுக்கும் பெண்கள் இடம்கொடுக்கக் கூடாது

இலங்கையின் அனைத்து அரசியல் பிரிவுகளிலும் பெண்களின் பங்களிப்பு என்பது மிக மிக குறைவாகவே காணப் படுகின்றது. அமைச்சரவையிலும், நாடாளுமன்ற உறுப்பினர்களின் தொகையிலும் பெண்களின் பிரதிநித்துவம் என்பது குறைவாக உள்ளது.

வடக்கிலும் கிழக்கிலும் தமிழர் பகுதிகளில் இருந்து ஒரு பெண் நாடாளுமன்ற உறுப்பினர்கூடத் தெரிவாக வில்லை. வெற்றிபெறக் கூடிய, வெற்றிபெற வேண்டிய பெண்கள் களமிறக்கப்படாமை இதற்கான காரணங்களில் முக்கியமானது.

ஏற்கனவே வெற்றி பெற்ற பெண்களுக்கு உரிய இடமும் உரிய மதிப்பும் கிடைக்காததும் ஒரு பெண் வேட்பாளர்கூட இம்முறை வெற்றி பெறாததற்குக் காரணம்.

பெண்களை எடுப்பார் கைப்பிள்ளைகளாக அரசியலில் பயன்படுத்தும் அரசியல் சூழல் எப்போது மாறுகின்றதோ அன்றுதான் தமிழ்ப் பெண்களின் அரசியல் மேம்படும்.

அதுவரை இவர்கள் வெறும் வாக்கு வங்கிகள் மட்டுமே. அனுதாபத்துக்கான வாக்குகளை சேகரிக்க பெண்களை களத்தில் இறக்காமல், அரசியல், சமூக பொறுப்புணர்வுடன் கூடிய சமூக அறிவுள்ள துடிப்பான பெண்களை அரசியலுக்குள் கொண்டுவர தமிழ் கட்சிகள் இனியாவது முன்நிற்கவேண்டும்

## சுள்ளியின் பம்பல்கள்

நண்பரின் மகனுக்கு நீண்டகாலத்தின் பின்னர் அருமையான ஓர் ஆண் குழந்தை பிறந்தது. அதற்கு முன்னாள் பிறந்த 3 பிள்ளைகளும் பெண்கள். அதன் பிறப்புச் சான்றிதழ் பதவிற்காக நண்பர் சுள்ளிராஜாவையும் அழைத்துக்கொண்டு சென்றார். கொஞ்சம் விடயம் தெரிந்தவர் என்பதால் உதவிக்கு இருக்கட்டுமே என்றுதான் அழைத்துச் சென்றார். யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் பிறப்புச் சான்றிதழ் பதிவு செய்யும் இடம் ஒரு சிறிய அறை. அதற்கு வெளியே நின்றிருந்த பலரில் தெரிந்த ஒருவரும் இருந்ததால் அவருடன் பேசிக்கொண்டிருந்த நண்பர், படிவத்தைப் பெற்று நிரப்பும்படி சுள்ளிராஜாவிடம் கேட்டுக் கொண்டார். அவரும் உள்ளே சென்று படிவத்தைப் பெற்றுக் கடகடவென்று நிரப்பி அங்கிருந்த அலுவலரிடம் கொடுத்தார். அதைச் சரிபார்த்த அலுவலருக்கோ மண்டை கிறுகிறுத்துப் போனது. அப்பா - இலங்கைத் தமிழர், அம்மா - இலங்கைத் தமிழர் என்று பதிந்திருந்த சுள்ளி, பிள்ளையின் பெயருக்கு அருகில் மட்டும் சீனாக்காரன் என்று எழுதியிருந்தார். அப்பாவும் அம்மாவும் தமிழர்களாக இருக்கும்போது பிள்ளை மட்டும் எப்படிச் சீனாக்காரன் ஆகமுடியும் என்று கேட்டார் அலுவலர். பத்திரிகையில் அப்படித்தான் போட்டிருந்தது என்றார் சுள்ளி. உலகில் பிறக்கும் ஒவ்வொரு நான்காவது பிள்ளையும் ஒரு சீனன் என்று போட்டிருந்ததாம்.



ஒரு கட்டத்தில் சுள்ளிராஜாவின் பத்தினி தன்னால் எல்லா வேலைகளையும் தனித்தே செய்ய முடியாது என்று அலுத்துக் கொண்டதால் வேலைக்கு ஒரு பெண்ணை அமர்த்திக்கொண்டார் சுள்ளிராஜா.

காலையில் வரும் அந்தப் பெண்ணோ வீட்டைக் கூட்டுதல், பாத்திரங்களைக் கழுவுதல் போன்ற வேலைகளைச் செய்துவிட்டு எஞ்சிய நேரமெல்லாம் கதைப் புத்தகமும் கையுமாக அமர்ந்து விடுவார்.

இதைப் பார்த்த சுள்ளிக்கோ பொறுக்க முடியவில்லை. ஒருநாள் அவர் பார்த்துக்கொண்டிருக்கும்போதே அந்தப் பெண் கதைப் புத்தகத்தோடு வந்தமர்ந்தாள்.

உடனே சுள்ளிராஜா அவளைப் பார்த்து "நீ வெளியே சென்று பூங்கன்றுகளுக்குத் தண்ணீரூற்று" என்றார். அவரை ஒரு மாதிரிப் பார்வை பார்த்த அந்தப் பெண் "வெளியேதான் மழை பெய்கிறதே!" என்றாள். உடனே கோபத்தோடு இரைந்தார் சுள்ளிராஜா, "அதனால் என்ன. ஒரு குடையைப் பிடித்துக்கொண்டு போய் தண்ணீரை ஊற்று!"

## கார்ட்டூன்



## போரிட்டால் வாழ்வு புற முதுகிட்டால் வீழ்வு

**மோகன் சபாபதி**

மழலை இல்லையென்று
சுகமிழந்தோர் எத்தனையோ
நல்ல உணவளித்து
நாலுவித உடைகொடுத்து
வேண்டும் வகை கொடுக்க
முடியாதோர் எத்தனையோ
பள்ளி சென்று பாடம் படித்து
பல்கலையும் பயிலாமல்
பாதியிலே எத்தனையோ
மூத்தோர் சொல் கேட்டு
முன்வழியில் செல்லாது
பாதிவழி மீது பரிதவிப்போர்
- எத்தனையோ
எல்லா சுகம் கிடைத்தும்
வளம் கொழிக்க வாழ்ந்தாலும்
காலம் கடந்தோரை
காத்திடாதோர் எத்தனையோ
வாழ்க்கை கேளிக்கை கூடமல்ல
அது ஒரு போர்க்களம்
போரிட்டால் வாழ்வு
புற முதுகிட்டால் வீழ்வு

---

## தராத இன்பமேதுமில்லை

அம்மாவின் சமையலும்
இல்லாளின் குழையலும்
தராத சுவை ஏதுமில்லை
நிலா ஒளியின் குளுமையும்
தமிழ் மொழியின் செழுமையும்
தராத சுகம் ஏதுமில்லை
காரிகை கொஞ்சலும்
நேரிழைக் கெஞ்சலும்
தராத இன்பமேதுமில்லை
திருக்குறள் வரிகளும்
திருமறை மொழிகளும்
தராத நெறி ஏதுமில்லை
தாய் முலைப் பாலும்
மலர் தரும் தேனும்
தராத ஊட்டம் ஏதுமில்லை
இதனை அறியாமலும்
உண்மை புரியாமலும்
வாழ்பவன் மனிதனில்லை




## இந்த வார சுடோக்கு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | 9 | | | 6 |
| | | | | | 3 | 8 | 5 | 1 |
| | 6 | 2 | | 1 | 5 | | | |
| | | 7 | | | | | 6 | |
| | 2 | 1 | 9 | 7 | 6 | 3 | 8 | |
| | 3 | | | | | 1 | | |
| | | | 4 | 5 | | 9 | 7 | |
| 2 | 5 | 8 | 6 | | | | | |
| 4 | | | 3 | | | | | |

இந்த சுடோக்கு விளையாட்டு தர்க்க ரீதியாக எண்களை ஒரொழுங்கில் அடுக்குவதற்கானது. நேராகவும் கிடையாகவும் 9 பெட்டிகளைக் கொண்டுள்ள இந்தச் சதுரத்தினுள் ஒவ்வொரு சிறிய பெட்டியினுள்ளும் 1 முதல் 9 வரையான ஒரு எண் இடப்பட வேண்டும். பெரிய பெட்டியின் கிடை மற்றும் நேர் வகிடுகளிலும் இரண்டாவது மற்றும் மூன்றாவது நிலைப் பெட்டிகளின் நேர் மற்றும் கிடை வகிடுகளிலும்கூட ஒரு எண் இரட்டிப்பாகக்கூடாது என்பதே விதி. முயற்சி செய்து பாருங்கள். சரியாக நிரப்பி விட்டீர்களானால் அதனை அப்படியே வெட்டி

**செம்மண்**
சுடோக்கு,
**551 A**, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்

என்னும் முகவரிக்கு, உங்கள் முழுப் பெயர், வயது, தபால் முகவரி, தொடர்பு எண் என்பவற்றுடன் அனுப்பி வையுங்கள். சரியாக எழுதி வெற்றிபெறும் ஒரு அதிர்ஷ்டசாலிக்கு ரூபா 250 பரிசாக வழங்கப்படும். விடையும் வெற்றிபெற்றவரின் விவரங்களும் அடுத்தவார பத்திரிகையில் வெளியாகும். வெற்றிபெற்றவர் பரிசுத் தொகையை செம்மண் அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

கடந்த வாரம் வெளியாகிய சுடோக்கிற்கான விடை


| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | 6 | 7 | 5 | 2 | 4 | 9 | 3 | 8 |
| 2 | 3 | 9 | 1 | 7 | 8 | 6 | 5 | 4 |
| 8 | 5 | 4 | 3 | 9 | 6 | 2 | 7 | 1 |
| 6 | 9 | 8 | 7 | 4 | 2 | 3 | 1 | 5 |
| 7 | 2 | 3 | 6 | 1 | 5 | 4 | 8 | 9 |
| 5 | 4 | 1 | 8 | 3 | 9 | 7 | 6 | 2 |
| 3 | 1 | 2 | 4 | 8 | 7 | 5 | 9 | 6 |
| 9 | 7 | 6 | 2 | 5 | 1 | 8 | 4 | 3 |
| 4 | 8 | 5 | 9 | 6 | 3 | 1 | 2 | 7 |

கடந்த வார சுடோக்கிற்கான சரியான விடைகளை எழுதிய வெற்றியாளர்

**த.மோகனரூபன்,** சுழிபுரம் கிழக்கு சுழிபுரம்

# கதைகட்டும் கருணா! களைகட்டும் தேசியப் பட்டியல்!

## அம்பாறை அரசியல்



■ அகீல்

இத்தேர்தலில் தானும் தோற்று தமிழ்க் கூட்டமைப்பையும் தோற்கடித்த பெருமையை முன்னாள் பிரதியமைச்சர் கருணா அம்மான் பெற்றிருக்கிறார்

பொதுத் தேர்தல் பரபரப்பு முடிந்து அமைச்சரவை நியமனமும் நடைபெற்று, எதிர்வரும் 20ஆம் திகதி புதிய நாடாளுமன்றமும் கூடவிருக்கின்றது.

இந்த நிலையில் கிழக்கின் திகாமடுல்ல தேர்தல் மாவட்டமான அம்பாறை மாவட்டத்தின் தேசியப் பட்டியல் விவகாரம் அரசியல் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

### ஆருடம்

தேர்தல் பரப்புரைகள் ஆரம்பமான காலகட்டத்தில் நமது செம்மண் வார இதழின் முதல் இதழிலேயே (18 - 24 ஆடி 2020) திகாமடுல்ல தேர்தல் மாவட்டத்தில் தமிழ் மக்களின் பிரதிநிதித்துவத்திற்கு ஏற்படப்போகும் இழப்புத் தொடர்பான அச்சத்தை வெளிப்படுத்தியிருந்தோம். 'திகாமடுல்ல தேர்தல் மாவட்ட தமிழ் பிரதிநிதித்துவம் பறிபோகுமா? கருணாவின் வருகையால் அச்சம்!' எனும் தலைப்பில் அது சுட்டிக்காட்டப்பட்டிருந்தது.

தமிழர் ஐக்கிய சுதந்திர முன்னணி சார்பில் அகில இலங்கைத் தமிழர் மகா சபை ஊடாக மட்டக்களப்பு மாவட்டத்திலிருந்து அரசியல் வந்தேறு குடியாகத் திகாமடுல்ல மாவட்டத்திற்கு வந்து போட்டியிட்ட முன்னாள் பிரதி அமைச்சர் வினாயகமூர்த்தி முரளீதரன் எனும் கருணாவால் தமிழ் மக்களின் வாக்குகள் சிதறடிக்கப்பட்டு இம்முறை தமிழர் பிரதிநிதித்துவம் அங்கு இழக்கப்பட்டுவிட்டது.

இதனால் 26 வருடங்களின் பின்னர் அம்பாறை மாவட்டத் தமிழ் மக்கள் நாடாளுமன்றப் பிரதிநிதித்துவமின்றி அனாதைகளாக்கப்படும் நிலைக்குத்தள்ளப்பட்டனர்.

"முஸ்லிம்களுக்கு எதிரான இனவாதம்" வெறுப்புப் பேச்சுக்களாலும் ஏதோ தமிழ்ப் பிரதேசங்களை சிங்கப்பூர்போல் வளம் கொழிக்கச் செய்யப்போவதாக விட்ட வாய்ச்சவடால்களாலும் இந்தத் தேர்தலில் அரசியல் இலாபம் தேட முனைந்த கருணாவாலும் அவரை ஆதரித்து நின்றவர்களாலும் வெல்ல முடியவில்லை. ஆனால் அம்பாறையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை வீழ்த்தும் அவர்களின் நோக்கத்தில் வெற்றிபெற முடிந்துள்ளது.

'சும்மா கிடந்த சங்கை ஊதிக் கெடுத்தானாம் ஆண்டி' என்பதற்கேற்ப நாடாளுமன்றப் பிரதிநிதித்துவத்தை இழக்கச் செய்ததற்குப் பின்னர்" கொதிப்படைந்திருக்கும் அம்பாறைத் தமிழ் மக்களை ஆசுவாசப்படுத்துவதற்காகப் புதிய அரசியல் குண்டுகளைப் போடத் தொடங்கியுள்ளனர்.

தேசியப்பட்டியல் கிடைக்கின்றது முழு அமைச்சராகக்கூடவருவார் என்று தோல்வியின் தொடக்கத்தில் கதைகட்டியவர்கள் அதுவும் இல்லையென்றானதும் இப்பொழுது 'கிழக்கின் ஆளுநராக நியமிக்கப்படப்போகிறார்' என்று கதையளக்கத் தொடங்கியுள்ளனர்.

இப்பொழுது தமிழ் மக்கள் எளிதில் ஏமாறும் நிலையிலில்லை என்பதுடன் இலவுகாத்த கிளியின் நிலையிலுள்ளவர்களை நம்பவும் அவர்கள் தயாரில்லை என்பதும் வெளிப்படையாகத் தெரிகின்றது.

### தேசியப்பட்டியல்

26 வருடங்களின் பின்னர் மீண்டும் தமது பிரதிநிதித்துவத்தை இழந்த கையறு நிலைக்கு அம்பாறை மாவட்ட தமிழ் மக்களைத் தள்ளியுள்ள நிலையில் சோகத்தில் மூழ்கியிருந்த அவர்களுக்கு சில தினங்களுக்கு முன்னர் வெளியாகிய கூட்டமைப்பின் தேசியப் பட்டியல் அம்பாறை மாவட்டத்திற்கு என்கிற செய்தி நெஞ்சில் பால் வார்த்தது.

தமிழரசுக் கட்சியின் தலைவருக்கே தெரியாமல் "கூட்டமைப் பிற்குள் அரசியல் சதுரங்கம் ஆடப்பட்ட விவகாரமும்" இந்தச் சதுரங்க ஆட்டத்தின் இலக்கைப் புரியாமல் அறியாமல் அம்பாறை மாவட்டத்தைச் சேர்ந்த கூட்டமைப்பினர் உட்படத் தமிழ் மக்கள் பலிக்கடா ஆக்கப்பட்டுள்ள விவகாரமும் தற்பொழுது பரவலாகக் கிழக்கில் பேசப்பட்டு வருகின்றது

தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்குக் கிடைத்ததோ ஒரேயொரு தேசியப்பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினர்தான். அதையே அம்பாறையைச் சேர்ந்த தவராசா கலையரசனுக்குக் கொடுப்பதாகக் கட்சியின் செயலாளர் அறிவித்தார்.

ஆஹா "அம்பாறை மாவட்ட தமிழ் மக்கள் கொஞ்சம் நிலைகுலைந்தாலும்கூட கூட்டமைப்பிற்குத் (தமிழரசுக் கட்சிக்கு) தம் மீது எத்தனை அக்கறை" பாசப்பிணைப்பு என மகிழ்ச்சிப் பிரவாகத்தில் மக்கள் திளைக்கத் தொடங்கினர்.

ஆடு அடித்து மகிழ்ச்சி அமர்க்களங்களும் இடம்பெறத் தொடங்கிய வேளையில்தான் பாலில் நழுவி விழுந்த பழம் வாய்கெட்டாமல் போய்விடுமோ என்கிற அங்கலாய்ப்பை ஏற்படுத்தும் அந்த அறிவிப்பு வந்தது. அம்பாறைக்குக் கொடுக்கப்பட்ட தேசியப்பட்டியல் நிறுத்தப்பட்டது என்று அது அறிவித்தது. செய்தியும் காட்டுத்தீ போல் பரவத் தொடங்கியது.

தமிழரசுக் கட்சியின் தலைவருக்கே தெரியாமல் "கூட்டமைப்பிற்குள் அரசியல் சதுரங்கம் ஆடப்பட்ட விவகாரமும்" இந்தச் சதுரங்க ஆட்டத்தின் இலக்கைப் புரியாமல் அறியாமல் அம்பாறை மாவட்டத்தைச் சேர்ந்த கூட்டமைப்பினர் உட்படத் தமிழ் மக்கள் பலிக்கடா ஆக்கப்பட்டுள்ள விவகாரமும் தற்பொழுது பரவலாகக் கிழக்கில் பேசப்பட்டு வருகின்றது.

தமிழரசுக் கட்சியின் தலைமையைக் கைப்பற்றுவதற்கான போட்டியில் அம்பாறை மாவட்டம் இதன் மூலம் துருப்புச்சீட்டாகப் பயன்படுத்தப்படுகிறதோ என்கிற அச்சம்கூட ஏற்படுகின்றது. இதனால் தமக்கே நாடாளுமன்றப் பிரதிநிதித்துவம் என்ற அரசிதழ் (வர்த்தமானி) அறிவிப்பால் கிடைக்கப்பெற்ற மகிழ்ச்சியை முழுமையாக அனுபவிக்க முடியாத இக்கட்டு நிலைக்கு அங்குள்ள தமிழ் மக்கள் தள்ளப்பட்டுள்ளனர்.

தனக்கும் அம்பாறை மாவட்டத் தலைமைக்கும் கிடைத்த இந்த வாய்ப்பை விட்டுக் கொடுக்கவோ விலகிக் கொள்ளவோ கலையரசனும் ஒருபோதும் தயாரில்லை என்பது தான் இப்போதைக்கு நிலைப்பாடு.

### மாவட்ட நிலமை

இம்முறை பொதுத் தேர்தலில் 7 ஆசனங்களைக் கொண்ட திகாமடுல்ல மாவட்டத்தில் 4 முஸ்லிம்களும் 3 சிங்களவர்களும் வெற்றியீட்டியுள்ளனர். போட்டி மூலம் தமிழரின் பிரதிநிதித்துவம் மட்டுமே இழக்கப்பட்டிருக்கின்றது.

ஸ்ரீலங்கா பொது ஜன பெரமுன 1,26012 வாக்குகளைப் பெற்று மூன்று ஆசனங்களைக் கைப்பற்றியுள்ளது. இக்கட்சியில் போட்டியிட்ட முன்னாள் அமைச்சர் விமலவீர திசாநாயக்க முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் எச்.எம்.வீரசிங்க மற்றும் மருத்துவர். திலக் ராஜபக்ச ஆகியோர் முறையே கூடிய விருப்பு வாக்குளைப் பெற்று வெற்றியீட்டியுள்ளனர்.

ஐக்கிய மக்கள் சக்தி 1,02,274 வாக்குகளைப் பெற்று இரண்டு ஆசனங்களைக் கைப்பற்றியுள்ளது. இதில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் சார்பில் போட்டியிட்ட முன்னாள் இராஜாங்க அமைச்சர்களான எச்.எம்.எம்.ஹரீஸ் பைசால் காசிம் ஆகியோர் முறையே கூடிய விருப்பு வாக்குகளைப் பெற்று வெற்றியீட்டியுள்ளனர்.

அத்துடன் அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் 43,319 வாக்குகளையும் தேசிய காங்கிரஸ் 38,911 வாக்குகளையும் பெற்று தலா ஒவ்வொரு ஆசனங்களைத் தமதாக்கிக் கொண்டுள்ளன. அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் சார்பில் ஊடகவியலாளர் எம்.எஸ்.எம்.முஷர்ரப் தேசிய காங்கிரஸ் சார்பில் அதன் தலைவரான முன்னாள் அமைச்சர் ஏ. எல்.எம்.அதாஉல்லாஹ் ஆகியோர் வெற்றியீட்டியுள்ளனர்.

### கருணாவின் வரவால்

அதேவேளை கருணா அம்மான் தலைமையிலான தமிழர் மகா சபை 29379 வாக்குகளையும் தமிழ் தேசியக் கூட்டமைப்பு 25,255 வாக்குகளையும் பெற்றுள்ள போதிலும் இவ்விரு கட்சிகளுக்கும் ஆசனம் எதுவும் கிடைக்கவில்லை.


இத்தேர்தலில் தானும் தோற்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பையும் தோற்கடித்த பெருமையை முன்னாள் பிரதியமைச்சர் கருணா அம்மான் பெற்றிருக்கிறார். கருணாவின் இந்த வரவினாலேயே அதாவுல்லாவுக்கு வெற்றிவாய்ப்பு; கிடைத்தது என்பதையும் கவனத்தில் கொள்ள வேண்டும்.

முஸ்லிம்களிடம் இருந்து அம்பாறையை மீட்பார்கள் என்று கூறிக் கொண்டு வந்தவர்கள் முஸ்லிம்களை மேலும் பலப்படுத்துவதற்கு உதவியிருக்கிறார்கள் என்பதுதான் யதார்த்தம்.

அதேவேளை அகில இலங்கை மக்கள் காரங்கிரஸ் முதன் முறையாக திகாமடுல்ல மாவட்டத்தில் ஓர் ஆசனத்தை வென்றுள்ளது. 2015 ஆம் ஆண்டும் பொதுத் தேர்தலில் 33,143 வாக்குகளைப் பெற்றுக் கொண்ட ஆசனம் கிடைக்கவில்லை.

அவ்வாறே இம்முறை தேசிய காங்கிரஸ் முதல் தடவையாகத் தனது குதிரைச் சின்னத்தில் போட்டியிட்டு ஓர் ஆசனத்தைக் கைப்பற்றியிருக்கிறது. கடந்த பொதுத்தேர்தலில் இக்கட்சியின் தலைவர் ஏ. எல்.எம்.அதாஉல்லாஹ் - மஹிந்த ராஜபக்ச தலைவமையிலான ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு சார்பில் போட்டியிட்டுத் தோல்வியடைந்திருந்தார். ■


# தேர்தல் கற்றுக்கொடுத்த பாடங்கள்





பாடம் 1 - கடந்த காலத்திலிருந்து பாடம் கற்றுக்கொள்ளுங்கள்.
பாடம் 2 - அரசியல் பயணத்தில் தோல்வி முடிந்த முடிவு அல்ல.
பாடம் 3 - மக்களின் நம்பிக்கையை வெல்வது முக்கியமானது.
பாடம் 4 - விட்ட தவறையே மீண்டும் விடக்கூடாது.
பாடம் 5 - உறவுகளிலும் அரசியலிலும் குடும்பம் மிக முக்கியம்.
பாடம் 6 - எதிர்தரப்பினரைச் சேர்ந்த விசுவாசிகளை எப்போதும் கைவிட்டு விடக்கூடாது. தேவையான நேரத்தில் கைகொடுப்பவர்கள் அவர்களே.

பாடம் 1 - மேற்கத்தேய அரசியல் சிந்தனைகளைக் கற்றுத்தேர்ந்தாலும் உள்நாட்டு மக்களைக் கவரும் அரசியல் உத்தியையும் கண்டறிந்து அரசியல் செய்ய வேண்டும்.
பாடம் 2 - அகங்காரம், வலிந்த சண்டை, பிடிவாதம், என்பன உங்களை மட்டுமல்ல உங்கள் அணியையும் உங்கள் நிறுவனத்தையும் கூட வீழ்த்திவிடும் அல்லது அழித்து விடும்.
பாடம் 3 - எதிர் அரசியல் அணியிலிருந்து ஒருவரைப் பிரித் தெடுத்துத் தலைவராக்கியபோதே, தனது கூட்டிலிருந்து ஒருவர் விலகித் தனி அணியாகப் பலப்படுவதைத் தடுக்கும் வகையில் செயற்படும் பரந்த மனப்பாங்கை வளர்த்திருக்க வேண்டும்.
பாடம் 4 - மக்களின் நம்பிக்கையை வென்றெடுப்பதற்கு உங்கள் மீதான நம்பகத்தன்மை மற்றும் உங்கள் வெளித் தோற்றப்பாடு (பிரான்ட்) என்பனவும் முக்கி யமானவை.
பாடம் 5 - சரியான ஆளுமைகள் பதவிக்கு அருகில் வந்துவிட்டால் முன்வந்து அவர்களிடம் பதவியைக் கையளித்து கௌரவமாக ஒதுங்கிக்கொள்ள வேண்டும்.



பாடம் 1 - தலையிருக்க வாலை ஆடவிடக்கூடாது.
பாடம் 2 - பேசாமல் இருப்பதும் காலங் கடத்துவதும் எல்லாவற்றுக்கும் எப்போதும் தீர்வாகிவிடாது.
பாடம் 3 - உரிய நேரத்தில் உரிய முடிவுகளை எடுப்பதும் அதிகாரத்தைப் பயன்படுத்துவதும் அவசியம்.
பாடம் 4 - நம்ப நட நம்பி நடவாதே!
பாடம் 5 - பேச்சைக் குறைத்து செயலை அதிகரிக்க வேண்டும்.



பாடம் 1 - சரியான நேரத்தில் முடிவுகளை எடுக்கவேண்டும், அந்த முடிவு சாதகமாக இருக்காது என்று தெரிந்தாலும் சரியான பாதையைத் தேர்ந்தெடுப்பதற்காக அதைச் செய்யும் மனத் தைரியம் இருக்க வேண்டும்.
பாடம் 2 - வெற்றியைத் தேடிய பயணத்தில் வரும் தோல்விகளை எதிர்கொள்ளத் தயங்கக் கூடாது.
பாடம் 3 - தடை எவ்வளவு பெரிதென்றாலும் தாண்டுவதற்கான முயற்சியை நிறுத்தவும்கூடாது ஒத்திவைக்கவும் கூடாது.



பாடம் 1 - எங்கு எதைப் பேசவேண்டும் என்பதும் எங்கு எதைப் பேசக்கூடாது என்பதும் (இடம் பொருள் ஏவல் அறிவது) தெரிந்திருப்பதே கற்றோருக்கு அழகு. மக்களுக்காகப் பிரதிநிதிகளே தவிர பிரதி நிதிகளுக்காக மக்களல்லர்.
பாடம் 2 - வெற்றிக்காக கூட இருப்பவர்களையே பலி கொடுக்கத் தயங்காதது இந்தச் சமூகம் (அபிமன்யூ, அரவான் மாதிரி) தந்திரம் செய்வதானாலும் ராஜதந்திரம் செய்வதானாலும் அதைச் சரியாகச் செய்ய வேண்டும். மாட்டிக்கொண்ட பிறகு மழுப்பக்கூடாது.
பாடம் 3 - உண்மை, நேர்மை, உத்வேகத்திற்கு நிகராக விவேகமும் வேண்டும் அரசியலில்.


## உங்களின் தேவைக்கு நீங்களே பயிரிடுங்கள்!

பண்ணையிலிருந்து திண்ணைக்கு
கற்பகவனம்
Farm to Home
செம்பா
வீட்டு முற்றம்

வீட்டுத்தோட்டத்திற்கு தேவையான கத்தரி, தக்காளி, மிளகாய் நாற்றுக்கள் விற்பனைக்கு உண்டு.

**வீட்டுத்தோட்டத்திற்கு தேவையான விதைகளும் விற்பனைக்கு உண்டு.**
வெண்டி - பால்வெண்டி 10கிராம் 150/=
பயிற்றங்காய் - குரங்குவால் 10கிராம் 100/=
கத்தரி - திருநெல்வேலி ஊதா 10கிராம் 150/=
கீரை 30 - 40கிராம் 100/=
தக்காளி 4கிராம் 200/=
பாகற்காய் - திருநெல்வேலி 10கிராம் 200/=
பச்சைமிளகாய் 5கிராம் 100/=
சோளம் 50கிராம் 120/=
பூசணி 20விதை 200/=
முள்ளங்கி 10கிராம் 100/=
பீற்றூட் 10கிராம் 150/=
முருங்கை - PKM1 15விதை 250/=

வீட்டில் போதிய இடம் இல்லாதவர்களுக்கு Grow Bag வசதி மூலம் மரக்கறிக் கன்றுகள் விநியோகிக்கப்படும்.



மிளகாய் - 200/=
கத்தரி - 250/=
தக்காளி - 250/=
வெண்டி - 250/=

இயற்கையான முறையில் தயாரிக்கப்பட்ட பசளைகள் மற்றும் பூச்சிக் கொல்லிகள் என்பனவும் பெற்றுக்கொள்ளலாம்.





யாழ்ப்பாணம் மாவட்டம் முழுவதும் விநியோகிக்கப்படும்.

நாடு முழுவதும் விநியோகிக்கப்படும்

விநியோக கட்டணம் -
யாழ் மாநகர எல்லை - 50/=
வலிகாமம் - 100/=
தென்மராட்சி - 150/=
வடமராட்சி - 200/=
தீவகம் - 250/=

இலங்கை முழுவதும் தபால் மூலமாகவும் விதைகள் அனுப்பி வைக்கப்படும்

தொடர்புகளுக்கு: - 021 4927782
076 7403814
shop.semba.lk


இவ்விதழ் யாழ்ப்பாணம் இல. 551ஏ, கஸ்தூரியர் வீதியிலுள்ள கிறீன் மீடியா கவுஸ் பிரை. லிமிட்டட் நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 15.08.2020 அன்று வெளியிடப்பட்டது. தொடர்பு: 0214927781